அன்னை டாக்டர்

# சத்தியவாணிமுத்து

மணிவிழா மலர்





# நலிந்தோரின் தலைவி வாழி!

அடுக்கடுக்காக கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட சமுதாயத்தின், எழுச்சிக்காகவும், எல்லோரும் எல்லாமும் பெற்று, இன்புற்று வாழ—தோற்றுவிக்கப்பட்ட திராவிடர் இயக்கத்தில் இணைந்து, இன்னல்கள்—ஏசல்கள்—சட்டத்தின் சீற்றங்கள்—அடக்குமுறைகள்—அத்தனைக்கும் அஞ்சாது தொண்டாற்றிய திராவிடத்தின் தாய்குலத்தின் வரலாற்று நாயகர்களின் பட்டியலில் சிறப்பிடம் பெற்றவர்—டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் என்பதை நாடே நன்கறியும்.

படாதபாடுபட்டு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை ஒன்று திரட்டி, இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றிட அயராது உழைத்தவர்.

அம்மையாரின் 60 ஆண்டு நிறைவு விழா—வைரவிழா—சிறப்பாக நடைபெறுகிறது! அந்த விழாவின் சிறப்பு மலர்தான் உங்கள் கரங்களில் தவழ்கிறது! அது நம் இயக்கத்தின் வரலாற்றில் தொகுக்கப்பட வேண்டிய செய்திகள் கொண்ட மலரும் கூட!

தென்னக மக்கள் எல்லோரும் 'திராவிடர்களே' என்பதை உணர்த்தி, முன்னேற்றப் பாதையில், முற்போக்கு கருத்துகளை எடுத்துரைத்து பகுத்தறிவு மனம் பரப்பி, இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தலைவர்களின் இலட்சியங்கள் வெற்றி பெறவும், சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், சுகம் அனைத்தும் படிப்படியாக பெற்றிட, ஜனநாயக முறையில், வன்முறையற்ற அறவழியில் அண்ணா வழி நின்று இயக்க வரலாற்றினைப் படைத்த பெருமை அம்மையாருக்கு உண்டு.

இம்மலர் எழில்மிக்க சரித்திர ஏடாக குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த 'பாரி அச்சக'த்தாருக்கும், அழகான முகப்பை தீட்டித் தந்த ஓவியர் திரு. R. T. அரசு அவர்களுக்கும், கேட்டதும் தட்டாது உடனுக்குடன் 'பிளாக்கு'கள் செய்து கொடுத்த மாடர்ன் பிராஸஸ் நிறுவனத்துக்கும், மலர் நல்ல முறையில் வெளிவர உதவிய விளம்பரதாரர்களுக்கும், நல்ல யோசனைகளை அளித்து மலர் சிறப்பாக வெளிவர பாடுபட்ட விழாக் குழுவினர் அனைவருக்கும், விழாக் குழுவினரை புன்முறுவலுடன் வரவேற்று ஊக்கமளித்த நல்லவர்களுக்கும், விழா சிறப்பாக அமைய ராக்கட் வேகத்தில் பறந்து, பறந்து குழுவின் முடிவுகளை செயல்படுத்திய செயல் வீரரும், விழாக் குழுவின் செயலாளருமான திரு. சண்முக சுந்தரம் அவர்களுக்கும், ஆக்கபூர்வமான யோசனைகளை அள்ளி வழங்கி, சரியான பாதையில் வழிகாட்டி, விழா சிறப்பாக நடைபெற காரணமாக இருந்த அமைப்பாளர் திரு. வலம்புரிஜான் அவர்களுக்கும், விழாக்குழுவின் சார்பாக நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு—இந்த மலரை படைக்கிறோம்,

**நலிந்தோரின் தலைவி வாழி!**

**இனி மலர் மனத்தை நுகருங்கள்**

—மலர்க்குழு



பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி



புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.

सत्यमेव जयते

CHAIRMAN



RAJYA SABHA
NEW DELHI

January 18, 1983.

On the occasion of the Sixtieth birthday of Dr. (Mrs.) Sathiavani Muthu on February 15, 1983, I wish her many happy returns of the day. It is my prayerful wish that she may be blessed with long life of health and happiness.

I understand that a function will be held on that day to celebrate her birthday. I send my best wishes for the success of the function.

(Sd.)

(M. HIDAYATULLAH)

PRIME MINISTER OFFICE
NEW DELHI-110011

Information Advisr to the Prime Minister

24, December, 1982

The President,

Dr. Tmt. Sathiavani Muthu's
Diamond Jubilee Birthday Celebration Committee
82-A, Anna Nagar,
(Near) Anna Nagar Police Station
Madras-600 102

Dear Sir,

Thank you for your letter of 17th December 1982. She is glad to know that you plan to felicitate Dr. Sathiavani Muthu on her sixtieth birthday.

The Prime Minister wishes success to the meeting. May I add that she has made it a rule not to send messages for publication in sovenir volumes brought out on birthdays of her contemporaries in public life?

Yours sincerely,
(Sd.)
(H. Y. SHARADA PRASAD)

**SHYAM LAL YADAV**
(Deputy Chairman)
RAJYA SABHA

Off : 32, PARLIMENT HOUSE
NEW DELHI
Res : 4, AKBAR ROAD
NEW DELHI

January 4, 1983

# MESSAGE

I am glad to know that a special Diamond Jubilee Birthday Celebration Committee has been formed in Madras to celebrate in a fitting manner the 60th birthday of my esteemed colleague in the Rajya Sabha. Dr. Tmt. Sathiavani Muthu. This obviously reveals the affection the people of Tamil Nadu have for this God's good lady for the remarkable services that she has been rendering all through her life for uplifting the downtrodden and weaker sections of society.

I started watching closely the activities of Dr. Tmt. Sathiavani Muthu ever since she took her seat as a Member of the Rajya Sabha in April 1978. She exhuberates simplicity, sincerity of purpose, devotion and an unassuming personality. She carries a dignified mein and a kind of affectionate smile for everyone. As a true follower of that great leader the lamented Annadurai, she has never hanckered after power or position. But key positions of responsibility came to her unasked' keeping in view of her life-long service to the cause of the poor. She has been a Member of the Tamil Nadu Assembly for 15 years and served for a term of seven years as a Minister in the State's Cabinet.

Her contribution in the Rajya Sabha also derserves praise. All the sections of the House have always appreciaated her work and she has distinguished herself as an eminent Parliamentarian. Today she is ably performing the task as Leader of her Party in the Rajya Sabha. Indeed she is a versatile worker who gives her best with a spirit of loyality, devotion and dedication to matters concerning the progress of our motherland.

On this occasion of the 60th birthday of Dr. Tmt. Sathiavani Muthu, I wish her good health for many more years to serve the cause of the poor tand hat of our country in the same efficient manner she has been doing all along.

(Sd )
SHYAM LAL YADAV

January 9, 1983

Dear Dr. Muthu,

Please accept my felicitations on your birthday. I would like to take this opportunity of wishing you a long and fruitful life devoted to the cause of those teeming and defenceless millions of our country-men who are weighed down by centuries of exploitation and subjugation.

You and your colleagues have, according to your own percept. and ideals, striven to erase the blot of casteism from our nation's life. I consider caste i.e., the concept of birth as the criterion for high and low, to be the greatest single debilitating factor in our nation's life.

This struggle against casteism, begun in earnest by Swami Dayanand Saraswati and carried on by other great men like Dr. Ambedkar and Periyar E. V. Ramaswami is still nowhere near its end. In fact, in the theree decades since independence, the proclivity of the ruling party to use caste as a lever to win votes and clutch to power, has only spread the poison deeper and further. It is precisely because of this that the War against casteism must be constantly renewed and ceaselessly conducted. It is only then that we can dream of uplifting our backward and exploited brethern and of building a society in which merit alone will determine the worth and place of a man in the society, and not any extraneous factor.

With my best wishes.

Yours sincerely

(Sd.)

(CHARAN SING)

Dr. SATYAVANI MUTHU, M.P.

MORARJI DESAI

N. S. Road,
Bombay-400020

19-11-1982

**Dear Sri Venu,**

**Your letter of 13th reached me today. I send my best wishes for the Souvenir you are issuing.**

**Yours sincerely**
**MORARJI DESAI**

Phone : 376555

**Jagjivan Ram**

6, Krishna Menon Marg
New Delhi-110 011

I am happy to learn that Dr. Smt. Sathiavani Muthu will be sixty on 15-2-1983. She has proved her worth as a Legislator and as a State and Central Minister. She has carved out a place for herself among writers also. Dr. Muthu has been a relentless fighter for the cause of the depressed and the oppressed.

I wish all success to the occasion and send all my good wishes for a purposeful long life to her.

(Sd.)
(JAGJIVAN RAM)

DEFENCE MINISTER INDIA
NEW DELHI-110011

January, 20, 1983

## MESSAGE

I am glad to learn that the Dimond Jubilee Birthday of Dr. Tmt. Sathiavani Muthu is to be celebrated on February 15, 1983, As a legislator, writer and Social Worker, Dr. Tmt. Sathiavani Muthu has distinguished herself in the service of the people.

On the auspicious occasion of her Dimond Jubilee Birthday, I wish her continued good health, long life and many more years of useful service to the community and the country.

(Sd.)
(R. VENKATARAMAN)



MINISTER OF INDUSTRY, STEEL & MINES
INDIA
UDYOG BHAVAN, NEW DELHI-110011

January, 22, 1983

Dear Shri Venu,

I am happy to learn that Annai Dr. Tmt. Sathiavani Muthu's Diamond Jubilee Birthday Celebration Committee is going to honour Dr. Tmt. Sathiavani Muthu, Member of Parliment, Rajya Subha, very soon. Her laudable work relating to eradication of untouchability upliftment of the down trodden, patronising orphan children and destitute women is worth emulation. The honour which is being given to such a prominent worker is admirable. I convey my best wishes for the success of the Souvenir to be published at the occasion. Let her live long and let us all pray that she completes a Centenary in the service of the Nation.

Yours sincerely,
(Sd.)
(NARAYAN DATT TIWARI)

Shri A. S. VENU,
President,
Annai Dr. Tmt. Sathiavani Muthu's
Diamond Jubilee Birthday Celebration
Committee, 82-A Anna Nagar,
Madras-600 102.

BHEEKHA BAI, M.P.
LOK SABHA,

Phone No. 384612

Dated the 28th Janualy, 1983.

My dear Mrs. (Dr.) Sathiavani Muthu,

My joy knews no bounds to know that Diamond Jubilee your 61st Birthday Celebration is being celebrated and for this purpose a Special Celebration Committee has been formed. I express my heartiest congratulation on this occasion.

During the last few years since I met you I always found you rundauntless full of zeal and enthusiasm for the cause of the down-trodden committees. I feal great pleasure in recording my deep sense of appreciation of immense good you have done for the upliftment of the downtrodden communities. Madam, you are taking keen interest for the upliftment of the Scheduled Castes and Tribes Communities. There is a burning spirit in your self, which lights the dark homes of the poorest of the poor. The birthday Celebration Committee had rightly taken decision to bring out Souvenir on the 61st Birthday Diamond Jubilee Celebration. They should really be proud of such a vetern social worker.

I pray to the Almighty God to let you have the longivity, co-extensive with happiness, full of peace and prosperity and good health.

With sincere regards,

Your sincerely,
(Sd.)
(BHEEKHA BHAI)

Dr. (Mrs.) SATHIAVANI MUTHU,
Former Union Minister for Social Welfare,
Member of Parliament, (R.S.) New Delhi.

**ஆர். வி. சாமிநாதன்**
MINISTER OF STATE
MINISTRY OF AGRICULTURE

KRISHNA BHAVAN
NEW DELHI-110001

ஜனவரி 20, 1983

டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களின் 60வது பிறந்த தின விழாவை முன்னிட்டு சிறப்பு மலரொன்று வெளிவரவிருக்கும் விவரமறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் நீண்ட காலமாக அரசியலில் ஈடுபாடுடையவர். கட்சிக்காக பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர். தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான அரசியல் தலைவர்களில் ஒருவர். மிகத் தெளிவான அரசியல் ஞானம் படைத்தவர். மத்திய, மாநில அமைச்சரவையில் அங்கம் வகித்து மக்களுக்காக அரும்பாடு பட்டவர். அன்னாரைக் கௌரவிக்கும் பொருட்டு வெளிவரும் மலர் சிறப்புடன் அமையவும் விழா சிறப்புடன் நடைபெறவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் நீண்ட ஆயுளும் திரண்ட சம்பத்தும் பெற்று இனிது இன்புற்று வாழ வாழ்த்துகின்றேன்.

(Sd.)
ஆர். வி. சாமிநாதன்

*செயலாளர்,*
*டாக்டர் சத்தியவாணிமுத்து 60வது பிறந்த தின விழா மலர் குழு,*
*82-ஏ, அண்ணா நகர்,*
*சென்னை-600 102.*

க. இராசாராம், பி.ஏ.,
பேரவைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

51, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை-600 028

10-1-1983



அன்புடையீர்,

டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் மணிவிழா கொண்டாடப்பட இருப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் நின்று, தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து வரும் டாக்டர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தம் பணியினைத் தொடர்ந்திட என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள்
க. இராசாராம்

திரு. எஸ். சண்முகசுந்தரம்,
செயலாளர்,
அன்னை டாக்டர் திருமதி
சத்தியவாணிமுத்து மணிவிழாக் குழு,
82-ஏ, அண்ணா நகர்,
சென்னை-600 102.

டாக்டர் எச். வி ஹண்டே,
சுகாதார அமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

நாள்: 25-9-82

## வாழ்த்துச் செய்தி



தமது ஆற்றலால், அறிவுத்திறனால், சீரிய தொண்டால் திராவிடப் பேரியக்கத்தின் வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுத் திகழ்கின்ற டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் மணிவிழா நடக்க இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

பொதுவாழ்வில் பெண்கள் ஈடுபடுவது அரிதென்று கருதப்பட்ட காலத்தில், அம்மையாரின் அரசியல் வாழ்வு தொடங்கியது. தனது இயக்கத்தின் வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வமும் இன்னல்களுக்கும், இழப்புகளுக்கும் அஞ்சாத மன வலிமையும் அவரை இந்த இயக்கத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக உருவாக்கியிருக்கின்றன. கொள்கை பற்றும், சமுதாயத் தொண்டும இவரிடம் சிறந்து காணப்படுவதால், அரசியலிலும், சமுதாய வாழ்விலும் சிறப்பிடம் இவருக்கு உண்டு.

தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய மக்களின் உரிமைக்குரலில் ஓய்வின்றி ஒலித்து வரும் அம்மையார் அவர்களின் தூய தொண்டு தொடரவும்—குன்றின் மேலிட்ட விளக்கென அவரது புகழ்ஒலி பரவிடவும் உளமாற வாழ்த்துகின்றேன்.

எச். வி ஹண்டே

பெறுநர்

திரு, எஸ். சண்முகசுந்தரம்,
அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து
அவர்களின் மணிவிழாக்குழு
82-ஏ, அண்ணாநகர்,
சென்னை-600 102

செ. அரங்கநாயகம்,
கல்வித்துறை அமைச்சர்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

நாள் : 22-11-1982



## வாழ்த்துச் செய்தி

அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து திராவிட இயக்கத்தொடக்க நாளிலிருந்தே இயக்கத்தில் சேர்ந்து அயராது பாடுபட்டு வருபவர் சமுதாயத்திற்கும் பெருங்கேடு விளைவிக்கும் சாதிக் கொடுமை ஒழிய வாழ்நாளெல்லாம் ஓயாது போராடி வருபவர். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக என்றும் உழைப்பவர். அன்னார் மணிவிழா சிறப்புடன் நடக்க என் நல்வாழ்த்துக்கள். இன்று மணி விழாக காணும் அம்மையார் நூருண்டுக்கும் மேல் வாழ்ந்து நாட்டிற்குத் தொடர்ந்து பணியாற்ற நம் அனைவர் நல் வாழ்த்தும் துணை நிற்குமாக!

செ அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்

பெறுநர் :

அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து,
82-ஏ, அண்ணா நகர்,
சென்னை-600102

**ம. பொ. சிவஞானம்**
**தலைவர்**
**தமிழ்நாடு சட்டமன்ற மேலவை**

**புனித ஜார்ஜ் கோட்டை**
**சென்னை-600 009**

18-8-1982

டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களுக்கு மணிவிழா நடைபெறவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அம்மையார் அவர்களை கால் நூற்றுண்டுக் காலத்திற்கு மேலாக நான் நன்கறிவேன். அவருடைய கணவர் திரு. முத்து அவர்களோடு இளமை முதலே எனக்கு நெருங்கிய பழக்கம் உண்டு.



திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், அண்ணு தமிழக முதல்வராக இருந்த காலத்திலே அமைச்சர் பதவியை ஏற்றபோது, சட்டப் பேரவையிலே அவருடைய வாதத் திறமையையும், நிர்வாகச் சிறப்பையும் நான் நன்கு அறிய முடிந்தது. அப்போது நானும் நான்காண்டுக் காலம் சட்ட மன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தேன். பின்னர், நான் மேலவையில் துணைத் தலைவர் பதவி வகித்தபோதும் அம்மையார் அமைச்சர் பதவியில் நீடித்திருந்தார். அப்போதும் அவர்களுடன் பார்லிமெண்டரி முறையில் பழக நேர்ந்தது. மிகவும் இனிமையான குணமும், பண்பாடும் உடையவர். பொது வாழ்க்கையில் தேவைப்படும் அடக்கமும் எச்சரிக்கையும் அம்மையாரிடம் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நான் சட்டமன்ற மேலவைத் தலைவரான பின்னர், அம்மையார் அந்த அவையின் உறுப்பினராக இருந்தார். அந்த நிலையிலும் அவருடன் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். அவர் நாடாளுமன்றத்திற்குச் சென்றபோது, மேலவையில் எனது வாழ்த்தையும் வழங்கி வழியனுப்பி வைத்தேன்.

அமைச்சர் பதவியைத் துறந்த பின்னர் அம்மையாரின் பொதுவாழ்வில் குறிப்பாக, பார்லிமெண்டரி வாழ்வில்—ஒரு சூனியம் விழுந்தபோது, மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் டில்லி மேலவைக்கு அவரை அனுப்பி, அவருடைய பணிகள் நாட்டிற்குப் பயன்படும்படிச் செய்தார். அவர்களின் எதிர்காலம் இன்னும் சிறந்து விளங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். அம்மையார் அவர்களின் நிறைவாழ்வு வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ம. பொ. சிவஞானம்

**திரு. ஏ. எஸ் வேணு,**
**தலைவர்,**
**அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து**
**மணிவிழாக் குழு,**
82-ஏ, **அண்ணா நகர்,**
**சென்னை**-600 102.

# அரும்பணி ஆற்றிய அம்மையார்

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர்

அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்று, மணிவிழாக் கொண்டாடும் பெரும்பேறு பெற்றுள்ள டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களைப் போற்றிப், பாராட்டி, வரவேற்று, வாழ்த்துவதில் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சிக்கொள்கிறார்கள். அந்த அளவுக்கு டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையாரின் அரசியல் பொதுவாழ்க்கை, திராவிட இயக்கத்தின் சீரிய வரலாற்றோடு ஒன்றிப்போயிருக்கும் ஒன்றாகும்.

அம்மையார் அவர்கள் திராவிட இயக்கத்தில் நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும், குன்றா எழுச்சியும், குறையாத் தொடர்பும் கொண்டு என்றென்றும் பெயரோடும், புகழோடும் விளங்குவதற்கு அடிப்படைக்காரணம், அவரது அருமைக் கணவர் திரு. முத்து அவர்களே ஆவார்கள். இளமைப் பருவக் காலந்தொட்டே திரு. முத்து அவர்கள் பகுத்தறிவு இயக்கத்தினிடத்திலும், பார்ப்பனரல்லாத நீதிக்கட்சியினிடத்திலும் ஆழ்ந்த பற்றுக்கொண்டு அருந்தொண்டு ஆற்றி வந்த காரணத்தினால்தான், திருமணக்காலத்திற்குப்பிறகு அம்மையாரையும் தீவிரமாக அவரால் இயக்கத்தில் ஈடுபடச் செய்ய முடிந்தது. கணவரோடு இணைந்து நின்று இயக்கத்தொண்டு ஆற்றுவதற்கு ஏற்ற அறிவுத்திறனும், பேச்சாற்றல் திறனும், தொண்டாற்றும் திறனும் இருந்த காரணத்தால்தான், அம்மையார் அவர்கள் பொதுவாழ்வில் காலத்திற்குக்காலம் உயர்ந்து, மிகச் சிறந்த ஒரு இடத்தைப் பெறமுடிந்தது. திரு. முத்து அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் பின்னணியில் இருந்துகொண்டு, அம்மையார் அவர்கள் அரசியல் பொதுவாழ்வில் ஆக்கமும், ஊக்கமும் பெற்று உயர பேருதவியாகத்திகழ்ந்தார்.

1945ஆம் ஆண்டிலிருந்து டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையாரின் குடும்பத்தினரை நான் நன்கு அறிவேன். பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொதுத்தொண்டு ஆற்றிப் புகழ்

பெற்ற குடும்பங்களில், டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மை யார் குடும்பமும் ஒன்றாகும்.

அம்மையார் அவர்கள் பகுத்தறிவுத்தந்தை பெரியார் அவர் களின் கொள்கை வழியிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் குறிககோள்வழியிலும் தொடர்ந்து நின்று பாடுபட்டுவருவ தோடு, பெரியாரின் கொளகைமுறை, அறிஞர் அண்ணாவின் செயல்முறை ஆகியவற்றைத் தமமுடைய நடைமுறையாகக் கொண்டு தமிழக ஆட்சிப்பொறுபபை ஏற்று நடத்திவரும் பொன்மனசசெமமல் புரட்சித் தலைவர் அவர்கள்ன் ஆககப் பணிகளுக்குத் துணையாக இருந்து வருகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும்படையில் பங்கு பெற்றுப் பணியாற்றிய பெண்கள் அணியில், அம்மையார் அவர்கள் முன்னணியில் நின்று அருந்தொண்டுகள் பலவும் ஆற்றி வந்தார்கள். பெணபேச்சாளர்களில் சிறந்த ஒருவராகத்திகழ்ந் தார்கள். பெரியாரும் அறிஞர் அண்ணா அவர்களும் தலைமை தாங்கி நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றிலும் கலந்து கொண்டு, கைது செய்யப்பட்டுச் சிறைவாழ்வை ஏற்றவர்கள். அம்மையார் அவர்கள் கருவுற்றிருந்த நிலையிலும், அறப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசெல்ல அஞ்சியதிலலை.

அம்மையார் அவர்கள் இயக்கத்தில் பல்வேறு பொறுப்புக் களை ஏந்தியிருந்ததோடு, சட்டமன்ற உறுப்பினர், மாநில அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மததிய அமைச்சர் போன்ற பொறுப்புகளைத்தாங்கிப்பெருமையோடும்,புகழோடும் திகழ்ந்தவர்கள் ஆவார்கள்.

டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கும், மொழிக்கும், சமுதாயத்திற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் அரும்பணிகள் பல ஆற்றுவார்களாக!

வாழ்க டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார்! வாழ்க பல்லாண்டு! வாழ்கவே!

இராம வீரப்பன்
செய்தி-அறநிலையத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் : 27-11-82



பேரறிஞர் அண்ணா காட்டிய உணர்வுகளை உள்ளத்தில் ஏந்தி, புரட்சித் தலைவர் காட்டுகின்ற பாதையில் நடந்து, திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கும், அதன் இலட்சிய வெற்றிக்கும் தொடர்ந்து பாடுபட்டுவரும் டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையாரின் மணிவிழா நடக்கவிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

"வண்மை, உயர்வு, மனிதர் நலமெல்லாம்,
பெண்மையினால் உண்டென்று பேசவந்த"

பேரியக்கத்தின் தன்னிகரற்ற பெண்மணியாகத் திகழுகின்ற திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார், வாழ்வில் வளமெல்லாம் பெற்று, நலமுடன் வாழ்ந்து, நாட்டுக்குத் தொண்டாற்றிட உளமார வாழ்த்துகின்றேன்.

இராம. வீரப்பன்

பெறுநர் :

தலைவர்,
அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணி
முத்து மணிவிழாக் குழு,
சென்னை.

டாக்டர் காளிமுத்து
வேளாண்மைத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள்: 13-1-83



## வாழ்த்து

அணியமைத்துப் பேரறிஞர்
அண்ணாவின் கரம் வலுக்க
பணிசெய்து பாடுபட்டு
பாசறையை அமைத்திட்டீர்!
பனியென்றும் மழையென்றும்
பலவகையில் துயர் ஏற்றீர்!
மணிவிழாவைக் காணுகின்றீர்
வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்!
அம்மையார்புகழ் விழாமலரில்
அருந்தொண்டுக் கனி பறித்து
எம்முதல்வர் பணிசெழிக்க
உருவாக்கிட வேண்டுகிறேன்!
நம்திராவிட இயக்கந்தான்
நளிந்திடாமல் காத்திடவே
நம்தமிழ்போல் வாழ்கவென்று
நெஞ்சார வாழ்த்துகின்றேன்!

கா. காளிமுத்து

பெறுநர்
திருமதி சத்தியவாணிமுத்து, எம்.பி, அவர்கள,
முன்னாள் மத்திய-மாநில அமைச்சர்,
பிளாட் 3211, அண்ணாநகர்,
சென்னை-600 040.

ச. இராமச்சந்திரன்,
மின் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

நாள் 13-10-82



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் ஊட்டிய உணர்வுகளை உள்ளத்தில் ஏந்தி, அடித்தள மக்களின் ஏற்றத்திற் காகவும் எழுச்சிக்காகவும் பாடுபட்டுவரும் டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களின் மணிவிழா நடக்கவிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

சமுதாயத்தில் பின்னடைந்து கிடக்கும் மக்களின் மேம்பாட்டுக் காக பாடுபட்டுவரும் அம்மையார் அவர்களின் தொண்டு தொடர வும், மணிவிழா சிறக்கவும் உளமாற வாழ்த்துகிறேன்.

அன்பன்

ச. இராமச்சந்திரன்

எஸ். சண்முகசுந்தரம்,
செயலாளர்
அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து
அவர்களின் மணிவிழாக் குழு,
82-ஏ, அண்ணா நகர்,
சென்னை-600 102

சி பொன்னையன்,
கூட்டுறவு, மற்றும்
சட்ட அமைச்சர்.

தலைமைச் செயலகம்.
சென்னை-600 009

நாள் 7-1-1983



## வாழ்த்துச் செய்தி

திராவிட இயக்கத்திற்கு நீண்ட காலமாக பணியாற்றி வரும் அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வைர விழா எடுப்பது சால சிறப்புடையதாகும்.

அம்மையார் அவர்கள் திராவிட மக்களின் மேம்பாட்டிற்குத் தொடர்ந்து உழைத்து மேலும் புகழாரம் ஈட்டி வரலாற்றில் நிலையான இடம் பெறுவார்கள் என நம்புகிறேன்.

அன்பன்,
சி. பொன்னையன்

TMT. GOMATHI SRINIVASAN,
BA.,B.ED.,
MINISTER FOR SOCIAL WELFARE

FORT ST GEORGE
MADRAS-600 009

Dated : 26-11-1982



## வாழ்த்துச் செய்தி

ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களையும் உரிமை உணர்வுகளைக் காத்திட தனது வாழ்வையே போராட்ட மையமாக்கிக் கொண்ட அன்னை சத்தியவாணிமுத்து அவர்களின் மணிவிழா நடக்கவிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

தொடக்கக் காலந்தொட்டு திராவிட இயக்கத்தின் தனிப்பெருந் தலைவர்களின் ஒருவராகத் திகழும் அன்னை சத்தியவாணிமுத்து அவர்களின் மணிவிழா நிகழ்ச்சிகள் அடித்தள மக்களின் அரசியல் எழுச்சிக்கும் வாழ்வு மேம் பாட்டுக்கும் துணை புரியும் வகையில் அமையும் என்று நம்புகிறேன். மாதர் குலத்தின் மணிவிளக்காகத் திகழும் அன்னை பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டுக்கும் சமுதா யத்துக்கும் தொண்டாற்ற மனதார வாழ்த்துகிேன்.

(Sd.)

கோமதி சீனிவாசன்

**கே. பி. செய்குத்தம்பி**
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு முஸ்லிம் லீக்

தொலைபேசி : 26580
சென்னை-600 001

நாள் : 4-2-83



நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவினை யொட்டி மணிவிழாக் காண்பதறிய மட்டற்ற மகிழ்ச்சி.

தொண்டால் சிறந்தோரை மக்கள் மன்றம் என்றுமே மறப்பதில்லை. மாருகப் போற்றும்; புகழும். இதுபோன்ற விழாக்களே அதற்குச் சான்று.

சுயமரியாதை இயக்க காலந்தொட்டு இன்றுவரை கொண்ட கொள்கையில் பிடிப்பாக வாழ்ந்து, பேச்சாலும் எழுத்தாலும் பொதுவாக நாட்டுக்கும் குறிப்பாக தனது சமூகத்திற்கும் சீரிய பணிகளை ஆற்றி வருபவர், அம்மையார் அவர்கள்.

அம்மையார் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிரந்தர புகழையும் நல்க எல்லாம் வல்ல இறையோனின் பேரருட் பெருங்கருணை துணை நிற்குமாக.

அன்பன்
கே. பி. செய்குத்தம்பி



இந்திய குடியரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங்குக்கு மாலை அணிவிக்கிறார்



புரட்சித் தலைவரின் குடும்ப நண்பராக—



இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு பிறந்த
நாளன்று குடும்பத்துடன் சென்று கைத்தறி ஆடை வழங்கி வாழ்தது தெரிவிக்கின்றார்





ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு நக்கீரர் தோரண வாயில் திறந்து வைக்கின்றார்.
உடனிருப்பவர் அமைச்சர் K. A. கிருஷ்ணசாமி அவர்கள்



தந்தை பெரியாருக்கு வெள்ளித் தட்டு பரிசாக அளிக்கிறார்



அண்ணாவின் அமைச்சரவையில் பொறுப்பேற்ற அமைச்சர்களுடன்



குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டி முன்னிலையில் மத்திய காபினெட்
அமைச்சராக பதவிப் பிரமானம் ஏற்கிறார்



பேரறிஞர் அண்ணா புரட்சித் தலைவர் ஆகியோர் வழிநின்று
மத்திய காபினெட் அமைச்சர் பணியாற்றுகிறார்

# தந்தை பெரியார் வாழ்த்து

தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களது 47-வது பிறந்த நாள் விழா மலர் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.



அம்மையார் அவர்கள் சுய மரியாதை இயக்க காலத்திலும், திராவிடர் கழகத்திலும், தீவிரமாகப் பிரச்சாரப் பணிகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு உழைத்தவராவர்.

அந்நாளில் பெண்களில் வெகு சிலர்தான் நமது இயக்கத்தில் ஈடுபட முன் வந்தனர் என்பதில் மிகவும் விரல் விட்டு எண்ணத்தக்க வகையில் தொண்டாற்றியவர்களில் சென்னையில் அம்மையார் அற்றிய பணி சிறப்பானதாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழநாடு அமைச்சரவையில் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றும் சீரிய சுய மரியாதை வீராங்கனையாகிய இவ்வமமையார் தமது தொண்டினைத் தொடர நீண்டகாலம் வாழ வேண்டும் என்று ஆசைப்படுவதுடன், இத்தகைய விழாக்கள் மூலம் இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்துவதையும் கொள்கைகளைப் பரப்புவதையும் நான் பாராட்டி வரவேற்கிறேன்.

ஈ. வெ. ராமசாமி

OM

## SREE RAMA JAYAM

I have great pleasure in offering my felicitations to my beloved sister Shrimathy Sathyavani Muthu Ammaiyar on the occasion of her Mani-Vizha. This is a unique occasion considering the fact that two thirds of her life spanning forty years or more has been spent in the service of the people particularly the oppressed, depressed and suppressed classes of people. What she has done to ameliorate the miserable lot of the downtrodden, what she has done to remove un touchability every man, woman, and child in this part of the country will vouch for.

Her political life and her long years of membership of the State legislatures and of Parliament, she used only to espouse the cause of the helpless and weaker sections of our population. With her natural gifts of oratory and powerful speeches she didn't mince words nor fought shy to cross swords with mighty people in championing all good and noble causes against vested interests.

Shrimathy Sathyavani Muthu Ammaiyar is a gift to this caste ridden Tamilnadu and I fervently wish and pray that she may be spared with long life and good health to serve more and more the people of this glorious land of ours.

(Sd.)
JOTHI VENKATACHALAM
Former Governor of Kerala
5-2-83



CHHEDI LAL, I.A.S. (Retd.),
Former Lt. Governor of Pondichery and
Former Ambassador of Panama

No. B-1/18, Vasant Vihar,
New Delhi-110023.

Dated the 21st January, 1983

Many thanks for your giving me a copy of your Publication "My Agitation". The booklet contains an interesting account of your relentless struggle against a system in our society which, even after 33 years of independence, and after the declaration in the Constitution to abolish untouchability, the so called untouchables still continue to suffer serious handicaps and they are subjected to humiliation and harassment. I have personally watched the efforts you made to emancipate the down-trodden community. I had also had the pleasure of joining you at a function over which you were presiding at Perambur in 1974. I then had the privilege of unveiling the statue Baba Sahib Dr. Ambedkar put up in that prominent area under your guidance and inspiration. I had then noticed your out-spoken-ness about the failure of the administration to protect the rights of the Scheduled Castes and it was soon after this meeting and your outright condemna ion of the unjust treatment meted out to Harijans that you were ousted from the Tamil Nadu Cabinet.

You have narrated the events of your agitation quite well, I hope other selfless members of the community now will take example from your inspiration and fight for their cause fearlessly.

I wish you all success in your continued efforts to better the lot of oppressed, suppressed and exploited sections of society.

Incidently, I may mention for four information that in Marcn last year, I delivered three lectures at Karnataka University, Dharwad, under the auspicious of the University Grants Commission. I had separately sent you a copy of this lecture published by the Karnataka University. In my humble way I had hit at the obnoxious caste system which Hinduism has not been able to banish in spite of its claiming to have effected great changes. The topic of my lectures were (1) Religion and Human Dignity, (2) The hallenge of Social Determinism, (3) Towards a New, More Just and Equalitarian Social Order.

For the purpose of your Souvenir you may edit, change or delete, any portion which may appear to you irrelevant, in this letter.

With all good wishes,

Yours sincerely,
(Sd.)
(CHHEDI LAL)

Mrs. (Dr.) Sathiavani Muthu,
Former Union Minister for Social Welfare,
Member of Parliament,
(Rajya Sabha)
82-A, Anna Nagar,
MADRAS-600 102.

DC-20 1/1/83.

**குமரி அனந்தன்**
**காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்**

தொலைபேசி 447407
40 வெங்கட்நாராயண ரோடு,
தியாகராய நகர்,
சென்னை 600 017

தேதி : 3-2-83

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் 10-1-83-ம் தேதிய கடிதம் கிடைத்தது. தாங்கள் பிப்ரவரி 15-ம் நாள் அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து எம். பி. அவர்களின் பிறந்த 60-ம் ஆண்டு நாளை கொண்டாட இருப்பதைப் பற்றி மிக்க மகிழ்ச்சி. அவர்கள் இன்னும் பல்லாண்டு இனிதே வாழ்ந்து வர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள
குமரி அனந்தன்



தனது அமைச்சரவையிலிருந்து முதல் முதல் அயல்நாடு அனுப்புகிறார்
விமானம புறப்படும் நேரம் நீ புறப்படு என்று அண்ணா வழியனுப்பி வைக்கிறார்



வெளிநாடு (மொரீஷியஸ்) அனுப்பி வைத்த தங்கையை அன்போடு விமானத்தருகில்
சென்று வரவேற்கும் மூத்த அண்ணன் பேரறிஞர் பெருந்தகையுடன்



47வது பிறந்தநாள் விழா



நெடுநாளைய நண்பர்
திருமதி V. N. ஜானகி
ராமச்சந்திரனுடன்



அண்ணா அவர்கள் முதல் 'அன்னை'
இதழினை வெளியிடுகிறார்
முன்னாள் அமைச்சர் K A. மதியழகன்
இதழினை பெறுகிறார்



மத்திய அமைச்சராக டெல்லி சமூக நிலையத்
தில் இலவச கண்ணாடி வழங்குகிறார்



நாவலர் பொன்னுடை போர்த்துகிறார்



பாபு ஜெகஜீவன்ராம் பிறந்த நாளில் பொன்னுடை போர்த்துகிறார்



தாழ்த்தப்பட்டோர் நலஉரிமைக்
கழக மாநாட்டில் தனது படம்
பொறித்த காலண்டரை பரி
சாக பெறுகிறார். மறைந்த
ஜார்ஜ் ஜோமகன், திரு சிவ
சங்கரன், திரு குசேலர்
உடனுள்ளனர்



குஜராத் மாநில குழந்தைகள்
விடுதியில் மத்தியஅமைச்சராக



குஜராத் மாநில ராஜகட்டில்
வெள்ளத்தால் பாதிககப்பட்ட
மக்களை மத்திய அமைச்சராக
சந்தித்தல்

# மணிவிழாக் குழுவினர்



தலைவர், A. S. வேணு, B.A.



செயலாளர், S. ஷண்முகசுந்தரம்



அமைப்பாளர்' வலம்புரி ஜான்



துணை தலைவர், M. A. ஹக்கீம்



பொருளாளர், R. லட்சுமணன்

# மணிவிழாக்குழு உறுப்பினர்கள்



பி ஆனந்தராஜ்



பம்மல் மு. நாகரத்தினம், Ex. M.C.



V. ராமலிங்கம்



K. கந்தசாமி


அன்னையே
நீவிர் வாழ்க!
R.T. ARASU



தி. மு. க செயற்குழு கூட்டத்தில் அம்மையார்




அம்மையார் துவக்கிய மகளிர் மன்றத்தை அண்ணா திறந்து வைக்கிறார்



அம்மையாரின் மணவிழாவின்போது எடுத்த படம்



அம்மையார் தன் குடும்பத்தினருடன்


R.T.ARASU..

# தொண்டால் வளர்ந்த ஓர் தாய்

—ப. உ. சண்முகம்.

திராவிட இன வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைத் தங்கள் உழைப்பால் பெற்றிட்ட தாய்க்குலத்தின் பட்டியலில் சிறப்பான ஓர் இடம் பெற்றவர்தாம் திருமதி சத்தியவாணி முத்து.

மறைந்துவிட்ட மூவாலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருக்கென்று சுயமரியாதை இயக்க வரலாற்றில் தனி இடம் உண்டு! தள்ளாத வயதிலும் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் நமது நெஞ்சங்களிலிருந்து மறையவில்லை. அந்த அம்மையாரைப் பின்பற்றித் துடிப்பான இளம் வயது முதல் இந்த இயக்கத்திற்காகத் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்தாம் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களாவார்கள்.

அவர்களுக்கு 'மணிவிழா'! காலத்தின் கால்கள் ஓடும் வேகத்தை எண்ணினால், வியப்பாக உள்ளது.

மெல்லத்தான் கெடிகாரத்தின் 'பெண்டுலம்' ஆடுகிறது. ஆனால் 'காலண்டரை'ப் பார்க்கும்போது காலத்தின் வேகம் தெரிகிறது.

பெரியாரோடும் பேரறிஞர் அண்ணா அவர்களோடும், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவரோடும் இயக்கப் பணியாற்றுவதில் தமக்கென்று உள்ள தனி பாணியை நிரூபித்துக் காட்டுபவர்தாம் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள்!

பழமைவாதிகளின் பயங்கரமான எதிர்ப்புகள் ஆர்த்தெழுந்த நேரங்களிலெல்லாம் அஞ்சாது பட்டிதொட்டியெல்லாம் சென்று பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தவர்கள்தாம் அம்மையார் அவர்கள்.

சிறைபுக வேண்டிய காலகட்டங்களில் நழுவாது தைரியமாகப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தண்டனையை அனுபவித்தவர்கள்!

சைதாப்பேட்டை 'துணைச் சிறையில்' (சப் ஜெயில்) பேரறிஞர் அண்ணா அவர்களோடு கழகத் தலைவர்களெல்

லாம் அடைக்கப்பட்டிருந்த நேரம்! அப்போது அம்மையாரும் ஓர் 'கைதி'! எவ்வளவு உற்சாகத்தோடு அம்மையார் அவர்கள் எங்களோடு உரையாடிக் கொண்டிருந்தார் என்பதை நினைக்கும்போது பழைய நினைவுகள் பசுமையாகிறது..... உடல் சிலிர்க்கிறது! உள்ளம் குளிர்கிறது!

சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர்கள் சொல்வன்மையால் நாட்டிற்கு அறிமுகமாகி, பெரியாரால் சமூகத் தொண்டு புரிய அழைக்கப்பட்டவர், பேரறிஞர் அண்ணாவால் அரசியலில் நுழைந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் உதவியால் இந்தியத் துணைக் கண்டத்தின் அமைச்சர் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டவர்.

இந்த உயர்வு, அம்மையாரின் உழைப்பிற்குக் கிடைத்த வெகுமதியாகும்!

பொதுக் கூட்டங்களானாலும், மாநாடுகளானாலும், சட்டமன்றமானாலும், மாநிலங்கள் அவையானாலும் தமக்கென்ற தனிமுத்திரை பதிக்கும் ஆற்றல் மிக்கவர்!

போராட்டங்களில் பங்கேற்பதில் சற்றும் சளைக்காதவர். இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது....1962ம் ஆண்டு நடைபெற்ற விலைவாசிப் போராட்டம்...பேரறிஞர் அண்ணா அவர்களோடு வேலூர் சிறையில் இருக்கும் பேற்றை நான் பெற்றிருந்த நேரம்...அம்மையார் சத்தியவாணிமுத்து நிறை கர்ப்பிணி...அந்த நிலையிலும் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு தண்டனை பெற்று, வேலூர் பெண்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார், என்ற செய்தி கேட்ட அறிஞர் அண்ணா அவர்கள் பதறினார்கள்!...அடுத்த நாள் அரசு, அம்மையார் கர்ப்பிணி என்ற காரணத்துக்காக விடுவித்து விட்டது என்ற செய்தி கேட்ட பின்னரே அண்ணா அவர்கள் அமைதி கொண்டார்!

தொண்டாற்றுவதில் அலுப்பு சலிப்பில்லாத அம்மையாரின் உழைப்பு இந்த இயக்கம் உள்ளவரை மறையாது.

அம்மையாரை வாழ்த்த எனக்குத் தகுதி இல்லை! ஆனால் அவர்கள் மேலும் புகழ்ஈட்டி வாழ்வதைக் காண விரும்புகிறேன்.



ஐம்பதாவது ஆண்டு பிறந்த நாள்



மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன்
முதல்வர் அண்ணா கவர்னர் உஜ்ஜல் சிங் முதலியோருடன்



மத்திய அமைச்சராக முன்னாள் தமிழக அமைச்சர் S. மாதவனுடன் தன் அலுவலசத்தில்



சர்வதேச மகளிர் மாநாட்டின் ஆசிய பசிபிக் பொருளாதார சங்க பிராந்திய மாநாட்டிற்கு
தலைமை தாங்குகிறார். திரு சஞ்சீவி ரெட்டி, லூசி மோயர்
ஐக்கிய நாட்டு சபை செயலாளர் ஆகியோருடன்



ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் புரட்சித் தலைவர் அவர்தம் துணைவியார்
திருமதி ஜானகி ராமச்சந்திரனுடன்



சமூக நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டிற்கு மத்திய அமைச்சராக தலைமை தாங்குகிறார்
துணை பிரதமர் சவான், கல்வி அமைச்சர் கரன்சிங் உள்ளார்கள்



மறைந்த முன்னாள்
குடியரசுத் தலைவர்
திரு இராதாகிருட்டிணனை
வணங்குதல்
முன்னாள் அமைச்சர் கோவிந்த
சாமி, மதியழகன், நாவலர்
முதலியோருடன்



மாமியார் திருமதி மாணிக்கம்
அம்மையாருடன்



மறைந்த தன் கணவர்
திரு M. S. முத்துவின்
சமாதிக்கு குடும்பத்துடன்
பூஜை செய்தல்

# அருந்தொண்டாற்றிடும் அம்மையார்

செ. மாதவன்

அன்புடையீர் வணக்கம்

டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களின் மணிவிழா மலர் வெளிவருவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். திராவிட இயக்கத்தில் பல்லாண்டுகளாக தொண்டாற்றி தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருபவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களின்பால் அன்பு காட்டி அவர்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களின் வழிநடந்து அறிஞர் அண்ணா அவர்களின் அணியில் நின்று தமிழகத்தின் உரிமைகளுக்காகப் பாடுபட்டு வந்தவர்கள். தமிழகத்தின் அமைச்சர் அவையில் இடம் பெற்று அறிவுத் தெளிவுடனும், ஆற்றல் திறனுடம் செயல்பட்டு சிறப்படைந்தார்கள். திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர் மத்திய அமைச்சர் அவையில் இடம்பெற்றுர்கள் என்ற செய்தி சரித்திர நிகழ்ச்சியாகும். அந்தச் சரித்திர நிகழ்ச்சியின் தலைவியாக விளங்கியவர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள்.

மத்திய அமைச்சராக அமர்ந்திருக்கும் காட்சியைக் காணும் வாய்ப்பை நான் பெற்றேன். அறிஞர் அண்ணாவின் அணியில் தொண்டாற்றிய ஒருவர் இந்திய நாட்டை யாளும் அமைச்சராக அமர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்ந்தேன். திராவிட இயக்கத்தின் மக்கள் சக்தியைத் தமிழ் மண்ணில் காணும் இந்நாட்களில் திராவிட இயக்கத்திற்கு அருந்தொண்டு ஆற்றிய அம்மையாரின் மணிவிழா எடுப்பது சாலச்சிறந்த நிகழ்ச்சியாகும். அவர்கள் தொண்டு தொடர்ந்திட எனது வாழ்த்துக்களையும் இணைத்திடுவதில் பெருமைகொள்கிறேன்.

# மாதர்குல மாணிக்கம் டாக்டர் சத்தியவாணிமுத்து

டாக்டர் எச்.வி.ஹண்டே

மாபெரும் மனிதரின் சிந்தனை சமுக நோக்கத்தின் வேகத்தால் உந்தப்படவேண்டும். சமூகத்தை தூய்மைப் படுத்துகின்றவராக அவர் விளங்க வேண்டும.

ஆமைகளாய், ஊமைகளாய் அடங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி அவர்களின் அரசியல் ஜனநாயக மேம்பாட்டுக்கு வழிவகுத்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தெரிவித்த கருத்து இதுவாகும்.

தான் கற்ற கல்வியையும், பெற்ற அறிவையும் பின்னடைந்த சமுதாயத்தின் நலனுக்காக பயன்படுத்தி, நாட்டு மக்கள் நெஞ்சில் இடம் பெற்று வாழுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த இலக்கணத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் திகழுகின்றார்,

புரட்சித் தலைவர் பாசறையில் தகுதி மிக்க தளநாயர்களில் ஒருவராகஅம்மையார் திராவிட இயக்கத்தின் அடித்தளம் அமைத்த வேளையில் அதில் இணைந்துக்கொண்டு அதன் வளர்ச்சிக்காக உழைத்த ஒப்பற்ற தலைவர்களில் ஒருவராக இருக்கின்றார், இளம் வயதிலேயே இந்த இயக்கத்தில் சேர்ந்து பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பாராட்டுகின்ற வகையில் சமுகப் பணியாற்றிய டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் தமது ஆற்றலால் அறிவுத்திறனால். தன்னலமற்ற சேவையால் படிப்படியாக வளர்ந்து கட்சியிலும், ஆட்சியிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்து அனைவரும் போற்றக்கூடிய நிலையினைப் பெற்றிருக்கிறார்கள்.

பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவது அரிது என்று கருதப்பட்ட காலத்தில் அவரது அரசியல் வாழ்வு தொடங்கியது அரசியலை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்த இயக்கங்களில் இணைத்துக் கொள்வதில் பெருமை இருப்பதாகக் கருதப்பட்ட காலத்தில், சமுதாயச் சீர்திருத்தம, பெண்கள் விடுதலை, அடித்தள மக்களின் அரசியல் எழுச்சி, தாய்மொழியை வளர்த்து தன் மானம் பேணுதல் போன்ற லட்சியங்களை உயிர்மூச்சாகக் கொண்டிருந்த இயக்கத்தில் அம்மையார் அவர்கள் தன்னை இணைத்துக் கொண்டார். உன்னத லட்சிங்களை ஏற்றுக்கொண்டவர்கள் அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சுவதில்லை'' என்ற கருத்துக்கேற்ப இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் அஞ்சாத மன வலிமையுடன் அவர் போராட்டக் களங்களில் நின்ற ககலம் உண்டு.

பேரறிஞர் அண்ணாவின் இயக்கத்தின் முன்னணித் தலைவராகவும் திகழும் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளராகத் திகழுகின்றார்கள். சிறந்த மேடைப் பேச்சசாளராகத் திகழ்ந்தவர்களை வெள்ளி நாக்கோடு பிறந்தவர்கள்'' என்று வர்ணிப்பார்கள் அவர் வெள்ளி நாக்கோடு பிறக்காவிட்டாலும், மாற்றாரின் கண்டன கணைகளை வீழ்த்துகின்ற வகையில் அடித்தள மக்கள் தட்டி எழுப்பி தன் மானக் கிளர்ச்சிக்கு அவர்களை தயார் படுத்துகின்ற விதத்தில் பேசுகின்ற வலிமை படைத்த பேச்சாளராக அவர் திகழுகின்றார். திருமண மேடையில் மணமகளாக நின்ற போது ''நீதான் நன்றி கூறவேண்டுமென்று'' தகப்பனார் இட்ட கட்டளையை தயக்கத்துடன் ஏற்று''இளங்கன்று பயம் அறியாது'' என்ற கருத்துக்கொப்ப நன்றியுரை ஆற்றி அனைவரும் பாராட்டுகின்ற வகையில் அவருடைய முதல் மேடைப் பேச்சு அமைந்தது.

டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்து நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள தொண்டு மகத்தானதாகும், பேரறிஞர் அண்ணா அலர்கள் முதலமைச்சராக அருந்த நேரத்தில் உருவாக்கப்பட்ட கலப்புத் திருமணத்திற்கு பரிசு தருதல், சுயமரியாதைத் திருமணத்திற்கு வட்ட வடிவம் தருதல் போன்ற திட்டங்கள் இவருடைய எண்ணதில் உதித்தது என்று சொன்னால் மிகையாகாது, திராவிட இயக்கத்தின் சார்பில் மத்திய அரசில் அமைச்சராக இருந்து வரலாறு படைத்த பெருமை அவருக்குண்டு.

எந்த இடத்தில் இருந்தாலும் எந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும் சமுதாயத்தில் நசுககசுபடட்டுவருகின்ற மக்களுக்காக குரல் கொடுக்க அவர் தயங்குவது இல்லை. ''நான் பிறந்து வளர்ந்த எனதருமை சமுதாயத்தின் கேடுகளை களைய என்னால் முடியவில்லை என்று சொல்லால் என்னை நானே அழித்துக்கொள்வேன்'' என்று சூளுரைத்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற மக்களின் சோபித வாழ்வுக்காக பாடுபட்டு வருகின்றார்கள். ''நமது தனி நலனுக்கும். சமுதாயத்தின் பொதுநலனுக்கும் போட்டி வருமேயானால் நமது தனி நலனை பின்னுக்கு நிறுத்தி, சமுதாய நலனை முன்னுக்கு நிறுத்தவேண்டும்'' என்று அறிவுறுத்திய பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் செயலாற்றி வருகின்ற டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் மணிவிழா காணவிருப்பது மகிழ்ச்சிக் குரியது. பெரியார், அண்ணா ஊட்டிய உணர்வுகளை உள்ளத்தில் ஏந்தி புரட்சித் தலைவரின் கரம்பற்றி நடந்துதமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு அயராது தொண்டாற்றி வருகின்ற அம்மையாரின் தொண்டு தொடர உளமாற வாழ்த்துகிறேன்,



# அண்ணாவின் தங்கை

**இரா. சனார்த்தனம்**

திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களது மணிவிழா திராவிட சமுதாயம் மகிழும் திருவிழா. அவர்கள் 40 ஆண்டு கால பொது வாழ்க்கைப்பணி-தாம் அனைவரும் எண்ணிப் பெருமைப்படுவதாகும்.

அவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்ட ஆரம்ப நாட்கள், அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு என்று கன்னியரின் கல்வி கண் கட்டப்பட்டிருந்த நேரம்! அரசியலில் ஆடவர்மட்டுமே ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த காலம்? சீர்திருத்தக் கருத்துக்கள் என்றால் ஆத்திகர்கள், ஆத்திரப்பட்டு செயல்பட்ட வேளை! கல்லடியும், சொல்லடியும் தாங்கி மேடையே வேண்டிய சமயம்! வளைவுகள் வரவேற்புகள் இன்றி செறுப்புத் தோரணங்கள் சாணி வீச்சு, காதில் விழும்படியான வசைகள்! குடும்பத்தையே கேவலப்படுத்தும் தன்மை!

அத்தகைய சூழ்நிலையில் நற்பணியாக காராக்கிரகம்சென்று செழியனுடன் திரும்பிய செந்தமிழ்க்காக வாதாடிய, இந்தியப்பேயை விரட்டி போர்க்கோலம்பூண்ட வீராங்கனை!

ஐயா அவர்களாலும், அண்ணா அவர்களாலும் பாராட்டப்பெற்ற அன்னையார் அவர்கள் அறுபது வயதிலும் அயராது ஆற்றும்அரசியல் பணி தாய்குலம் எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்!

பட்டங்களை சூழ்வதும் சட்டங்கள் செய்யவும், பாரினில் பெண்கள் நடத்தி வந்தோம் என்று கவிஞனின் உரைக்கு ஏற்ப சட்டமன்றம், தமிழக மேலவை, மத்திய மேலவை அங்கம் வகித்தும் அல்லாமல் தமிழகத்திலும், மத்திய அமைச்சரவையிலும் அங்கம் வகித்ததோடு, திராவிட பாரம்பரியத்தில் வந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்ற முதல் தமிழ் பெண் என்று பெருமைக்குரிய அம்மையாருக்கு என் இனிய வாழ்த்துக்கள்.



G. K. MOOPANAR, M. P.
*General Secretary*
ALL INDIA CONGRESS COMMITTEE

24, AKBAR ROAD,
NEW DELHI-110011

6-12-1982

அன்புடையீர்,

வணக்கம். தங்களுடைய 30-10-82 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். திருமதி சத்தியவாணிமுத்து எம்.பி. அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும். சமுதாயத் திற்கும் செய்துள்ள சேவைகள் மிகவும் பாராட்டுதற்குரிய தாகும். அவர்களுடைய சேவை மேன் மேலும் தொடரவும், அவர்கள் வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெற்று பல்லாண்டு வாழவும், எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மலர் சிறப்புடன் நடைபெறவும், விழா இனிது நடை பெறவும் என் நிறைவான நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள
(Sd.)
ஜி. கே. மூப்பனர்

திரு. எஸ். சண்முகசுந்தரம்,
செயலாளர்,
அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து
அவர்களின் மணிவிழாக்குழு,
சென்னை-600102.

M. BHAKTAVATSALAM
Former Chief Minister

48, Warren Road,
MADRAS-600004

24—9—82

அன்புள்ள சண்முக சுந்தரம் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. நன்று. சகோதரி சத்தியவாணிமுத்து அவர்களுக்கு மணிவிழா நடை பெறுவதுபற்றி மகிழ்ச்சி. அவர் பல்லாண்டுகள் குறை யற்ற வாழ்க்கை வாழ இறைவனை வேண்டி என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

எம். பக்தவத்சலம்

## கவியரசு கண்ணதாசன் வாழ்த்து

மன்னிய அன்பும் நல்ல
மதிமிகுத் திறனும் பண்டை(த்)

தென்னவர் பண்பும் ஆட்சி(த்)
திறமையும் ஒன்றாய்ச் சேர்ந்து

அன்னையின் வடிவ மாக
அமைந்ததைக் கண்டோம் என்றும்

தன்னலங் கருதா அன்னை
சத்தியவாணி வாழ்க!

E V. K SULOCHANA SAMPATH

Chairman,

Tamil Nadu Slum Clearance Board.

5, Kamarajar Salai,

Chepauk,

Madras-600 005.

Phone : Off 844732

Res 34875



அன்புடையீர் !

டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களின் மணிவிழா 15-2-83 அன்று நடைபெற இருப்பது அறிந்து உள்ளபடியே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அம்மையாரவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டும் தாய் மொழிக்காக அவர் ஈடுபட்ட போராட்டங்களும் என்னென்றும் நினைவு கூறத்தக்கனவையாகும்.

அம்மையாரவர்கள் பல்லாண்டு நலமுடன் வாழ எனது நல் வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள

ஈ. வெ. கி. சுலோசனா சம்பத்

திரு. எஸ். சண்முகசுந்தரம்,

செயலாளர்,

அன்னை டாக்டர் திருமதி

சத்தியவாணிமுத்து மணிவிழாக் குழு,

82-ஏ, அண்ணா நகர்,

சென்னை-600 102.

# வாழ்ந்த போதே-அம்மா நீங்கள் வரலாறு ஆனீர்கள்

வலம்புரி ஜான்

**ஆசிரியர், 'தாய்' வார இதழ்**

அன்னை சத்தியவாணிமுத்து அவர்களுக்கு அறுபதாவது பிறந்தநாள் வருகிறது என்பதில் அகமகிழ்ச்சி அடைகிறேன்.

மாணிக்கத் தாயாருக்கு மணிவிழா வருவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி.

அரும்பெரும் தலைவர்கள் என்று அறிஞர் அண்ணாவால் போற்றப்பட்ட புகழ்மிக்க தலைவர்களில் பெண் குலத்தின் பெரு விளக்காக-நந்தா விளக்காக-நாயகமாக-நம்மத்தியிலே வாழ்கிறவர்கள் அன்னை சத்தியவாணி முத்து அவர்கள்.

அன்னை சத்தியவாணிமுத்து அவர்களைப் பற்றி எழுதுவது என்பது.

நிலவுக்கு மஞ்சளைப் பூசுவதுபோல-கிளிக்குப் பச்சை பூசுவதுபோல-கருப்பஞ் சாற்றில் கற்கண்டுவில்லைகளைப் கரைப்பதுபோல.



எந்தச் சொல்லிலும் பிடிபடாதவேகமும் எந்த நிலையிலும் குலைந்து போகாத உறுதிப்பாடும், ஊழிக்காலம் வரைக்கும் உழைக்க வேண்டும் என்கிற ஆர்வமும் கொண்ட கொள்கைக்காக இலட்சியப் பயணத்தில் இறுதிவரை நடைபோடுகிற இதயத் துணிச்சலும், மேகங்களுக்குள் தலைசுழலுகிற போதும், ஈரத் தரைகளில் கால்களை ஊன்றி நிற்பதில் உள்ள அழுத்தமும்தான் அன்னை சத்தியவாணி முத்து அவர்கள்.

சிறைக்கும், சித்திரவதைக்கும் ஆளான போதும் ஆதிக்க இந்திக்கு எதிராக ஆர்ப்பரித்தவர்கள் அன்னை சத்தியவாணிமுத்து.

விந்தியத்தின் விதானம் கடந்து ஆதிக்க வெறியர்களின் அடுக்கடுக்கான ஊடுருவல்கள்-தமிழ்நிலத்தைக் கிழித்துக் கூறுபோட கிளர்ந்து வந்தபோது-வாளும் கேடயமுமாய் நம்மை-நம் இனத்தைச் சொல்லாலும்,எழுத்தாலும் சூழநின்று வந்தவர்கன் அன்னை சத்தியவாணி முத்து,

புரண்டுபோகிற வரலாற்று வெள்ளத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்து மகிழுகிற தேவதாரு மரத்தைப்போல தனது கனிகளால் சத்தியத்திற்கு அவர்கள் சாட்சி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

கறுப்பு மலர்களுக்காகக் கண்ணீர் வடித்ததோடன்றி-கவலைகளை மாற்ற காரியமாற்றியவர்களில் டாக்டர் அம்பேத்காருக்கு உள்ள நீடுபுகழ் டாக்டர் சத்தியமாணிமுத்து அவர்களுக்கும் இந்திய வரலாற்றில் உண்டு.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றுவதில் அவர்களுக்குள்ள வேகம், விறுவிறுப்பு இதிகாசச் சிறப்பு உடையது.

அந்தக் காகிதப் பூக்களின் மகரந்தச் சிரிப்பிற்காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த இந்த மாதாவைப் பெற்ற மணி வயிறை வணங்குகிறேன்.

வாழ்ந்த போதே வரலாறான அன்னை சத்தியவாணி முத்து வாழும் இடம் நோக்கி வணங்குகிறேன்,

அடிமைகளின் விடுதலைக்காக ஆர்ப்பரித்து, அணி நடத்தி, அல்லல் விலங்குகளை அகற்றிய உலக உத்தமர்கள் வரிசையில் அன்னைக்கு இடம் உண்டு. இது உண்மை: வெறும் புகழ்ச்சி இல்லை.

---



# சுயமரியாதைச் சுடர்

ஈ. வெ. கி. சுலோசனு சம்பத்

திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களின் 60-வது மணிவிழா!

அவர்களுக்கு வயது 60 ஆம் நம் திராவிட இயக்கத்தின் வயதும் அதுவே! திருமதி சத்தியவாணி முத்து அவர்களின் 60 வயது வாழ்க்கையைத் திருப்பிப் பார்ப்ப தென்ருல் திராவிட இயக்கத்தின் 35 ஆண்டுகால வரலாற்றையும் திருப்பிப்பார்க்கவேண்டும்!

காரணம், திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் நெடிய வாழ்க்கையும், திராவிட இயக்க வரலாறும் பின்னிப் பிணைந்து நிற்பவை! பொது வாழ்க்கையில் பெணகள் ஈடுபடுவது என்பதே தகாத செயலாக தர்மத்திற்கு உதவாததாகக் கருதப்பட்ட காலம் அது!

தமிழகத்துப் பொது வாழ்க்கை வரலாற்றில் அந்தக்காலத்தில் துணிவோடும், ஆற்றலோடும் ஈடுபட்ட மகளிர் சிலரில் திருமதி சத்தியவாணி முத்துவும் ஒருவராவார்.

தந்தை பெரியார் அவர்களின் பொது வாழ்வுப் புயல்வேகப் பிரவேசத்திற்கு பிறகு தான் மகளிர் பொது வாழ்க்கையில் ஈடுபடக் கூடிய புரட்சிக்கர மாறுதல்களும் நிகழ்ந்தன.

பெண்கள் பொது வாழ்வில் பிரவேசிக்கவே தயங்கிய நேரத்தில் தந்தை பெரியார் அவர்கள் முதலில் தமது குடும்பத்துப் பெண்களையே பொது வாழ்க்கையில் ஈடுபடுத்திக் காட்டினுர்.

*1937*-ல் தமிழக அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டு அது! ஆம் அந்த ஆண்டிலேதான் மொழிக் கிளர்ச்சி முதன் முதலில் மூண்டெழுந்தது! தமிழன் தொடுத்த போரிலேயே அது வரலாற்றுப் போர்! வடவரை பணியவைத்த தீரப் போர்!

தந்தை பெரியார் அவர்களின் துணையேற்றுத் தமிழறிஞர்களும், வீரக்காளையரும் வெகுண்டெழுந்தனர். ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்களல்ல என்று கூவலிட்டுப் பெணகளும் வெகுண்டெழுந்தனர்.

மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம்மையார் டாக்டர் தருமாம்பாள், திருமதி-சத்திாவாணிமுத்து, ஆகிய வீராங்கனையர் முன் செல்ல எண்ணற்ற வீரப் பெண்மணிகள் தமிழ்காக்க முழக்கமிட்டுக் களம் ஏகினர்.

தடியடி தர்பார், துப்பாக்கிச் சத்தம், அடக்குமுறையின் வீச்சு ஆள்வோரின் அரட்டல் மிரட்டல் அத்தனையும் தூசாக நினைத்து ஆண்களும், பெண்களும் மொழி காக்க முனைந்து நின்றனர் களத்தில்!

இன்று மணி விழாக் காணும் திருவாட்டி சத்தியவாணிமுத்து அவர்கள் நிறையாகக் கர்ப்பிணியாக அந்த அறப்போர் களத்திலே முன்னணியில் நின்றவர்கள்.

மறைநத நம்மதிப்பிற்குரிய என்.வி.என். அவர்களது துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மையார் அவர்களும் அந்த அறப் போரிலேஈடுபட்டார்கள் திருமதி சத்யவாணி முத்து அவர்கள் தமது இளமைக் காலந் தொட்டு இன்றுவரை திராவிடர் இயக்கத்தில் பல ஆண்டுகால அரும்பணியாற்றி எத்தனையோ எதிர்ப்புக்கள் எளனங்கள், இழிவுகள் அத்தனையும் தாங்கி அரசியல் அரங்கில் உயர்ந்து-சட்டமன்ற உறுப்பினராக இப்படி எத்தனையோ உயர் பதவிகளை யெல்லாம் வகித்து உயர்ந்து நிற்கிருர்கள்.

நம்மவர்கள் எத்தனையோ உயரத்திற்கு போனுலும், உயர் பதவிகளை வகித்தாலும் நமக்கெல்லாம் உள்ள பெருமை-தந்தை பெரியாரின் தொண்டர்-பேரிஞர் அண்ணாவின் தம்பி தங்கையர், புரட்சித்தலைவர் அவர்களின் படைச் சிப்பாய்கள் என்ற பெருமை தான் நிலைத்த பெருமையையே தவிர, பதவிகளால் மட்டும் நமக்குப் பெருமைகள் வாய்த்து விடுவதில்லை.

அவ்வகையில்தான், இன்று 60-ஆம் மணிவிழாக் காணும் நமது மரியாதைக்குரிய சத்தியமாணிமுத்து அவர்கள், மண்ணுக்கும், சமுதாயத்திற்கும், இயக்கத்திற்கும் தொண்டாற்றி பெருமை சேர்ப்பதில சளைப்புத் தட்டாதவராக எந்தப் பொறுப்பையும் ஏற்றுத் திறம்படச் செயற்படுபவராக, எத்தகைய பணியையும் தீரத்துடன் முடிப்பவராக இளமைப் பொலிவோடுதான் விளங்குகிறார்கள் அவர்களுக்கு வயது 60 என்பது ஆண்டு எண்ணிக்கையே தவிர, அவரது வாழ்வில் அந்த முதுமை சிறிதும் இல்லை!

இலட்சியமிடுக்கும், தொண்டாற்றும் துடிப்பும் அவர்கள் இரத்தத்தில் ஊறியது.

அனைத்துத் துறைகளிலும் எல்லாத் திறமைகளும் பெற்று இலட்சிய உறதியோடு மேலும் பல்லாண்டு வாழ்ந்து நமது இயக்கத்திற்கும் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், தொடர்ந்து தொண்டாற்றவேண்டுமென்று தனது விழைவினையும் பெரியோர் தம் வாழ்த்துக்களொடு இணைத்துக்கொள்கிறேன்!





சர்வதேச மகளிர் மாநாட்டில் அன்னை தெரசாவுடன்





பாரதியாரின் நூற்றாண்டு விழாவில் பாரதியாரின் படத்தினை திறந்து வைக்கின்றார்.
திருமதி சுலோசனா சம்பத், செல்வி ஜெயலலிதா, அமைச்சர் R. M. வீரப்பன்,
கவர்னர் குரானா, மத்திய இலாகா அமைச்சர் திருமதி ஷீலா கௌரி உள்ளார்



எல்லை காந்தி கான் அப்துல்
கபர்கான், மறைந்த தலைவர்
காமராசர், திரு உஜ்ஜல் சிங்
முதலியோருடன்

1957 தேர்தல் நிதி வசூலுக்கு
நடத்திய லை நிகழ்ச்சியில்
புரட்சித் தலைவருடன்





பிறந்த நாள் விழாவில்
அண்ணா அனாதை இல்லக்
குழந்தைகள் நிர்வாகிகளுடன்
அதன் ஸ்தாபகர் காப்பாளராக



மத்திய பெட்ரோலிய துணை அமைச்சர் சௌகத்ராய் ரஷிய தூதர் ஆகியோருடன்
ய அமைச்சராக இந்தோ சோவியத 10ம் ஆண்டு நட்பின் ஒப்பந்த ஆண்டு விழாவில்






மத்திய அமைச்சராக டேராடூனில் 60 லட்ச ரூபாய் செலவில் கண்ணிழந்த
மாணவர் நிலைய விடுதிக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றுகிறார்



முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் பாபு ஜகஜீவன்ராமுடன்



குடியரசுத் தலைவர் V. V. கிரியை
முதல்வர் அண்ணா அவர்கள் அறிமுகம் செய்ய வணங்குகிறார்

# டாக்டர் சத்தியவாணிமுத்து

1967-க்கு முன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் டாக்டர் பட்டத்தோடு விளங்கிய ஒரே தலைவர்.

கலைஞர் கருணாநிதி முதல்வரானப் பிறகு மிகவும் சிரமப்பட்டு தான் டாக்டர் ஆனதும், டாக்டர் சத்தியவாணிமுத்து என்று கோட்டையில் இருந்த பெயர்ப் பலகையை இரவோடு இரவாக அகற்றிவிட்டு வெறும் சத்தியவாணிமுத்து என்று வேறு பெயர்ப் பலகையை வைக்கச் செய்தார். காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு டாக்டர்தான் இருக்கலாமாம்; நல்லக் கொள்கை!!

சத்தியவாணி முத்துவின் தந்தையார் திரு. நாகைநாதர் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளிலும், பிரச்சாரங்களிலும் சுட்டிக்காட்டப்பட்ட ''தீண்டாமை ஒழிப்பு'' என்கிற கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பெரியாரின் கொள்கைகளுக்காக அயராது பணியாற்றினர் நாகைநாதர்.

நீதிக்கட்சி, சுயமரியாதைக் கட்சி, தென்னிந்திய பௌத்தச் சங்கம், அகில இந்திய பகுத்தறிவாளர்கள் சங்கம் ஆகியவற்றில் நாகைநாதர் தீவிர பங்குகொண்டார்.

அவர் செல்லும் கூட்டங்களுக்கெல்லாம் பின் தொடர்ந்து சென்றதினால் டாக்டர் சத்தியவாணி முத்துவின் பிஞ்சு உள்ளத்தில் இந்தக் கட்சிகளின் கொள்கைகள் புதிய வாய்ப்பாக இருந்தது. பல மாநாடுகளுக்கும். பொதுக்கூட்டங்களுக்கும் தந்தை நாகைநாதருடன் திருமதி சத்தியவாணிமுத்து சென்று வருவது வழக்கம்.

சமுதாய முன்னேற்றத்தில் அக்கரைக் கொண்ட நாகைநாதர் தந்தை பெரியாரின் கொள்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டு சுயமரியாதைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட ஒருவருக்கே சத்தியவாணி முத்துவை திருமணம் செய்து வைத்தார்.

சத்தியவாணி முத்துவின் கணவர் மறைந்த திரு எம் எஸ். முத்து தீவிர காங்கிரஸ்வாதியாக இருந்தவர், சென்னையில் பழம் பெரும் காங்கிரஸ் காரர்களான திருவாளர்கள் டி. செங்கல்வராயன். ம.பொ, சி. டாக்டர் ராஜமன்னர். கததே ரங்கைய்ய நாயுடு, பாஷ்யம் அய்யங்கார் போன்றவர்களோடு காங்கிரஸில் பணியாற்றினர். ஆனல் 1938-ல் தந்தை பெரியார் துவக்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில்கலந்துக்கொள்ள காங்கிரஸைவிட்டு விலகி சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாநகரச செயலாளராகவும் பணியாற்றினர்.

1944-ல் தென்னிந்தியர் நலஉரிமைக் கழகம் திராவிடக் கழகமாக மாறிய சேலம் மாநாட்டில் டாக்டர் சத்தியவாணி முத்துவும், அவரது கணவர் திரு முத்துவும் கலந்து கொண்டார்கள்.

திராவிடக் கழகக் கூட்டத்திலும், மாநாட்டிலும் சத்தியவாணி முத்து நிறைய பங்கேற்றுள்ளார். அவர் கொடியேற்ருத மாநாடே கிடையாது என்றுகூட சொல்லலாம். அந்த அளவுக்கு திராவிடர் கழகத்தின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்துள்ளார்.

1949-ல் தந்தை பெரியாரோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பேரறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் திராவிடர் கழகத்திலிருநது ஒரு பகுதியினர் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தனர்.

அதன் பிறகு பேரறிஞர் அண்ணு அவர்கள் டாக்டர் சத்தியவாணி முத்துவை தாழ்த்தப்பட்டோரின் தனிப் பெரும் தலைவராக அறிமுகப்படுத்தி வளர்த்து வந்தார்.

வேலூரில் நடந்த செயற்குழு கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில்

அவைத்தலைவர் பதவியிலிருந்து திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ராஜினாமா செய்து விட்டார்.

அவைத்தலைவர் பதவிக்கு திருப்பரங் குன்றம் மகாநாட்டையொட்டி நடந்த பொதுக் குழு கூட்டத்தில் தேர்தல் நடந்தது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். கலைஞர் கருணாநிதி, திரு. எம். எஸ். சிவசாமி, ஆகியோர் அவைத்தலைவர் பதவிக்கு திருமதி சத்தியவாணி முத்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவிரும்பினார்கள். சத்தியவாணி முத்துவும் போட்டியிட்டார், ஆனால் இறுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களே அவைத் தலைவர் பதவியை ஏற்பது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் திருமதி சத்தியவாணிமுத்து காட்டிய அக்கரையும், ஆர்வத்தையும் உணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் தன்னுடைய அமைச்சரவையில் திருமதி சத்தியவாணிமுத்துவை ஒரு அமைச்சராக நியமித்ததோடு மட்டுமல்லாமல் முதல் முறையாக அரிசன நலத்துறையை தனி அமைசசகமாக்கி அதை திருமதி சத்தியவாணி முத்துவிடம் ஒப்படைத்தார்.

1967-ல் அமைச்சரானமுதல் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறுத் திட்டங்களைத் தீட்டி முனைப்பாக செயல்பட்டு வந்தார் டாக்டர் சத்தியவாணி முத்து.

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தாழ்த்தப்பட்டோரின் நல வாழ்வுக்காக டாக்டர் சத்தியவாணிமுத்து தீட்டிய பல அற்புதமான திட்டங்களுக்கு அப்பொழுது முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியால் ஏற்பட்ட இடையூறுகளும், எதிர்ப்புகளும்தான் டாக்டர் சத்தியவாணி முத்துவின் ''எனது போராட்டம்'' என்ற புத்தகம் உருவாக காரணமாக இருந்தது.

தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்தில் தந்தை 'பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளைத் தான் சத்தியவாணிமுத்து நடைமுறைப் படுத்த விரும்பினார். ஆனால் துரதிருஷ்டவசமாக முதலமைச்சர் கருணாநிதியின் எதிர்ப்பு இந்தத் திட்டங்களுக்கு ஏற்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு யார் முதல்வராக வருவது என்ற பிரச்சினை எழுந்தது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் முழு ஆதரவோடு முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்ட கலைஞர் கருணாநிதியை டாக்டர் சத்தியவாணி முத்துதான் முன் மொழிந்தார்.

அந்த சத்தியவாணி முத்துவைத்தான் 1976-ல் கருணாநிதி பதவி நீக்கம் செய்தார் என்பது குறிப்பிடத்தது, அமைச்சர் பதவியைவிட்டு வெளியேறிய உடன் சத்தியவாணிமுத்து குடியிருந்த அரசு வீட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தி கலைஞர் கருணாநிதி பொதுப்பணித் துறையின் மூலம் கெடுபிடிகள் செய்து வந்தார். மின்சார வசதியை ரத்துசெய்தார், குடிதண்ணீர் நிறுத்தப்பட்டது. தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. சத்தியவாணி முத்துவின் உடமைகளும் பொருள்களும் வீதியில் தூக்கியெறியப்பட்டன. ''வாழ்க கலைஞர் கருணாநிதியின் தமிழர் பண்பாடு!!''

அதன்பிறகு திருமதி சத்தியவாணிமுத்து கழகத்தைவிட்டு வெளியேறி தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தினை துவக்கினார்.

1976-ல் கலைஞர் கருணாநிதியின் அமைச்சரவை பதவி நீக்கம் செய்யப்பட்டது அப்பொழுது இந்திரா காந்தி அம்மையாரிடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கருணாநிதி செய்துள்ள கொடுமைகளை அடுக்கடுக்காக சுட்டிக்காட்டி மனு ஒன்றினை சத்தியவாணிமுத்து தான் உருவாக்கி நடத்திவந்த தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்



வேலூர் நாராயணன்

தின் சார்பில் கொடுத்தார். அதன் மீது சர்க்காரியா கமிஷன் விசாரணை செய்தது.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தினை கலைத்துவிட்டு திருமதி சத்தியவாணி முத்து தன்னையும், தன் தொண்டர்களையும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்டார்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தப்பின் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் சத்தியவாணி முத்துவை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கியதோடு மட்டுமல்லாமல் அங்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் நியமித்தார். இந்தச் செயல் புரட்சித் தலைவரவர்கள் டாக்டர் சத்தியவாணிமுத்துவின் மீது வைத்திருக்கும் அன்பை வெளிக்காட்டுவதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு சிறைசென்று பல தியாகங்களைச் செய்த தன்னை முதல்வர் பதவிக்கு முன் மொழிந்த டாக்டர் சத்தியவாணி முத்துவை அமைச்சர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்தார் கருணாநிதி. ஆனால் சரணசிங் தலைமையில் மத்தியில் அமைந்த அமைச்சரவையில் அமைச்சராக்கினார் புரட்சித் தலைவர். இதுவே கலைஞர் கருணாநிதிக்கும் புரட்சித்தலைவருக்கும் உள்ள வேறுபாட்டை வெளிக்காட்டுவதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் காலமெல்லாம் பாடுபட்டு வரும் டாக்டர் சத்தியவாணிமுத்து 60-ம் ஆண்டைக் கடந்து 61 வது ஆண்டை துவக்குகின்ற அவர் மேலும் பலஆண்டுகள் வாழ்ந்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உரிமைகளுக்காகவும் பாடுபட்ட வேண்டுமென்பதே என் ஆசை.

**வேலூர் நாராயணன்**



***With best compliments of:***

**Ashok Leyland**
**—steering the wheels of progress**



டாக்டர் அம்பேத்கார் கலைக்
கல்லூரி நிதி வசூல் நிகழ்ச்சி
யில் நிதிக்குழு பொருளாளர்
புரட்சித் தலைவருடன்



தாழ்த்தப்பட்ட முன்னேற்றக்
கழக தோழர்களுடன



நாவலருடன் அம்மையார்

பல தோற்றங்களில் அம்மையார்









பல தோற்றங்களில் அம்மையார்









பிறந்தநாள் விழாவில்
மராட்டிய முன்னாள் மந்திரி
திரு ரூபவதே பாராட்டி
பேசுகிறார் கர்நாடக முன்னாள்
அமைச்சர் திரு பசவலிங்கப்பா
திரு N. V. நடராசன்
வீற்றிருக்கிறார்கள்



முதல்வர் அறிஞர் அண்ணா
அவர்களோடு உதகையிலுள்ள
கோட்டா இளம் பெண்களிடம்
உரையாடுகிறார்



மொரீஷியஸ் தீவில்
திரு சஞ்சீவி ரெட்டியவர்க
ளுடன் வரவேற்கப்படுகிறார்

# அன்னையே நீவிர் வாழ்க

வழிகாட்டி

அன்பென்ன ! ஆர்வமென்ன ! இன்பமென்ன !
ஈகையென்ன ! உண்மையென்ன ! ஊக்கமென்ன !
எண்ணமென்ன ! ஏற்றமென்ன ! ஐயாவென்ன !
ஒப்பற்ற தன்மை யென்ன ! ஓதலென்ன !
அவையெல்லாம் ஓருருவில் ஔவை போல
அன்னையாம் ''சத்தியவாணிமுத்து'' என்ற
மகிழுருவாய்த் தோன்றினையே ! நீவிர்வகழ்க !
தமிழுலகின் தாழ்ந்தோரினம் தழைக்க வாழ்க !

மதியற்று மானமற்றே முழு மூடர்போல்
மெய் மறந்து மேலினத்தில் மையச்சொல்லில்
மெத்தனமாய் மேனிலையை மறந்து வாழ்ந்த
மையிருளில் மறைந்திருந்த தாழ்ந்தோர் வாழ
அய்யாவின் தன்மானம் தமிழன் பண்பு
மெய்யறிவு மேவிடவே சாதிமாயைப்
பேய் தன்னை வுரட்டிரவே பெண்சிங்கம் போல்
போர்க் களத்தில் புகுந்தனையே ! நீவிர் வாழ்க !

அய்யாவும் அண்ணாவும் அம்பேத்காரும்
வழிகாட்ட வாழ்க்கைநெறி வகுத்து நின்றீர் !
''பகுத்தறிவே கடவுள்'' என்ற ஆன்றோர் வாக்கின்
மெய்ப் பொருளாய் மேன்மையுற்றீர் ! நீவிர் வாழ்க !
தாழ்ந்தோரின் இனம் தழைக்கப் பாடுபட்டீர் !
எம்.ஜி.ஆர் பலக்கரமாய் பெருமைபெற்றீர் !
மையத்தில் தமிழகத்தில் அமைச்சர்ஆனீர் !
தமிழகத்தின் பெண்மைக்கே பெருமை தந்தீர் !

மாநிலங்கள் மன்றத்தில் மற்றோர் போற்ற
மாவீரன் அண்ணாவின் கொள்கை யெல்லாம்
ஆங்கிலத் தோடன்னைத் தமிழ்ச் சொற்களாலே
ஆளுநர், எதிர்க் கட்சி உறுப்பினர் தம்
உளங்கவர் சத்தியமாம் முத்துப் போன்ற
வாணி ரூபமுள்ள நீவிர் வாழ்க ! வாழ்க !
தமிழர்இனம் ஒன்றே தான் என்ற உண்மை
உருவமாய் பல்லாண்டு நீவிர் வாழ்க !

தொண்டர்கள் வாழ தமிழரினம் வாழ
அண்ணாவின் அருங்கொள்கை வாழ—கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ சத்தியவாணிமுத்து !
இன்னுமொரு நூற்றாண்டிரும் ! !

—•••—

# அந்த நாள் ஞாபகம்

புலமைப் பித்தன்



முத்தமிழ் இனமா னத்தை
மீட்கின்ற அறக்க ளத்தில்
எத்துணைத் துயரம் தொல்லை
என்றாலும் பெரியார் கண்ட
தத்துவப் பாச றைக்குத்
தானுமோர் சிப்பா யாகச்
சத்திய வாணி முத்து
தாய்வந்தாள் அந்த நாளில்!

கட்டிலை அலங்க ரித்துக்
கா தலைப் பேசு தற்கும்
தொட்டிலை அசைத்துப் பிள்ளை
தூங்கிடச் செய்வ தற்கும்
வட்டிலில் சோறு செய்து
வழங்கவும் பெண்கள் என்று
பட்டியல் போட்ட நாளில்
பகுத்தறி வியக்கம் சேர்ந்தாள்.

பொதுவாழ்க்கை இற்றை நாளில்
உண்மையைப் புகல்வ தென்றால்
முதலீடு தேவை யில்லா
வாணிகம் ஆட்சி என்றும்
அதிகார 'அபினி'க் கிந்தாள்
ஆளானோர் அதிகம், அந்நாள்
பொதுவாழ்க்கை நெருப்புக் காட்டில்
போய்வரும் பயணம் அன்றோ !

இப்போது நினைத்துப் பார்த்தேன்
என்கிறு பொதுவாழ் விற்கே
முப்பது வயது, பள்ளிச்
சிறுவனாய் நான்இ ருந்த
அப்போதே சத்திய வாணி
அன்னைஓர் தலைவி, என்றன்
கற்பனைப் பறவை அருந்தக்
காலத்தில் பறக்க கண்டேன் !

என்னருந் திராவி டப்பே
ரியக்கத்தின் வரலா றென்றும்
அன்னைஎன் சத்(தி)ய வாணி
அவரது வரலா றென்றும்
இன்றுநான் வெவ்வே றாக
எண்ணவே இல்லை என்றன்
கண்களில் அந்த நாட்கள்
கலையாத ஓவி யங்கள் !

புலவர் புலமைப்பித்தன்

ஓம்

# மகிழ்வுடன் வாழி

சௌந்தரா கைலாசம்

அரசியல் வாழ்வில் மின்னும்
அரியதோர் விண்மீ னாகத்
தரணியில் விளங்கும் அன்புச்
சத்திய வாணி முத்து
புரமெலாம் மகிழ்ந்து நின்று
போற்றிடும் வண்ணம் நாட்டில்
விரவிய ஏற்றத் தாழ்வை
விலக்கிடத் தொண்டு செய்வார்!

எண்ணமும் செயலும் நாட்டின்
இன்னல்கள் துடைக்க என்றும்
அண்ணனின் வழித்த டத்தில்
அமைதியாய் நடந்து காட்டி
நண்ணிடும் மாந்தர்க் கெல்லாம்
நாளெலாம் உதவி செய்யும்
பெண்ணவள் பெருமை ஓங்கிப்
பேருல கதனில் வாழி!

எண்டிசை உலகில் அன்பும்
இனிமையும் பெருகச் செய்யும்
தொண்டிலே நிறைவு காணும்
சோதரி, இந்த நாளில்
கண்டிடும் மணிவி ழாவில்
கந்தனின் அருளால் என்றும்
மண்டிய இன்பம் பொங்க
மகிழ்வுடன் வாழி என்பேன்!



# அத்தைக்கு அறுபது!

என். வி. என். ராணி கலைச்செழியன்

இந்த நூற்றாண்டின் மாபெரும் பகுத்தறிவு சக்திதான் தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கபபட்ட திராவிட இயக்கம்! உலகிலே எநத நாட்டிலும் உருவாக்கப்படாத - உருவாக்கப்பட முடியாத பகுததறிவு இயககமதான் திராவிட இயக்கம்! இந்த இயககத்தைதத தந்தை பெரியாரவர்கள உருவாக்கப்பட்ட பாடு 60 ஆண்டு கால சரித்திரத்தையே உள்ளடக்கியதாக இருக்கிறது!... இதன் ஆரம்பகாலம், இடைக்காலம், மிகமிகத் துன்பமும் துயரமும், கேலியும் கிண்டலும், எதிர்ப்பும் வன்முறையும், கொண்டதாக விளங்கியது! அதனைச் சமாளித்த பெருமை, தந்தை பெரியாரையும் - அறிஞர் அண்ணாவையும் - அவர்களின் தியாக உணர்வுள்ள தொண்டர்களையுமே சாரும்!

அத்தகைய தியாக வீரர்களின்—சுயநல சுயசுக நினைப்பற்ற தொண்டர்களின் ஆரம்பகாலப் பட்டியலில் இடம்பெற்ற மறவர்களில் பலர், இன்று நம் கண்முன்னே இருந்து, மனத்திலேயிருந்து, அகலாத - அகலவே முடியாத சரித்திர புருஷர்களாக இருக்கிறார்கள்! அவர்களில் ஆண்கள் மட்டுமல்லர்; பெணகளிலும் பெரும் புகழ் பெற்றவர்களும் இருக்கிறார்கள்! அத்தகைய பெண்களின் பட்டியலில் முதலிடம் பெற்ற திராவிட இயக்கத்தின் மூத்த தலைமகள் தான், டாக்டர் அன்னை சத்திய வாணிமுத்து அம்மையாராவார்கள்.

பொதுநலத் தொண்டே தம்முடைய வாழ்க்கையின் கொள்கையாகவும், இலட்சியமாகவும், தம்மை ஈடுபடுத்திக் கொண்டு கடந்த நாற்பது ஆண்டுகாலமாகச் சுயமரியாதை இயக்கத்திலும். சமுதாய சீர்திருத்தப் பணிகளிலும், அரசியலிலும், அரியதோர் சேவை புரிந்தவர்தாம் அன்னை டாக்டர் சததிய வாணிமுத்து. அந்த அம்மையாருக்கு இன்று மணி விழா.

அம்மையாரின் தந்தை திரு. க. நாகைநாதன், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கங்களில் தீவிரமாகத் தொண்டாற்றியவர். அவர் செல்லும சுயமரியாதை மாநாடுகளுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும், தம மகளை உடன் அழைத்துச் செல்லுவார். அதனால் சிறுமியாக இருந்த போதே சுயமரியாதைக் கொள்கைகள் அம்மையாரின் மனததில் வேரூன்றத் தொடங்கின. சுயமரியாதைக் கொள்கைகளை ஏற்றுககொள்ளும் ஒருவருக்கே தம் மகளை மணம் முடித்துக் கொடுக்கவேண்டும் என்பது அம்மையாரின் தந்தையார் எண்ணம். அவர் எண்ணம்போலவே ம. சு. முத்து என்கிற ஒரு சுயமரியாதைக்காரருக்கு 1943 ஜனவரித திங்களில் மணம முடித்துவைத்தார்..

பெத்துநாய்க்கன் பேட்டையில் தீவிர காங்கிரஸ் வாதிகளாக இருந்த, திருவாளர்கள் கத்தேரங்கய்யா நாயுடு, கோபால ரத்தினம், டி செங்கல்வராயன், டி. வி. முருகேசன், ராசமன்னார், வினாயகம், மறைந்த என் தந்தை என். வி. என், இப்போது மேல் சபைத் தலைவராக இருக்கும். மாண்புமிகு ம. பொ. சி. ஆகியோருடன் ம. சு. முத்து அவர்களும் தீவிர காங்கிரஸ்காரராகப் பணியாற்றியவர்கள். பெத்துநாய்க்கன் பேட்டையில் உள்ள சிவஞானம் பூங்காதான் இவர்களுடைய ஆலோசனைக் கூடம். 1038-ல் தந்தை பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளக் காங்கிரஸைவிட்டு வெளியேறினார். அதன்பின் ம. சு. முத்து சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாவட்டச் செயலாளராக இருந்தார்.

மாநாடுகளானாலும், சுயமரியாதை கூட்டமானாலும் ம. சு. முத்து தம் துணைவியாரை உடன் அழைத்துச் செல்வார். சென்னை கோகலே மண்டபத்தில் 1943-ல் சுயமரியாதை மாநாடு நடைபெற்றபோது அந்த மாநாட்டுத் தலைவராகப் பேராசிரியர் திரு. ரத்தினசபாபதி அவர்களும், திறப்பாளராகத் திருமதி. கனகவல்லி அம்மையாரும் அந்த மாநாட்டில் பங்கேற்றனர். கனகவல்லி அம்மையாருக்கு வரவேற்பு மடல் வாசித்துக் கொடுக்க வேண்டும். அதுவும் ஒரு பெண் வாசித்துத் தர வேண்டும் என்பது மாநாட்டுத் தலைவரின் விருப்பம். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் சத்தியவாணி அம்மையாரை அழைத்து வரவேற்பு மடல் வாசித்து கொடுக்கச் சொன்னார். வரவேற்பு மடல் வாசித்த அம்மையாரின் சொல்நடை எல்லோரையும் கவர்ந்தது. இந்த மேடையே அம்மையார் ஏறிய முதல் மேடையாகும்.

தந்தை பெரியாரிடம் பயின்று பேரறிஞர் அண்ணாவை ஆசானாக ஏற்றுப் பணிபுரிந்து இப்போது நாமெல்லாம்

போற்றும் பேரொளி. பெருந்தகை, இதயத்தின் தெய்வம், பொன்மனச்செம்மல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் இலட்சிய வழியிலே நின்று அவர் பின் பற்றும் அண்ணா வழி கொள்கைக்கு உறுதுணையாகச் செயலாற்றி வருகின்றவர்தாம் அன்னை சத்தியவாணிமுத்து.

மத்திய அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வா என்று புரட்சித் தலைவர் ஆணையிட்டாலும் முகமலர்ச்சியோடு அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டவர்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த போது 71ல் அம்பத்தூர் ஒரகடத்தில் "அண்ணா அனாதை இல்லம்" துவக்கி வைத்தார். "டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரியை" நிறுவினார்கள். இந்த இரண்டும் அம்மையார் செய்த பணிகளில் குறிப்பிடத்தக்கது.

அம்மையார் அவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக ஒன்பது முறை சிறைச்சாலை சென்றவர். 1948ல் சென்னை தங்கசாலைத் தெருவில் உள்ள தொண்டைமண்டலப் பள்ளியில இந்திக்காக மறியல் செய்தும், 1953ல் மும்முனைப் போராட்டத்திலும், 1958ல் என் தந்தையார் என். வி. என். அவர்களுடன் சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தில் இந்தி பெயர் பலகையைத் தார் கொண்டு அழித்த போராட்டத்திலும், 1962ல் விலைவாசிப் போராட்டத்திலும், 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றார்கள்.

25-1-51ல் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் "திராவிட முன்னேற்றக் கழக மகளிர் மன்றம்" துவக்கி அதை அம்மையார் சீரிய முறையில் நடத்திச் சென்றார். 21-8-56ல் டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் "மகளிர் மன்றம்" ஆண்டு விழா சிறப்பாக நடந்தது. அந்த அமைப்புக்குத் தலைவராக சத்தியவாணிமுத்து இருந்தார்கள். ஆலோசகராக ராணி அண்ணாதுரையும், பாதுகாப்பாளராக ஜானகி ராமச்சந்திரனும், புவனேசுவரி நடராசன், வெற்றிச் செல்வி அன்பழகன் இருவரும் செயலாளராகவும், சுலோசனா சிற்றரசு, கல்யாணி ராமசாமி, பார்வதி கண்ணதாசன், பரமேஸ்வரி ஆசைத்தம்பி. நானும் செயற்குழு உறுப்பினர்களாக இருந்தோம். கொள்கைகளைப் பரப்புவதற்காக "அன்னை" இதழைத் துவக்கித் தாமே ஆசிரியராக இருந்து வெற்றிகரமாக நடத்திக்கொண்டு வந்தார்கள்.

என் தந்தையைச் சந்திக்க எங்கள் இல்லம் வரும்போது டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களை "அத்தை" என்று நான் செல்லமாக அழைப்பதுண்டு. அவர்களும் மருமகளே என்று செல்லமாக அழைப்பார்கள். அந்த அத்தைக்கு அறுபது வயது நிறைவு பெறுகிறது என்று எண்ணும்போது பெரு மகிழ்ச்சி அடைகிறேன். எனவே இந்த மாபெரும் மணிவிழாவில் மறைந்த என் தந்தை என்.வி.என். அவர்கள் சார்பாகவும் என் தாயார் புவனேசுவரி அவர்கள் சார்பாகவும் எங்களின் பகுத்தறிவுக் குடும்பத்தின் சார்பாகவும் அவர்களுக்கு எங்களின் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் வழங்குவதில் நாங்கள் உள்ளபடியே பெருமையும், பூரிப்பும் அடைகிறோம்.

இந்த நேரத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல் படுத்தாத "குழந்தைகள் சத்துணவுத் திட்டமும்", "முதியோர் சத்துணவுத் திட்டமும்" இந்த இருகண் போன்ற திட்டங்களுக்கு நாமெல்லாம் உறுதுணையாக இருந்து புரட்சித் தலைவர் ஆட்சிக்கும், அவர் கடைப்பிடிக்கும் அண்ணாவழிக் கொள்கைக்கும், நமது சமூகத்திற்கும் வலிவூட்டி, புரட்சித் தலைவர் கரங்களை வலிவுபடுத்துவோம்! வலிவுபடுத்துவோம்! என்று டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் மணி விழா காணும் இந்த நேரத்தில் நாமெல்லாம் சூளுரையேற்றுக்கொள்வோம். வாழ்க சத்தியவாணிமுத்து அம்மையார், வளர்க அவர்கள் தொண்டு!



# தாய்க்குலப் பணியில் தழைத்துயர்ந்த ஒரு தண்ணொளி முத்து

கா. அப்பாத்துரை

தமிழகத் தந்தை பெரியார், தென்னகக் காந்தி வான்புகழ் அறிஞர் அண்ணா, அவ்வொளி மரபின் தண்ணிலவு நிறை மதியாம் மக்கள் திலகம் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். ஆகியோர் வழி வழி வளர்த்து வரும் தமிழின மறுமலர்ச்சி இயக்கத்தில் நீடு பணியாற்றி வருபவர் டாக்டர் திருமதி சத்திய வாணிமுத்து அவர்கள். அவர் தமிழினப் பணியிலும் தாய்க் குலத் தொண்டிலும் தழைத்துயாந்த ஒரு நன்முத்து ஆவார்.

அ. இ அ தி. மு. கழகத்தின் மகளிரணிச் செயலாளரான என் துணைவியார் திருமதி அலமேலு அப்பாத்துரையுடன் அறிஞர் அண்ணா நாளிலிருந்தே தொண்டாற்றி வருபவர் என்றமுறையில நானும் என் துணைவியாரும் அவரது அணுக்கமான குடும்ப நண்பர்கள். அறிஞர் அண்ணா நாட்களில் மகளிர் அணியிலும் பெண்கள் இயக்கததிலும் அண்ணாவின் அறிவுப் படையின் போராட்டங்களிலும் டாக்டர் சத்தியவாணி அவர்கள் அருந்தொண்டுகள் ஆற்றி வந்தவர் ஆவார். சிறந்த பேச்சாளரும் செயல் திற மிக்கவருமான அவருடன் என் துணைவியார் மட்டுமேயன்றி நானும் அடிக்கடி இணைந்து தொண்டாற்றும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன் அவர் தம் கணவர், குழந்தைகள் ஆகியவர்கள் அச்சமயம் உடன் வந்த நிலையில், தமிழகத்தின் பல பேரூர், சிற்றூர்களின் சுற்றுப் பயணங்களிடையே அவர்களின் இனிய பண்பாட்டினைக் கண்டு மகிழும் வாய்ப்பும் எனக்கேற்பட்டுள்ளது.

டாக்டர் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமுதாயத்தினருக்கு, சிறப்பாகப் பெண்டிருக்கு ஆற்றி வந்துள்ள சேவை சிறிதன்று, மிகப் பெரிது. மக்களும் அவரைத் தம் குடும்பத்துள் ஒருவர் போல அவருடன் அளவளாவி மதிப்புடன் அன்பும் ஆதரவும் காட்டி வந்துள்ளதை நான் அறிவேன். அவர் போகுமிடமெல்லாம் மக்கள் வெள்ளம் இயல்பாக

அவரை வந்து சூழ்வதைக் காண நான் மிகவும் மகிழ்வும் பெருமையும் அடைந்துள்ளேன்.

அம்மையார் சிறந்த எழுத்தாளர். தமிழக இதழ்கள் அவரது தொண்டுகளைக் குறிப்பதுடனும் பாராட்டுவதுடனும் அமைவதில்லை. அவரது எழுத்துத் திறமையையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் தகுதி வாய்ந்த நல்லமைச்சராகவும் டாக்டர் அவர்கள் திறம்பட ஆட்சி நடாத்தியுள்ளார்.

பொதுப்பணியுடனும் நாட்டாட்சிப் பணியுடனும் அமையாமல் நேரடி மக்கள் தொண்டாற்றும் ஆர்வத்துடன் அவர் மருத்துவமும் பயின்று, அதன் மூலம் தனிமுறையில் மக்கள் துயர் ஆற்றும் அரும்பணி செய்து வருகிறார்.

மக்களுக்குத் தொண்டாற்றிப் புகழும் பீடும் பெற்றபின்னும் டாக்டர் அவர்கள் தம் நண்பர்களையோ, தம்முடன் உழைத்த தொண்டரையோ மறப்பதில்லை. இவ்வாறாக அவர் நலம் போற்றிப் பாராட்டுபவர் எண்ணிலர்.

புத்தர் பிரான் தொண்டு மரபில் வந்து தமிழ் மரபில் அறம் வளர்த்த மணிமேகலைபோல, பெரியார் தொண்டு மரபில் வந்து வான்புகழ் அண்ணாவால் வளர்க்கப்பெற்று அறிஞர் அண்ணாவின் கனவின் நனவுருவான பசும் புரட்சிச் செம்மல் மக்கள் திலகத்தின் பேராதரவுக்குரியவராய் டாக்டர் விளங்கி வருகிறார்.

மணிவிழாக் கண்ட அவர்தம் முத்துவிழாக்களும் தம் பணிப்புகழின் பொன்மணி விழாக்களும் கண்டு நீடு வாழ்க என முத்தமிழன்னையை வேண்டுகிறேன். அவர் வழிநின்று அவர் மணிப்புகழுக்கு அவர் குடும்பமும் அவர் உற்றார் உறவுச் சூழலும் பொன் புகழ்வட்டமாக அமைந்து நாட்டுக்கும் மொழிக்கும் இனத்துக்கும் பெருமையும் பெரு நலமும் சேர்ப்பாராக.

# மாதர்குலத் தலைவிக்கு மனம் நிறைந்த வாழ்த்து

**கே.டி.கே. தங்கமணி**

திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கு 60 ஆண்டுகள் ஆகிவிட்டதாம். நம்ப முடியவில்லை 35 வருஷங்களுக்கு முன்பு நடந்த அந்த சம்பவம் என் மனக் கண்ணில இன்னும் மறையாமல் இருக்கிறது. 1946 ஆம் வருடம் மதுரையில ஒரு நாள் திலகர் சதுக்கத்தில் ஒரு இளம் நங்கை எரிமலை போல எழுச்சியுடன் பேசிக்கொண்டிருந்தார். நறுக்குத் தெறித்தாற்போன்ற சொற்றொடர்கள், கிண்டல் தொனிக்கும் கேள்விகள், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனங்களைச் சுவையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

கடவுள் இல்லை என்று பிரச்சாரம் செய்யும் எங்களைக் கடவுள் தண்டிக்கவில்லையே? ஏன்? என்று கேட்டார்.

ஏனென்றால் கடவுள் என்ற பேச்சுக்கேஇடமில்லைஎன்று முடித்தார். மேடைக்காகவோ - அதன் பிரசங்கத்திற்காகவோ- பேசப்பட்ட போலித்தனமான சொற்பொழிவு அல்ல இது.

உண்மையை உளப்பூர்வமாகவே அங்கீகரித்து-உணர்வுப் பூர்வமாகவே அதில் ஐக்கியப்படுத்திக்கொண்டு - சிந்தனைப் பூர்வமாக விஞ்ஞான நீதியில விளக்கப் பெற்று - அதன்படியே நடை முறையில கடைபிடித்து-துணிச்சலாகவும்-உறுதியாகவும் தமது கருத்தை வெளிப்படுத்தும் நாணயமும் நேர்மையும் என்னை அன்றே பெரிதும் கவர்ந்தன.

திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக அன்றே அவர் மதிக்கப்பட்டார். கலைஞர் கருணாநிதி, ஈ.வெ.கி. சம்பத், மதுரை முத்து, அன்பில் தர்மலிங்கம், மதியழகன் போன்றவர்களின் வரிசையில் இவருக்கும் உரிய இடம் அப்போதே இருந்தது.

தாம் ஏற்றுக் கொண்ட லட்சியத்தில் துளியளவும் ஊசலாட்டம் இல்லாத உறுதி அவரிடம் உண்டு. அதற்காக எந்த நிலையிலும எத்தகைய இடையூறு இருந்தாலும் ஏற்கத் தயங்காதவர். இதற்கு உதாரணமாக எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

1953 என்று நினைக்கிறேன். கர்ப்பிணியாக அவர் சிறை புகுந்தார். திரு. அண்ணா அவர்கள் உட்படப் பலர் அப்போது தமது போராட்டத்தால் சிறை சென்றிருந்தார்கள். நானும் காலஞ்சென்ற தோழர் மணலி கந்தசாமி அவர்களும் சென்னை சிறையில் அண்ணா அவர்களைச் சந்தித்த போது சத்தியவாணி முத்து அம்மையாரும் கர்ப்பவதியாக சிறைபிடிக்கப்பட்டார் என்ற செய்தியை அறிந்தோம். பெரும்பாலான பெண்கள் நேரடியான அரசியல் ஈடுபாட்டை விரும்பாத காலத்தில் இவரது துணிச்சலும் தியாகமும் எங்களுக்கு வியப்பு கலந்த மரியாதையை ஏற்படுத்தியது.

தி. மு. க. தலைவராக மக்கள் மத்தியிலே மணியாற்றி வந்த அவருக்கு சட்டமன்றத்திலே குரல்கொடுக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. 1971 முதல் 1976 வரை எனக்கும் எங்களது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகச் சட்டமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்புகிடைத்தது. இவர் அமைச்சராகவும், சாதாரண உறுப்பினராகவும் இருந்தார். அமைச்சராக இருந்த போது சிறந்த நிர்வாகியாகவும், சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விக்குத் தெளிவான பதில் கொடுத்தும், எதிர்கட்சித் தலைவர்களின் ஆவேசமான பேச்சுகளுக்கு நிதானமாக விளக்கம் அளித்தும் சிறந்ததொரு அமைச்சராக விளங்கினார்.

அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுபட்டுச் சாதாரண சட்டமன்ற உறுப்பினராய் இருந்தபோதும் அவசர சட்டமன்ற நடவடிக்கைகளும், உரைகளும் பிரச்சினைகளின்மீது தெளிவான கருத்துக்களின்மீது தக்க ஆதாரங்களுடன் இருந்தன. பதவியில் இருந்தபோதும் சரி, இல்லாதபோதும் சரி, மற்றவர்களிடம் அவர் பழகிய முறையோ-எளிமையோ-இனிய நட்போ-எள்ளளவும் மாறுபடவில்லை

தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகத் தமது பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். ஆயினும் தி. மு. க. விலேயே அவர் தொடர்ந்து இருந்திருப்பாரானால் தமக்கு இன்னும் வந்திருக்க வேண்டிய சேவைக்கான வாய்ப்பும், கிடைத்திருக்க வேண்டிய செல்வாக்கும் நிச்சயம் வந்திருக்கும். தி. மு. க. விற்கும் இவரால் மேலும் பலம் கூடியிருக்கும் என்பது என் மனப்பூர்வமான கருத்து. எனினும் தமது பொதுநல சமுதாயத் தொண்டில் தொடர்ந்து ஈடுபட்டுப் பணியாற்ற வேண்டும் என்று விரும்புகிறேன். தமிழ்நாட்டின் மாதர்குலத் தலைவர்களில் சிறந்தவராக நான் மதிக்கும் திருமதி சத்திய வாணிமுத்து அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்.

1957ல் அன்னையார் துவக்கிய 'அன்னை' மாத மகளிர் ஏட்டினை துவக்கவிழா. பேரறிஞர் அண்ணா பெயர் பலகையை திறக்கின்றார்





அண்ணாவுடன் அம்மையார்

சிந்தனைச் சிற்பி சி. பி சிற்றரசு அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்





புரட்சித் தலைவருடன் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துகிறார் அம்மையார்







விழா நாயகி அம்மையாரின் இளமைத் தோற்றம்



அம்மையார் இளமைத் தோற்றம்



அம்மையார் தன் இரண்டாவது மகன் செழியனுடன்



திரு நாகைநாதர்
(அம்மையாரின் தந்தையார்)



திரு S. முத்து
(அம்மையாரின் கணவர்)



அம்மையார், தன் கணவர் படத்திற்கு
மாலை அணிவிக்கிறார்



மாதர் மூதாட்டி இராமாமிர்தம்
அம்மையாரை கௌரவிக்கிறார்

Best Compliments from :

# REGENT TRAVELS

[Recognised by Govt. of India]

No. 7, Stringer Street, 1st Floor,

MADRAS-600001 (S. INDIA)

Telex : 41-7174 TRAN IN    Phone : 20057    Grams : REGTRAVEL

ASSISTANCE FOR

Pass ports, Visas, N. O. C. S., Emigration Clearance, Income-Tax-Certificate, International and Domestic Air Booking, Tour operators, Hotel Reservations, Car / Bus Renting.

---

எங்கள் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள் :

# TAMIN

உலகப் புகழ்பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தராப்பள்ளி சார்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

சுண்ணாம்புக்கல் கெமிகல் கிரேடு + 90% $CaCo_3$

வெங்கக்கல் (குவார்ட்ஸ்) + 99, 6% $Si0_2$

பெல்ட்ஸ்பார் + 12% $K_2$ 0

ரோஸ் குவார்ட்ஸ்—ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது.

வெர்மிகுலைட் (மைக்கா) சராசரியாக 14 மடங்கு கனபரிமானம் விரிவடையும் தன்மையுடையது.

சிலிகா மணல்— + 99, 0% Si02

வெப்பந்தாங்கும் களிமண்—ரிப்ராக்டரி கிரேடு.

தேவைக்கு அணுகவேண்டிய முகவரி

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,

**தமிழ்நாடு கனிம நிறுவனம்,**

TWAD ஹவுஸ், 31. காமராசர் சாலை,

தபால் பெட்டி எண் 2961

சேப்பாக்கம், சென்னை-600 005.

தொலைபேசி எண் : 848932    தந்தி : MINESALITE

# An Ace ORATOR

## A.P. JANARDHANAM

For nearly forty years, Dr. Mrs. Sathiavani Muthu has been a relentless crusader against the caste system, which is capitalism by birth. For over three thousand years the caste pyramid, with the Brahmin at the top and the true sons of the land, the Adi Dravidas at the bottom has been our brand of colour bar, worse than the South African apartheid. Branded as Sudras and Chandalas, denied all avenues of progress, treated worse than animals even in 1982, the hewers o. wood and drawers of water, our people were the victims of heartless, harsh deminance by the so called gods on earth.

Brave thinkers like Buddha, Mahavira, Thiruvalluvar, the Siddars, Swami Vivekananda, Swami Dayananda Basava, Pothana and Vallalar, condemned caste.

Mahatma Jyothibhai Phule in Patna inspired Dr. Ambedkar by fighting narrow orthodoxy.

Periyar the lion of Erode, through his self respect movement very boldly exposed the evils of caste and went to the very root of every thing. He questioned the santity of Sastras and rituals which reduced our people to perpetual slavery and darkness.

For over sixty years, he carried on a relentless compaign against tomfollery and cock and bull stories. He wanted selfrespect to the fallen people.

He had brilliant lieutenants, like Comrade Alagirisami. Anna was his most brillant disciple. He roused the masses from slumber and now his ideas are very popular in Tamil Nadu.

Comrade Muthu, the husband of Mrs. Sathiavani, was an ardent follower of the self-respect movement. He taught his wife the elements of the dynamics of social change, put courage into her and trained her has an ace orator.

In the forties, I have heard Mrs. Muthu thundering against caste in strong attractive Tamil.

Sometimes she was hecked - questioned and her meetings were sought to be distrbed. She rose with the strom. Her fury roused, she lashed out against the opponents and held her round. I always respect her has a great emancipator of women from superstititon and narrow thoughts.

As an ardent disciple of Dr. Ambedkar she put heart into the depressed classes and fights for justice.

She has toured many lands and has first hand knowledge of world.

As a follower af anna, she has gone to jail and even while she has pregnant, she courted imprisonment.

Her recent record as Minister and Leader of the A. I. A. D. M. K. Group in Parliament is very well known.

As a devoted disciple of Periyar, I give first mark to her thundering against narrow bigotry and superstition.

Mrs. Muthu writes very clearly. She has narrated her experiences in "My Agitation". I request her to write books on the uplift of our people particularly women.

On this happy occasion, I wish her long life, dedicated to the ideals and ideals of Periyar, Anna and Dr. Ambedkar.

---

# ARE YOU ON THE LOOK OUT FOR AN IDEAL LOCATION FOR YOUR SSI UNIT...

*SIDCO INVITES YOU TO TAMILNADU.*

## THE REASONS WHY...

Infrastructure Facilities by way of factory sheds at reasonable cost on liberal Hire Purchase terms.

Developed Plots at nominal cost on easy terms.

Sheds and Developed Plots available not only in urban centres but also in backward areas/eligible for State and Central Capital Investment Subsidy.

Choice with many locations.

Good communication and water facilities.

Assured power supply.

Subsidy on Power Supply for 3 years.

Interest Free Sales Tax Loan.

Assistance to obtain Government departments/organisations' orders.

15% Price preference for SSI products in Government departments/organisations' purchases.

401 Items reserved for purchase from SSI sector.

Supply of scarce and controlled Raw materials at approved rates through chain of depots.




**TAMILNADU SMALL INDUSTRIES DEVELOPMENT CORPORATION LTD**

(A Govt. of Tamilnadu Enterprise)

No. 5, Greams Road, Madras-600 006. Phone: 82171 Grams: TANSIDCO Telex: 041-7584

*Best compliments from .*

Phone : 443979

LEO REAL ESTATES

**Leo Real Estates (Regd.)**

8. (Upstair) Madley Road, T. Nagar, Madras-17.

# சத்தியவாணிமுத்து!

—நீரோட்டம் அடியார்—

ஈராயிரம் ஆண்டுகள் அன்னைக் குலத்தின் உரிமைகள் அடுப்பிலும் துடுப்பிலும் இன்னலிலும் கண்ணீரிலுமே கரைந்து போன வரலாற்று வீதியிலே ஒளிச்சுடர் ஏந்தி வந்த ஒப்பற்ற வீராங்கனை!

மேட்டுக்குலத்து
மேன்மங்கையர்!
பங்களாப்
பாவையர்!
பிறப்பால் உயர்ந்தோர் எனும்
ஆணவவாதத்து அணங்குகள்

—இவர்கள் மட்டுமே இந்நாட்டு அரசியலில் ஏற்றம் பெற முடியும்; கொற்றத்தவிசிருக்க முடியும் என்ற நிலையைக் குலையோடு பறித்தெறிந்தவர்!

வாய்திறந்தால் தீக்கங்குகள் தெய்வங்களையே சுட்டெரிக்கும்! கோவில்களைத் தலைகுப்புறப் போட்டுவிடும்!—என்று பாருலகமே பயந்து நடுங்கிய பெரியாரின் அணிவகுப்பில் அந்நாளில் கலந்துகொண்ட அழகுச்சிறுமி!

களப்போர் – காராக்கிருகம் – கடுஞ்சொல் இவைமட்டும் கிடைக்கும் இந்தக் காஞ்சிபுரத்து அண்ணாவின் பக்கம் நின்றால்...என்று கருதிய அந்நாளில்...அண்ணாவின் அணியில் மகளிர் தலைவியாய் நின்ற தமிழகத்து ஜோன்-ஆப்-ஆர்க்!

சொல் மழை பொழியாத
மாநாடு இல்லை!
கொடி யேற்றி வைக்காத
ஊர் இல்லை!
கொள்கை முழக்கம்
புரியாத கூட்டம் இல்லை!
சிறைபுகாத போராட்டம் இல்லை!

எனச் சொல்லத் தகும் அளவிற்கு சோபித வரலாற்றுக்குச் சொந்தக்காரர்!

அன்றொருநாள் பாரதக் கதையில் பலபேர் முன்னிலையில் சேலை உரிந்த கதை கேட்டதுண்டு!

பாண்டிச்சேரியில் இந்த அன்னையின் சேலை உரிய பாதகக் கட்சியினர் - பாரதக்கட்சியினர் முயன்ற பாவச்செயல் கேட்டால்... பதைக்கும் நெஞ்சம்! சொல்ல வாய் பதைக்கும்!

போர்க்களங்களில் பூபாளம் பாடி
சிறைக் கோட்டங்களில் சிந்து பாடி
பட்டி தொட்டிகளில் பரணி பாடி

இன்னமும் கொடுமைப் படுத்தப்படுவோருக்காகக் கூவிக் கூவிக் கொள்கையாளர் செவியில் செந்தேன் பாய்ச்சும் செந்தமிழ் நாட்டுக் கருங்குயில்தான் சத்தியவாணிமுத்து!



வாட்டம் ஏற்பட்டு சோக
மூட்டத்தில் மூழ்கியதில்லை-
தந்தையார் நாகை
நாதர் மறைந்த போதும்!
வருத்தம் கொண்டு - வாழ்வே
முடிந்தது எனக் கொண்டு
பொது வாழ்விலிருந்து குகை
வாழ்வுக்குப் போகவில்லை
கணவர் முத்து கல்லறை
போனதால்!
தன்னந்தனியாய்ப் போரிடும்
பெண்ணாய் - தளராத
உளம் கொண்ட தலைவியாய்
பெண்குலம் இவரது
பெயரை உச்சரிக்கிற
போதெல்லாம்—
உத்வேகம் தரும்
மந்திரம் போல் வாழும்
மறைத் திரு மிகு
மாதர்குல மாணிக்கமாய்

இன்றும் வாழ்கிறார்—சத்தியவாணிமுத்து!

அறிஞர் அண்ணா தமது அமைச்சரவை கிரீடத்திற்குத் தேர்ந்தெடுத்த கோமேதகம்!

— தாழ்த்தப்பட்டோரின் தலை அறுக்க நினைத்த தறுக்கர்களை எதிர்த்து "அமைச்சரவைக்குள்ளே" ஜான்சிபோர் நடத்திய தாய்ப்பறவை!

அரசியல் வாழ்வையும்—தனிவாழ்வையும் அறுத்தெறிய அக்ரமக்காரர்கள் முனைந்தபோது வள்ளல்தோட்டம் நோக்கிப் பறந்து வந்து புகழ் ஒளி பெற்ற கிளி!

சத்தியவாணிமுத்து !—ஒரு தனிப் பெண் இல்லை! வரலாற்று நெடுஞ்சாலை! பரிணாமத்தின் சின்னம் கொலுவிருக்கும் பொருட்காட்சி சாலை!

திராவிட நாடு பெறுவோம்
எனக் கூறிய இயக்கத்தின்
முன்னோடியாக இருந்தவர்
எனினும்......
வரலாற்று வளர்ச்சியில்
பரிணாம மாற்றத்தில்
அகில இந்திய அண்ணா
தி. மு. கழகத்தில் அங்கம் பெற்று...
டில்லிச் சிம்மாசனத்தில்
அமைச்சராய் வீற்றிருந்த
பெருமைபெற்றவர்!

டில்லியின் பிடியிலிருந்து விலகவேண்டும் எனப் போர்க்கோலம் பூண்ட நாட்கள் என்னே?

அதே டில்லியில்—புரட்சித் தலைவரின் ராஜதந்திரத்தால்—அதே இயக்கத்தைச் சார்ந்த பெண் - அமைச்சராய் வீற்றிருந்த காலம் என்னே?

இதனால்தான் - சத்தியவாணி முத்துவை - திராவிட இயக்கத்துப் பரிணாம வளர்ச்சியின் சின்னம் எனக்கூறுகிறோம்!

(தி. மு. கழகத்தின் இட்சுமணன் கூட இந்தப் பரிணாம வளர்ச்சியின் சின்னமாய்த்தான் மக்களவைத் துணைத்தலைவராய் அமர்ந்திருக்கிறார்.)

இந்தப் பரிணாம வளர்ச்சியின் பொருள் சரணாகதியுமில்லை; சமரசமும் இல்லை! உரிமைகளை விட்டுக் கொடுக்காத உறவுகளே!

இன்னும்—சத்தியவாணிமுத்து அவர்களின் பேச்சிலும்—எழுத்திலும் தனி வாழ்விலும்......

பெரியாரின்
பகுத்தறிவுச்சுடர்
மங்கவில்லை !
அண்ணாவின்
தமிழ்க்காதல்
பட்டுப்போய்விடவில்லை!
தமிழ்நிலத்தின் மீதான
தனிப்பற்று
இற்றுப்போய்விடவில்லை !

இமயமலைக்குப் போன சில காக்கைகள் வெண்ணிறமான துண்டு!

ஆனால்—இந்தச் சத்தியவாணி முத்து எனும் மைனா செங் கோட்டைச் சிங்காதனத்தில் இருந்த போதும் தென்பாங்கே பாடியது.

இப்போதும் மாநிலங்களவையில் மாத்தமிழகத்தின் மங்கல வாழ்த்தையே பாடுகிறது! இனியும் பாடும்!

# மணிவிழாக் காணும் மங்கையர்க்கரசி!

—கலைக்களஞ்சியம் கருணாகரன்—



1. அணிமணி பூணு தரசியற் பூண்டே
மணிவிழாக் காணும் மங்கையர்க் கரசி
வாய்மையின் சத்திய வாணி முத்தாம் !
தாய்மையின் நெஞ்சினள் தகவுடை அன்னை !
5. நலங்கெழு சானகி - நாக நாதன்
இலங்கெழு மகளாய் இருபது மூன்றில்
செங்கற் பட்டெனும் சிறப்புடை நகரில்
தங்கப் பதுமையாய்த் தான்பிறப் பெடுத்தனள் !
9. பள்ளி சென்ற பருவப் போழ்தில்,
உள்ளிய தொண்டு உணர்வால் தந்தை,
பெரியார் தம்முடைப் பேரியக் கத்தில்
உரிமையோ டிணைந்து ஊக்கமோ டியங்கினள் !
13. நாற்பத் தெட்டில் நடந்த இந்தி
ஏற்க மறுத்த எதிர்ப்புப் போரில்,
அன்னை சத்திய வாணி முத்தும்,
சென்னைச் சிறைக்கே ஏகினள் ! மற்றும்,
17. பார்ப்பன இனத்தின் பழுதிலாக் காவலன்
ஆர்த்தே கொணர்ந்த அறனில் நோக்கின்
குலத்துக் கேற்ற கல்வித் திட்டம்,
'நலங்கெட அழிக்கும் நமையெலாம்' என்றே

தான்நிறை சூலியாய்த் தளருடல் நிலையளாய்
தான்சிறை மீண்டும் தனித்தே கினளே!
23. அறுபது இரண்டில் அரசுக் கெதிராய்,
பொருள்விலை யேற்ற எதிர்ப்புப் போரில்,
குதித்தனள்! கொடிய வேலூர்ச் சிறையில்
மதிப்பறி யாமல் மாதம் மூன்றும்,
அதற்கு மேலும் அம்மையைத் தள்ளினர்!
28. இதற்கிடை அம்மையார் ஈன்றனள் அன்புச்
செழியன் என்னுஞ் சேய்தனைப்! பின்பு,
30. எழிலுடை, "அண்ணா அநாதை இல்லந்"
தன்னை எழுபத் தொன்றில் திறந்தனள்!
32. அன்னை முயல்வால், அம்பேத் கார் பெயர்,
அமைந்தகல் லூரி வடசென் னையிலே,
அமைத்தனர் தமிழக அரசினர் தாமே!
35. அண்ணா அமைத்த ஆட்சிப் பொறுப்பில்,
எண்ணியே இவரின் ஈகத் தொண்டினை,
நலவாழ் வுத்துறை, தாழ்த்தப் பட்டோர்,
நலத்துறை அமைச்சுப் பொறுப்பினை நல்கினர்!
39. அப்பணி திறம்பட ஆற்றினர் அம்மையே!
இப்பணி ஈங்கு இவராற் றுவது,
பாராள் மன்ற உறுப்பினர் பணியாம்!
42. வீராங் கனையாய் விளங்கிய அம்மையார்,
பொதுநலத் தொண்டில் பொழுதெலாங் கழித்தார்!
முதுமைப் பருவம் மூண்ட பொழுதும்,
இளமை உணர்வோ டியங்கியே நாட்டிற்
குளமகிழ் வுடனே உழைத்து வாழ்வில்
அறுபது ஆண்டினைக் கடந்துளர்! அதனால்,
அரும்பெரும் மணிவிழா அமைத்தே அம்மையை
கடிநலங் கொண்டே காலமும்,
நெடிது வாழ வாழ்த்துகின் றேமே!

# தமிழகம் பெற்ற தனிப்பெரும் தலைவி

எஸ். சண்முகசுந்தரம்
செயலாளர், மணிவிழாக் குழு.

அம்மையார் அவர்களின் மணிவிழாக் குழுச் செயலாளர் என்ற முறையிலும், 25 ஆண்டுகளுக்கும் மேலாக அம்மை யாருடன் பழகி வருபவன் என்ற முறையிலும், இந்தக் கட்டுரையினை எழுதத் துணிகிறேன்.

அம்மையாரிடம் ஒளிவிடும் அம்சங்களாக நான் காண்பவை தியாகம், திறமை, துணிவு ஆகும்.

முதலில் தியாகத்தைப்பற்றி விளக்க முனைந்தால், அம்மையாரின் 45 ஆண்டுக் காலப் பொது வாழ்க்கையை விவரித்தே தீர வேண்டும்.



எஸ். சண்முகசுந்தரம்
செயலாளர்
மணிவிழாக் குழு

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத் கார் ஆகிய சரித்திரம் மெச்சும் சமுதாயத் தலைவர்களிடம் பயிற்சி பெற்றவராக, பாடம் கற்றவராக இன்று அம்மையார் ஒருவரைத்தாம் காண்கிறோம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் தங்கள் தலைவராக இன்று ஏற்பது அம்மையார் அவர்களைத்தாம் என்று கூறினால் அது மிகையாகாது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அகில இந்திய ரீதியில் துவக்கிய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் சென்னை மாநகர் மகளிர் பிரிவின் தலைவியாகப் பணி புரிந்தவர் அம்மையார். அண்ணல் அம்பேத்கார் துவக்கிய பூனா ஒப்பந்த எதிர்ப்பு சத்தியாக்கிரகத்திலும் பங்குகொண்டவர் அம்மையார். அம்மையாரின் தந்தை திரு. நாகை நாதர் ஜஸ்டிஸ் கட்சியிலும், சுயமரியாதைக் கட்சியிலும், அகில இந்திய பகுத்தறிவாளர் சங்கத்திலும் தீவிர பங்கு கொண்டு பணியாற்றியவர் ஆவார். குழந்தைப் பருவம் முதல் தம் தந்தையாருடன் கூட்டங்களுக்குச் செல்லும் பழக்கமுடைய அம்மையார் உள்ளத்தில் தீண்டாமை ஒழிப்பும், பகுத்தறிவுக் கொள்கையும் இடம் பெற்றதில் வியப்பில்லை. அம்மையாரை மணந்த திரு. முத்துவும் சுயமரியாதைக் கொள்கையில் மிக்க ஈடுபாடு கொண்டவர்தாம். திரு முத்து 1938ல் தந்தை பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்டவர் என்பதை இன்று சிலரால் மட்டுமே நினைவு கூர முடியும்.

1923ல் பிறந்த அம்மையாருக்கு 1943ல் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமையிலும், தமிழறிஞர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை முன்னிலையிலும் திருமணம் நடைபெற்றது. பெரியாரும் அண்ணாவும் சேலத்தில் திரு. ஆர். கே. ஷண்முகம் தலைமையில் கம்ப இராமாயண நூலைக் கொளுத்தச் சென்றிருந்த காரணத்தினால் அம்மையாரின் திருமணத்தில் கலந்துகொள்ள இயலவில்லை.

தென்னிந்திய நல உரிமைக் கழகம், திராவிடர் கழகமாக மாறிய 1944ம் ஆண்டு சேலம் மாநாட்டில் கலந்து கொணடவர் அம்மையார். சரித்திரப் பிரசித்தி பெற்ற பாண்டிச்சேரி திராவிடர் கழக மாநாட்டிலும் பங்கு பெற்றவர் அம்மையார். அதுமட்டுமலல, 1944 முதல் 1949 வரை-அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் பிறக்கும் வரை திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினராகவும் அம்மையார் பணியாற்றியுள்ளார்.

கொட்டும் மழையில் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சென்னை, ராயபுரம், ராபின்சன் பூங்காவில் அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் கட்சியைத் துவக்கியபோது தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றவர் அம்மையார். அம்மையார் கொடியேற்றி வைத்த மாநாடுகள் பலப்பல. தலைமை உரையும், வரவேற்பு உரையும் நிகழ்த்திய மாவட்ட, மாநில மாநாடுகள் ஏராளம். கலந்துகொண்ட கூட்டங்கள் கணக்கில் அடங்கா. அம்மையார்

பாதம் படாத பட்டிதொட்டி கிடையாது. பேச்சைக் கேட்காத கிராமம் இல்லை என்று துணிந்து கூறலாம்.

சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமுதாய சீர்திருத்தம், பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு ஆகியவற்றில் அம்மையாருக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. சமுதாயக் கொள்கையைப் பொறுத்தமட்டில் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றார் அண்ணா. அதனை அம்மையார் உட்பட கழகத் தலைவர்கள் அனைவரும் ஏற்றனர், 1957ல் தி. மு. க. சட்டமன்றத் தேர்தலில் குதித்தபோது, அம்மையார் சென்னை பெரம்பூர்த் தொகுதி எம். எல். ஏ. ஆகி, அண்ணாவுடன் சட்டமன்றம் சென்று அமர்ந்தார்.

அம்மையார் தி. மு. க. வில் இருந்த காலம் முழுவதும் அதன் செயற்குழு பொதுக்குழு உறுப்பினராக இருந்தது மட்டுமல்ல, மகளிர் தலைவியாகவும் கொள்கை பரப்புச் செயலாளராகவும் சிறப்புறப் பணியாற்றியுள்ளார். 1953ல் மும்முனைப் போராட்டம், 1957ல் பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி போராட்டம், 1962ல் விலைவாசிப் போராட்டம், 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உட்பட பல போராட்டங்களில் கலந்து கொண்டவர் அம்மையார். அம்மையார் ஒதுங்கிய போராட்டமும் இல்லை, அம்மையாரை ஒதுக்கிய போராட்டமும் இல்லை. சிறைக்கு அஞ்சாத சிங்கமாக—சித்திரவதைக்குத் தலை வணங்காத சிறுத்தையாகத் திகழ்ந்தவர் அம்மையார். மறியல் போராட்டமா? கருப்புக் கொடி போராட்டமா? எதற்கும் அஞ்சமாட்டார். முன்னணியில் நிற்பார். முன் உதாரணமாக விளங்குவார். தடியடியா? துப்பாக்கிச் சூடா? சிறையா? சித்திரவதையா? கண்ணீர்ப் புகையா? கசையடியா? எதற்கும் கலங்கமாட்டார், களிப்புடன் அதனை ஏற்றவர் அம்மையார்.

13-3-59 அன்று தமிழகச் சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினராக வீற்றிருந்த நேரத்தில், ஆகாஷ்வாணியை வானொலி என்று மாற்றக் கோரினார். அம்மையார் தமிழகச் செய்தித் துறை அமைச்சரானதும் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. கே. கே. ஷாவுடன் தொடர்பு கொண்டு ஆகாஷ்வாணியை வானொலி என்று மாற்றிக் காட்டினார்.

அம்மையார் செய்தித்துறை அமைச்சராக மட்டுமல்ல, சுகாதாரத் துறை, விவசாயத் துறை, அரிசன நலத்துறை, மகளிர் நலம், குழந்தைகள் நலம், மீன் வளம் உட்படப் பல துறைகளுக்கு அமைச்சராகப்பொறுப்பேற்றுத் தம்சாதனையின்

முத்திரைகளைப் பதித்துள்ளார்.

1974ல் அம்மையார் தி.மு.க.விலிருந்து விலகினார். பின்னர் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தை நிறுவினார். தம் கழகத்திற்குக் கொடி வடிவம் தந்தார். சட்ட திட்டங்களை வகுத்தார். ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்தார். நூற்றுக்கணக்கான கிளைகளைத் தோற்றுவித்தார். மாநாடுகளை நடத்தினார். தாம்பரத்தில் நடைபெற்ற மாநாடும், சேத்துப்பட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டமும் வரலாற்றுச்சிறப்புடையதாகும். தமிழகமெங்கும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக்கழகத்தின் கூட்டங்கள் நடைபெற்றன. பின்னர் அம்மையார் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வில் இணைந்தார். 1957 முதல் 1962 வரையிலும், 1967 முதல் 1971 வரையிலும் 1971 முதல் 1976 வரையிலும் அம்மையார், தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கு, சென்னை, பெரம்பூர்த் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 முதல் 74 வரையில் தமிழக அமைச்சராகவும் விளங்கினார்.

பின்னர் அ.இ.அ.தி.மு.க. சார்பில் தமிழக மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சில மாத காலம் பணியாற்றினார். 1978 ஏப்ரல் முதல் மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்து வருகிறார். பார்லிமெண்ட், ராஜ்யசபை இரண்டுக்கும் அ.இ.அ.தி.மு.க. கட்சித தலைவராக விளங்கி வருகிறார் அம்மையார்.

அம்மையாரின் தகுதியையும் திறமையையும் தியாகத்தையும் மிக நன்றாக அறிந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அம்மையாரைத் தமிழக மேல் சபைக்கும், மத்திய மேல் சபைக்கும் அனுப்பி வைத்ததுமட்டுமல்ல, 1979 ஆகஸ்டில் திரு. சரண்சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் காபினெட் அந்தஸ்தில் இரு அமைச்சர்கள் இடம் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகிய நேரத்தில், அம்மையாரை சமூக நலத்துறை அமைச்சராக்கி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்மீது தமக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் திரு. எம். ஜி. ஆர். வெளிப்படுத்தினார். பழுத்த அரசியல் அனுபவம் பெற்றவரும் மாநில அமைச்சராகப் பணியாற்றியவருமான அம்மையாரின் மூலம், மாநிலங்கள் அவையில் அ.இ.அ.தி.மு.க. கருத்துக்கள் ஒலிக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனும் பெரு நோக்குடனும் முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அம்மையாரை எம். பி. ஆக்கியுள்ளார் என்று நான் கருதுகிறேன். தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றுவதில் அம்மையார் முழு நிலவாகத் திகழக் கூடியவர்,

திராவிட பாரம்பரியத்திலிருந்து வந்தவர்களில் காபினெட் அந்தஸ்தில் மத்திய பெண் அமைச்சராக முதலில் அமர்ந்தவர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து சென்று, மத்திய அரசில் காபினெட் அமைச்சர் அந்தஸ்தில் அமர்ந்த முதல் பெண் அமைச்சர் என்ற பெருமையையும் அம்மையார் பெற்றுள்ளார். இத்தகைய கௌரவத்தையும் வாய்ப்பையும் வழங்கியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். என்பதை நினைத்துப் பார்க்கும்போது உள்ளம் பூரிக்கிறது.

அம்மையாரை 1974ல் அமைச்சர் பதவியில் இருந்து விலக்கிய கலைஞர் தலைமையிலான தமிழக அரசு, 1976ல் மத்திய அரசால் விலக்கப்பட்டது.

பெரியாரின் சித்தாந்தமான ''ஆணுக்குப் பெண் அடிமை இல்லை'', ''சமுதாயம் முன்னேற ஆண், பெண் சம உரிமை தேவை'' என்பன அம்மையாரைக் கவர்ந்தன. மூடப் பழக்கம் அகல, சாதிகள் ஒழிய, கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம், சுயமரியாதைத் திருமணம் அவசியம் என்பவர் அம்மையார். ''ஆலயம் செல்வதில்லை, ஆண்டவனை வழி படுவதில்லை' என்று பெரியார் கூறியதை ஏற்ற அம்மையார், ''பெண்கள் நெற்றியில் பொட்டு இடுவது அழகைப்பெருக்கவே, ஆத்திக வழியில் தீவிரம் காட்ட அல்ல'' என்று அடித்துப் பேசியவர். ''நாங்கள் இந்துக்கள் அல்ல, திராவிடர்கள். எங்கள் ஜாதி திராவிடஜாதி, எங்களுக்கு மதம் இல்லை, எங்கள் வாழ் வில் ஒளி இல்லை, மகிழ்ச்சி இல்லை, துக்கம்தான் துணை, எனவே அணிகிறோம் கருஞ்சட்டை', என்றார் பெரியார். அதனை ஏற்று, கருப்புச் சேலை கட்டிக்கொண்டு அம்மையார் பேசிய கூட்டங்கள் மிகப்பல ஆகும்.

பகுத்தறிவு இயக்கம் படைதிரட்ட முடியாத காலத்தில், வைதீக புரியினர் வீசிய இழிமொழி பழிமொழிகளைத் தாங்கிய தோடு, சொல்லடியையும் கல்லடியையும் இன்முகத்துடன் ஏற்றுத் தலைநிமிர்ந்து அன்றுமுதல் இன்றுவரை நின்று வருப வர். நிலைத்து வருபவர் அம்மையார். காரணம் அம்மையார் சொற்பொழிவில், வலிமை, உறுதி, தெளிவு, திண்மை, கடுமை, ஆவேசம், காணப்படுவதை இன்றும் காணலாம். தாழ்த்தப் பட்டோர் பிரச்னையை,சமுதாயபிரச்னையாககருதாமல் தேசியப் பிரச்னையாகக் கருதி வருபவர் அம்மையார். 20-6-57 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் அண்ணா முழங்கினார், ''அரிசன முன்னேற்றம் என்பது தேசியப் பிரச்சனை'' என்று.

மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் தருமாம்பாள் ஆகியோரின் வாரிசாக இன்று திகழ்ந்து வருப வரும் அம்மையார்தாம்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களால் 1953ல் கொண்டுவரப் பட்ட குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து அண்ணா துவக்கிய போராட்டம்தனில், கழகத் தலைவர்கள் சிலர் கைதான நேரத்தில் போராட்டத் தளபதியாக அண்ணா, அம்மையாரை நியமித்தார். பின்னர் அம்மையாரும் கைது செய்யப்பட்டு, காராக்கிரகத்தில் அடைக்கப்பட்டார். காங்கிரசு அரசு கருணை காட்டவில்லை. மாறாக அம்மையாரைக் காட்டில் கொண்டு சென்று விட்டது. பின்னர் கால் நடையாக வீடு திரும்பினார் அன்று.

இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்ற வேளையில் தம் இரண்டு வயதுக் குழந்தையுடன் 1965ல் சிறைக்குச் சென்றார் அம்மையார். ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' எனும் பாரதியின் வரிகளைக் கூறியவாறு சிறை ஏகினார் அம்மையார். ''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'' என சிரித்த முகத் துடன் செப்பினவர் அம்மையார். ''ஓடி வந்த இந்திப் பெண்ணே, கேள்— நீ தேடி வந்த கோழை உள்ள நாடு இதல்ல'' எனச் சூளுரைத்தவர் அம்மையார். 'போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும், ஏற்ற தொரு கருத்தை என் உள்ளம் சொன்னால், எடுத்துரைப் பேன், எவர் வரினும் நில்லேன். அஞ்சேன்' என புரட்சிக் கவிஞர் கூறியதற்கொப்ப வாழ்ந்து காட்டுபவர் அம்மையார்.

அம்மையாரின் உயிர் மூச்சு அரிசன முன்னேற்றமும் தமிழார்வமும் ஆகும். தமக்கு நேரும் கொடுமை கண்டு குமுறமாட்டார். ஆனால் தம் சமுதாய மக்களுக்குக் கொடுமை நேர்கிறதென்றால் அதைப் பார்த்துக்கொண்டு வாளாயிருக்க மாட்டார். கொள்கைப்பற்றில் உறுதிமிக்க அம்மையார் தோல்வி கண்டு துவளவும் மாட்டார், வெற்றி கண்டு எக்காள மிடவும் மாட்டார். சிந்தனைத் தெளிவு, செயல் திறன், தியாக உள்ளம், கடும் உழைப்பு, அஞ்சா நெஞ்சம், ஆழமான கருத துக்கள் அனைத்தும் கொண்டவர் அம்மையார். அம்மையாரின் இதய தெய்வமாக விளங்கியவர் அண்ணா. அண்ணாவுடன் சிரித்துப் பேசுவதில் அம்மையாருக்கு அலாதி ஆர்வம். ஆம்.

1962ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தின்போது அம்மையார் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். அண்ணா

தடுத்தும் கேளாமல் அம்மையார் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறைக்கும் சென்றவர். அம்மையார் அனுபவித்த துன்பம், துயரம், தொல்லை, அம்மம்மா! அளவிட முடியாதன.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"— "பெண்கள் இந்த நாட்டின் கண்கள்" — "தங்கக் குவளை களாகப் பிறக்கும் குழந்தைகள் போஷாக்குக் குறைவு காரண மாகத் தகரக் குவளைகளாக மாறுகின்றனர்" என்று அண்ணா அடிக்கடி கூறுவது அம்மையார் மனத்தில் ஆழமாகப்பதிந்தன. அம்மையார் அடிக்கடி சொல்வதுண்டு—"அரசியலில் வெறும் கூழாங்கல்லாக இருந்த என்னை அண்ணாதான் சுடர் விடும் வைரம் ஆக்கினார்" என்று.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்மீது தாம் கொண்டிருக்கும் மாசு மறுவற்ற அன்பை நன்கு உணர்ந்த அண்ணா, முதலமைச்சர் பதவி ஏற்றதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புதிய தமிழக அரசு சிறப்பாகச் சேவை செய்ய வேண்டும் என் பதை மனத்தில் கொண்டு, தனி இலாகாவை உருவாக்கி, தம்மை அரிசன நல அமைச்சர் ஆக்கினார் அண்ணா என்று பெருமிதத்துடன் அம்மையார் கூற, நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

திறமைக்கு எடுத்துக்காட்டாக, அம்மையார் சாதித்த பல சாதனைகளைப் பட்டியல போட்டுக் காட்ட முடியும். குறுகிய காலத்தில் அம்மையார் செய்து முடித்த ஒருசில நல்ல காரியங் களை மட்டும் குறிப்பிட்டால் போதுமெனக் கருதுகிறேன்.

தம் தொகுதியைச் சேர்ந்த வியாசர்பாடியில் பெருமுயற்சி எடுத்து டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரியை நிறுவினார். சுயமரியாதைத்திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியதோடு, கலப்பு மணம் புரிந்துகொள்ளும் தம்பதியர்க்குத் தங்கப்பதக்கம் வழங்க வும் முனைந்தார். ஏழை மக்களுக்குத் தீ பிடிக்காத வீடுகளைக் கட்டித் தர திட்டம் திட்டப்பட்டதும் அம்மையார் காலத்தில் தான். அம்மையார் தொகுதியைச் சேர்ந்த பட்டாளத்தில், 'ரூபாய்க்குப் படி அரிசி'த்திட்டம் 15-5-67 அன்று சென்னையில் அமல் செய்யப்பட்டது. அம்மையார் படி அளந்து அன்று திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

சென்னை அம்பத்தூரை அடுத்த ஒரகடம் பகுதியில் அண்ணா அனாதை இல்லம் எனும் சமூகப்பணி இல்லத்தை 1971ல் தொடங்கி, இன்றும் நடத்தி வருகிறார். அங்கு

குழந்தைகள் காப்பகம், மகளிர் தொண்டகம், தையல் கூடம் அனைத்தும் நடத்தப்பட்டு வந்தன. தற்போது நிதி வசதி இன்மை காரணமாக அனாதைக் குழந்தைகள் மட்டும் அங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

'அன்னை' எனும் தமிழ்த் திங்கள் இதழை மகளிர் முன்னேற்றத்திற்காக, சில ஆண்டுக் காலம் நடத்தினார். அதுமுதல்தான் அம்மையாரை "அன்னை சத்தியவாணி முத்து" என்று அழைத்து வருகிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அம்மையார் எழுதிய "எரிக்கப் பட்டாள்" எனும் நூல் வரலாற்றுச் சிறப்புடையது ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'எனது போராட்டம்' எனும் நூலை அம்மையார் எழுதி மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே தலைமையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் வெளி யிட்டார். ஒவ்வொருவரும் - குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமு தாயத்தினர் படிக்க வேண்டிய அவசியம் கொண்டது இந்தப் புத்தகம் என்று சொன்னால், அது சரியாகும். அடுத்து, அம்மை யாரின் சட்டசபைச் சொற்பொழிவுகளைத் தொகுத்துப் புத்தக மாக வெளியிடும் முயற்சியும் உள்ளது. 'எனது போராட்டம்' எனும் புத்தகம் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களை அரசியல் தெளிவுடன் செயல் படச் செய்தவர் அம்மையார். அதுமட்டுமல்ல, சமூக வாழ்வில் முன்னேற விழிப்புணர்ச்சியை ஊட்டியவரும் அம்மையார்தாம்.

அம்மையார் ஆற்றிய பல முக்கியமான உரைகளில் மிக முக்கியமான உரை 1957ல் முதுகுளத்தூர்க் கலவரம் குறித்துப் பேசியதைக் குறிப்பிடலாம். அப்போதைய போலீசு அமைச்சர் திரு. பக்தவத்சலனார் அவர்கள் பதில் கூறுகையில் அம்மை யாரைப்பற்றிக் கூறுகிறார்: "இந்த விவாதத்தில் கலந்துகொண் டவர்களில் எதிர்க் கட்சியில் வீற்றிருக்கும் பெண்மணி அவர்கள் உருக்கத்தோடு பேசினார்கள். சர்க்காரையும் தாக்கிப் பேசி னார்கள்" என்று 30-10-57 அன்று தமிழகசட்டப் பேரவையில் குறிப்பிட்டார். முதுகுளத்தூர்க் கலவரத்தில் தேவர்களால் படுகொலைக்கு ஆளான தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டும் அன்று அம்மையார் கண்ணீர் உரையைக் காணிக்கையாக்க வில்லை; போலீசு துரைத்தனத்தின் துப்பாக்கிச்சூடு காரண மாக மாண்ட தேவர் சமுதாயத்தினருக்காகவும் அம்மையார் அன்று கண்ணீர் அஞ்சலி தெரிவித்தார். இத்தகைய செயல் களால் மனித உயிர்கள் எதுவும் பறிக்கப்படக் கூடாது என்ற பொது நோக்கு, கட்சி வித்தியாசமோ, வகுப்பு வித்தியாசமோ பார்க்காது கண்டிக்கும் திராணி அம்மையார் பேச்சில் அழுத்தம் திருத்தமாக அன்று வெளிப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்தால் தாழ்ந்தவர்கள் அல்லர். சமுதாயத்தின் அடிப்படையில் தாழ்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபகாரம் செய்து பயனில்லை, உரிமைகள் தரப்படவேண்டும் என்று அடித்துப் பேசி வருபவர் அம்மையார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் பெற்றுத் தருவதில் பண்டித ஜவஹர்லால் நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, மத்திய சட்ட அமைச்சர் பதவியைத் துறந்து வெளியே வந்தவர் டாக்டர் அம்பேத்கார். தமிழகத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப்போராடிய நேரத்தில், அமைச்சர் பதவியைத் துச்சம் எனக் கருதித் துறந்தவர் அம்மையார். அதன்மூலம் "அம்பேத்கார் அடிச்சுவட்டில் அம்மையார்" என்பதைப் பாருக்குப் பறை சாற்றினார் அம்மையார். தாம் வகிக்கும் அமைச்சர் பதவி முக்கியமா? தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன் முக்கியமா? என்ற பிரச்னை எழுந்த போது அமைச்சர் பதவி முக்கியம் அல்ல என்று முடிவு எடுத்தவர் அம்மையார்.

இதேமாதரி 30 ஆண்டுகளுக்கு முன்பு தம் குடும்ப நலன் முக்கியமா? கட்சிப் பணி முக்கியமா? என்ற பிரச்னை எழுந்த போதும் குடும்ப நலனைக் கவனிக்காமல், கட்சிப் பணியில் தீவிரமாக ஈடுபட்டதன் விளைவு, தம் இரு மகன்களும் இரு மகள்களும் டாக்டராகவோ வக்கிலாகவோ, இஞ்சினீயராகவோ அரசாங்க உயர் அதிகாரியாகவோ, ஆக முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. சில தலைவர்கள் தம் குடும்பத்தின் பால் முழுக் கவனம் செலுத்தினர். கட்சிப் பணியைப் பகுதி நேர அலுவலாகக் கொண்டனர். ஆனால் அம்மையார் தம் குழந்தைகளின் கல்வி அறிவில் போதிய கவனம் செலுத்தவில்லை. கட்சிப்பணியிலேயே தீவிரமாக ஈடுபட்டுவந்தார். அம்மையாரின் மனம் கட்சி நலனிலும், தம் சமுதாய மக்களின் நலனிலும் லயித்திருந்தது - லயித்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறவே, இதனை இயம்புகிறேன்.

இறுதியாக அம்மையாரின் திறமைக்குச் சான்றாக உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ஆர். எஸ். சர்க்காரியா தம் அறிக்கையில் 186ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதைக் குறிப்பிடலாம். அம்மையாரின் நிர்வாகம் திறமையானது, ஒழுங்கானது, முறையானது என்ற முறையில் பாராட்டியிருப்பதை யாரும் ஒதுக்கிவிட முடியாது.

கடைசியாக அம்மையாரின் துணிவுக்கு எடுத்துக்காட்டாகப் பல சம்பவங்களைக் கோவைப்படுத்திக் காட்டமுடியும் எனும்

அளவுக்கு அபாரமான துணிவினைப் பெற்றவர் அம்மையார். என் கட்டுரை மிகவும் நீண்டுவிட்ட காரணத்தினால், துணிவுக்கு எடுத்துக்காட்டாக ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் எடுத்துச் சொன்னால், அது "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல் அமையும் என்று கருதுகிறேன்.

அந்தச் சம்பவத்தைக் கூறுமுன் என்னைப்பற்றிச் சில வரிகள்:—

தஞ்சைப் புயல் நிவாரண நிதியாக லாரிகளில் துணிகளை நிரப்பி அந்தக் காலத்தில் அதாவது 1952ம் ஆண்டில் ரூ. 25000 வசூலித்துச் சென்னையில் மிகப்பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்ற காலந்தொட்டு, சுமார் 30 ஆண்டு களுக்கும் மேலாகத் தந்தை பெரியார்மீது பற்று வைத்தும் பேரறிஞர் அண்ணா மீது பாசம் வைத்தும் தமிழக அரசியலை மிக உன்னிப்பாகக் கவனித்து வருபவன் மட்டுமல்ல, சென்னை கொண்டியம்பதியில், சில ஆண்டுக் காலம் செயலாளராக இருந்து இரண்டு தி.மு.க. சார்பு மன்றங்களை வெகு சிறப்பாக நடத்தியவன் நான்; கட்சிப்பணியினில் நாட்டம் காட்டியவன் நான்.

அப்படிப்பட்ட நான் முன்னாள் முதல்வர் கலைஞரைக் குறைத்து மதிப்பிட மாட்டேன். அவர் திறமை சாதாரண மானதன்று, அதனை விவரிக்கத் தொடங்கினால் பக்கம் பக்க மாக எழுதலாம். சுருக்கமாகச் சொல்வதானால் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும், வாதிடும் சாதுரியமும் பெற்றவர் மட்டுமல்ல, கட்சித் தொண்டர்களிடையே அழுத்தமான பிடிப்பும் உடைய வர். அப்படிப்பட்டவர் சர்வ வல்லமை படைத்த முதல்வர் பதவியில் உறுதியாக அமர்ந்து இருக்கிறார். அமைச்சர் பதவியைப் பறிகொடுத்த நிலையில் இருந்த அம்மையார், நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றமாண்பு மிகு முதல்வரைப் பார்த்து, தமிழக சட்ட மன்றப் பேரவையில் 4-4-75 அன்று, நேருக்கு நேராகக் கூறுகிறார், "தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகி நெம்பர் ஒன் இந்த நாட்டின் முதலமைச்ச ராக இருக்கிற கருணாநிதி அவர்கள்தாம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்" என்று.

கலைஞரைப் பின்னால் இருந்து யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பழித்தும் இழித்தும் தாக்கியும் தரம் கெட்டும் பேசலாம். ஆனால் எதிரில் நின்றுகொண்டு, இத்தனைத் துணிவோடு, கலைஞரைப் பார்த்து, இத்தகைய மிகக் கடுமையான வாசகத்தை பயன்படுத்திப் பேசியவர்கள், எனக்குத்தெரிந்த வரையில் அம்மையாரைத் தவிர, வேறு யாரும் இருக்க முடியாது என்றே கருதுகிறேன்.

முடிவாக நான் கூற விழைபவை அம்மையாரின் நினைப்பு எப்போதும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைப் பற்றியதாகவே இருக்கும் என்பது மட்டும் அல்ல, என்னென்ன திட்டங்களைத் தீட்டினால் என்னென்ன நன்மைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரும் என்பதனைச் சிந்தித்துச் செயல்படுத்தும் ஆற்றல் பெற்றவர் அம்மையார். எந்தவித நிர்ப்பந்தமும் இல்லாமல் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காமல், சுதந்திரமாக அமைச்சர் பதவியில் அம்மையாரைச் செயல்பட விட்டால், அது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பது என் கருத்து.

அண்ணாவின் தாரக மந்திரமாம்—"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" இவற்றை அம்மையார் மறந்தார் இல்லை. டாக்டர் அம்பேத்காரின் தாரக மந்திரமாம் கற்க, ஒன்று சேர், போரிடு (EDUCATE, ORGANIZE AGITATE) - இவற்றையும் அம்மையார் மறந்தார் இல்லை. பெரியார் அடிக்கடி கூறுவார்—நான் சொல்வதை நீங்களாகச் சிந்தித்துப் பார்த்துச் சீர் தூக்கிப் பார்த்து, சரி என்றுபட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் தள்ளி விடுங்கள் என்று. அதாவது ஒவ்வொருவரும் பகுத்தறிவுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினாரே பெரியார் அதனையும் அம்மையார் மறந்தார் இல்லை.

அம்மையார் எனக்கு என்ன செய்தார்கள் என்று எப்போதும் நான் பார்ப்பதில்லை. அம்மையாருக்கு நாம் என்ன செய்யலாம் என்பதையே நினைப்பவன் நான். நான் எழுதுவதால் அம்மையாருக்குப் பெருமை இல்லை. அம்மையாரைப் பற்றி எழுதுவதால் எனக்குத்தான் பெருமை.

அன்னை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும். புகழுடனும் நற்பெயருடனும் வாழ வேண்டும். பூரிப்புடனும் பெருமையுடனும் வாழவேண்டும். நலத்துடனும் நிம்மதியுடனும் வாழ வேண்டும். நண்பர்களும் உறவினர்களும் புடைசூழ வாழவேண்டும். இதுவே என் அவா.

இப்போது அம்மையாரின் மணிவிழாவினை விமரிசையாகவும் கோலாகலமாகவும் கொண்டாடுகிறோம். இதே போன்று, அம்மையார் பார்த்துப் பூரிக்கும் வண்ணம் அம்மையாரின் 75 வது பிறந்த நாள் விழா 80 வது பிறந்தநாள் விழா நூற்றாண்டு பிறந்த நாள் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் அனைத்து விழாக்களையும் நானே செயலாளராக இருந்து வெற்றிகரமாக நடைபெறச் செய்ய வேண்டும். இதுவே என் ஆசை.

———

# சாதனைகள் புரிந்த சத்தியவாணிமுத்து

—M. A. ஹக்கீம்

திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுடன் முப்பது வருட கழகப் பணியில் ஈடுபாடு கொண்டவன். 1957ல் அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலில் அம்மையாரைப் பெரம்பூர் தனித் தொகுதியில் நிறுத்தி வைத்தார்கள். அப்போது பெரம்பூர்த் தொகுதி மெட்ராஸ் லேபர் யூனியனிடம் இருந்தது. அது ஒரு கூட்டுத் தொகுதியாக இருந்தது. பொதுத் தொகுதி லேபர் யூனியன் தலைவர் பக்கிரிசாமி பிள்ளைக்குபோட்டியின்றி விட்டுக் கொடுத்துவிட்டுத் தனித் தொகுதியில் நிறுத்தினர். பொதுத் தொகுதியை ஏன் விட்டுக் கொடுக்கவேண்டும்? அதிலும் நம் வேட்பாளரை நிறுத்த வேண்டுமென்று கட்சியிலுள்ளவர்கள் எதிர்த்தபோதும் அறிஞர் அண்ணா அவர்கள் பக்கிரிசாமி அவர்கட்கு விட்டுவிட்டார்.

சூளை, புளியந்தோப்பு, குறுசடி என்கின்ற கல்யாண மேஸ்திரி தோட்டம், கொசப்பேட்டை எல்லாம் ரவுடிகள் நிறைந்த இடம். அடிக்கடி கலவரங்கள் நிகழக்கூடிய இடம். இந்த இடத்தில்ஒரு பெண்ணை நிறுத்தி வைக்கிறாரே என்று நாங்களெல்லாம் பயந்தோம். அண்ணா அவர்கள் மேடையில் அம்மையாரைப் பற்றிப் பேசும்போது நம் கட்சியில் இருப்பது 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' அந்தப் பெண்ணை நீங்கள் வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எனது தகப்பனார் ஜனாப் முகமது சாகிப் அவர்கள் யாருக்கும் தேர்தல் வேலைகள் செய்தது கிடையாது. ஆனால் அம்மையார் அவர்களுக்காக நேரடியாகவே தேர்தல் பணியில் ஈடுபட்டார். ஒவ்வொரு மசூதியிலும் தொழுகைக்கு வருபவர்களிடம் உதய சூரியனுக்கு ஓட்டுப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கட்சியில் இருப்பவர்கள் தீவிரமாக வேலை செய்து அம்மையார் அவர்கள் பொதுத் தொகுதியில் நின்ற பக்கிரிசாமி அவர்களைவிட அதிக வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர்களை எதிர்த்து நின்ற சோஷலிஸ்ட் கட்சி

வேட்பாளர் சாமுண்டீஸ்வரன் படுதோல்வி அடைந்தார். காங்கிரசும் தோல்வி அடைந்தது. அதிலிருந்து தொடர்ந்து 71 தேர்தல் வரை தொடர்ந்து அவர்கள் அதே தொகுதியில் நின்று மூன்று முறை வெற்றி பெற்றார்.

தமிழ்நாட்டிலேயே ஒரே தொகுதியில் இருபது வருடமாக கழகத்தின் சார்பில் போட்டியிட்டது அம்மையார் ஒருவர் தாம். கவிஞர் கண்ணதாசன் ஒருமுறை பேசும்போது, 'அவர்கள் பெரம்பூர்த் தொகுதியின் ராணி' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் அமைச்சரான பிறகு பல நன்மைகள் தொகுதி மக்களுக்குச் செய்துள்ளார்கள். அதில் குறிப்பிடத்தக்கது:

1) அம்பேத்கார் கவர்ன்மென்ட் ஆர்ட்ஸ் காலேஜ் உருவாகியது.

2) 'ஓட்டேரி நல்லா'விற்கு இருமருங்கிலும் கரைகளைக் கட்டி வருடந்தோறும் வெள்ளத்தால் குடிசைகள் அடித்துக் கொண்டு போவதைத் தடுத்து நிறுத்தினார்.

3) ஏராளமான ஏழை விதவைப் பெண்களுக்கு வேலை யற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வட்டி இல்லாத கடனளித்து உதவி செய்தார்கள்.

4) 67 முதல் முதலில் தீப் பற்றாத வீடுகள் அண்ணா காலத்தில் கட்டித் தரப்பட்டது.

5) பல பேருக்கு வேலை வாய்ப்புகள் அளித்தார். யார் எந்த நேரத்தில் சென்றாலும் ஜாதிச் சான்றோ, நன்னடத்தைச் சான்றோ முகம் கோணாமல் கொடுத்து நல்ல பெயர் எடுத்தார்.

எப்போதும் ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்வதில் தனி ஆர்வம் காட்டக்கூடியவர்கள். அப்படிப்பட்டவருக்கு அறுபது ஆண்டு விழா பூர்த்தியாவதை எண்ணும்போது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவர்கள் மேன்மேலும் நீண்ட ஆயுளைப் பெற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

—:(o):—

# அன்னை! ஓர் புதுமை வார்ப்பே!

திமிரி துரைமணி

மணிவிழாத் திருநாளைக் காணும் அன்னை
சத்தியவாணி முத்துக்கு மகிழ்ச்சி யோடு
அணிவிக்கும் மலர்மாலை - புகழின் மாலை
அதனிடையே பாமாலை யெந்தன் மாலை!

ஈரோடுப் பெரியாரின் ஆசி யோடும்
சேரோடுப் போராடும் உழவ ரோடும்
காரோடும் உறவாடும் செல்வ ரோடும்
பேரோடும் புகழோடும் வாழும் அன்னை

பிறந்ததோ அம்பேத்கார் இல்ல மென்றால்
சிறந்ததோ பகுத்தறிவுப் பாச றைதான்
ஈரோட்டுப் பள்ளியின் கல்வி யாலே
போராட்ட வகையிலும் நல்ல தேர்ச்சி!

காஞ்சிதான் கிடப்போர்க்கு வளமை சேர்க்கக்
''காஞ்சி'' தான் சிறந்ததோர் இடந்தா னென்று
அண்ணாவின் கொள்கையைப் பரப்பு கின்ற
பெண்ணாகி முன்னின்ற பெருமை உண்டு!

மணவிழாக் கண்டதை முதலாய்க் கொண்டு
மணிவிழாப் படைக்கின்ற வரையில் கண்ட
போராட்டம் - துயர்கட்டம் அடுத்தாற் போன்று
பாராட்டும் — வரவேற்பும் கொஞ்ச மன்று!

பதராக மதித்திட்ட இனத்தில் தோன்றிப்
புதிராகத் திகழ்ந்திட்ட அம்மை யார்தாம்
பேரறிஞர் அண்ணாவின் பொற்கா லத்தில்
புடம்போட்டு எடுத்திட்ட புதுமைப் பெண்தான்!

எதிர்நீச்சல் போடுவதில் நிறைந்த வெற்றி
எத்திசையும் வரவேற்பு; மேடை தன்னில்
உதிர்த்திட்ட சொல்லெல்லாம் இனிக்கும் தேன்தான்
எதிரணியோ அம்மையாரின் வாழ்க்கைத் தூண்தான்!

அடுப்பூதும் பெண்மட்டும் அல்ல; வீட்டில்
அரிசியையும் அலசினார்; இந்த நாட்டின்
அரசியலை அலசினார்; ஆட்சி தன்னின்
அரியணையில் அமர்ந்திட்டார்; பெண்கள் தம்மின்

உரிமைக்குக் குரல்தந்தார்; உயர்வு தாழ்வின்
பிரிவினையைக் கடிந்திட்டார்; சாதிப் பேரால்
வெறிபிடித்த தன்மையை எதிர்த்து நின்று
வீறுநடை போடுகின்ற பெண்ணாய் வாழ்ந்தார்!

இந்தியை வளர்க்கின்ற ஆட்சி தன்னை
சந்தித்து எதிர்த்திட்ட தொடர்போ ராட்டம்!
சிலருக்கு மட்டுந்தான் நன்மை யான
குலக்கல்வித் திட்டத்தின் எதிர்போ ராட்டம்!

கன்னித்தமிழ் மொழிதன்னைக் காத்து நிற்கும்
தன்மான உணர்வுள்ள மொழிப்போ ராட்டம்!
மும்முனையின் போராட்டம் இவைக ளெல்லாம்
அம்மையார் இடம்பெற்ற போராட் டந்தான்!

பொல்லாப்பும் பொச்சரிப்பும் புரட்டும் பொய்யும்
பொறுப்பின்றி உதிர்த்திட்ட பகைவர் தம்மின்
சொல்லடியும் கல்லடியும் தாங்கிக் கொண்டு
வளர்ந்திட்ட வளர்ச்சியில் பொறுமை தோன்றும்!

தொழுநோய்தான் பிடித்தாற்போல் நிலையில் நின்று
உழுமாடாய் உழைக்கின்ற சமுதா யத்தை
எழுகவென்று குரல்கொடுத்து எழுப்பி வைத்த
எழுச்சிமிகும் பேச்சுதனில் கனல்தெ றிக்கும்!

கல்மனந்தான் படைத்திட்டோர் இமானு வேலை
கொலைசெய்த முதுகுளத்தூர் சம்ப வத்தைப்
புல்லரிக்கும் பேச்சினால் கண்டித் திட்ட
சட்டமன்ற நிகழ்ச்சியில் உணர்ச்சி தோன்றும்!

தமிழகத்தின் அமைச்சராய் இருந்த போது
தாழ்ந்தவர்தம் சலுகைக்குக் குரல்தான் தந்து
பதவியையே பறிகொடுத்த தன்மை காணின்
பாமரர்மேல் கொண்டிட்ட பாசம் தோன்றும்!

எதிரணிதான் உருவாகி வளர்ந்த போது
புதிராகத் திகழ்ந்திட்ட முதன்மைப் பெண்தான்
கண்மூடிப் பழக்கத்தை எதிர்த்து நிற்கும்
வன்மையுடை மனங்கொண்ட வீரப் பெண்தான்!

சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி தன்னைத்
தட்டியதோர் தன்மையிலே புதுமைப் பெண் தான்
மாநிலத்தின் அமைச்சரெனச் சிறந்த வர்தாம்
மத்தியிலும் இடம்பெற்றார் அம்மை யார்தாம்!

முன்னேற்றக் கொள்கையின் படப்பி டிப்பே!
அண்ணாவின் உடன்பிறப்பே! சுடர்வி ளக்கே!
குன்றிலிட்ட சமுதாயத் துணை யிருப்பே!
நன்றிகொண்ட இதயத்தின் குடியி ருப்பே!

பொன்மனச் செம்மல்தம் நன்ம திப்பே!
கன்னித்தமிழ் உயிர்த்துடிப்பே! சுவைக்கும் பேச்சே
"அன்னை" யென்ற ஏடமைத்த தலைவி நீயே
பின்னடைந்தோர் குலவிளக்கே! அம்மை யாரே!

புறையோடிக் கிடக்கின்ற பழமை யெல்லாம்
மறைந்தோட உழைத்திட்ட கொள்கை இன்றே!
நிறைமாதக் கர்ப்பிணியாய்ச் சிறைதான் சென்று
குறைதீர்க்கத் துணிந்திட்ட தமிழ ணங்கே!

சத்தியவாணி என்கின்ற பெயரு மாகி
முத்துவுக்கு அன்பான சொத்து மாகி
அறச்செல்வன் - சித்ராவும் அடுத்தாற் போன்று
மரகதத்தின் செழியனின் தாயு மாகி

மரமாகி நிழலாகிக் கனியு மாகித்
திரளான மனிதர்தம் நன்மை யாகி
அயராது உழைத்திட்ட வடிவ மாகி
உயர்ந்திட்ட அம்மையார் வாழ்க! வாழ்க!

மூன்றாம்கால் முளைத்திட்ட முதுமை பெற்ற
மூதுரைப் பாட்டியாம் ஔவை போன்று
ஊன்றுகோல் தாங்கிடும் நிலையில் நீவிர்
நீண்டநாள் வையத்தில் வாழ்தல் வேண்டும்!

புகழோடு, கல்வியும், வலிமை, வெற்றி,
பொன்னோடு, நன்மக்கள், பெருமை, வாழ்நாள்,
நோயின்மை துணிவோடுப் பத்தும் பெற்ற
தாயேநீ நூறாண்டு வாழ்க! வாழ்க!

தொண்டென்ற தொடர்கதையால் புகழ்தா னென்ற
தண்டனையைப் பெற்றிட்ட அம்மை யார்தாம்
பண்டையினக் கொடியில்தான் பூத்து விட்ட
பெண்மணியே! பெட்டகமே! புதுமை வார்ப்பே!

---

*Best wishcs & Compliments from :*

**Dr. Muthu. Venkataraman,** B.Com., D.Litt.,

13-A, Kapali Nagar, Madras-600 004

PHONE : 77131

With best compliments from

# V R W REFRACTORIES

(A Unit of Tube Suppliers Ltd.)

**Vanagaram Refractory Works,**

**Vanagaram, Madras-602 102.**

*Telephone : 421917, 421752.*

Manufacturers of

## FIRE BRICKS AND REFRACTORIES

ADMN. OFFICE

SPIC Centre,
97, Mount Road,
Guindy,
Madras-600 032.

REGD. OFFICE

South India House,
36-40, Armenian Street,
Madras-600 001.

கழகத்தின் கட்டளை ஏற்று
ஈரோட்டில் தனது கணவருடன்
கைத்தறி துணிகளை
வீதிதோறும் சென்று
விற்கிறார்





மொரீஷியஸ் பிரதமர்
ராம்குலாம்
வரவேற்று பரிசளிக்கிறார்

முதல்வர் அண்ணா
அவர்களுடன்





1945 சென்னை சுயமரியாதை
மாநாட்டில் திறப்பாளர்
திருமதி கனகவல்லி இரத்தின
சாமி அவர்கள் வரவேற்பிதழ்
வாசித்தளிக்கிறார்
பேரறிஞர் அண்ணா நாவலர்
N. V நடராசன், கண்ணன்
திரு M. S முத்து
மேடையிலுள்ளனர்

50வது பிறந்த நாளின்போது
50 தாய்மார்களுக்கு
உணவளித்து உடையும்
தந்தார்





50வது பிறந்தநாள் விழாவில்
கவிஞர் கண்ணதாசன
பாராட்டுகிறார்

*With best compliments from :*

Phone : 447342

# USHA EVENING COLLEGE

No. 45, South Usman Road, T. Nagar, Madras-600 017



*BRANCH :*

Bakaram Road, Musheerabad, HYDERABAD-500 048

# அறுபது ஆண்டைக் கடக்கும் அன்னை சத்தியவாணிமுத்து




**சி. மு. குமரேசன்**

அம்மையாரின் முன்னாள் நேர்முக உதவியாளர்

அமைப்பாளர்

தமிழ்நாடு அரசு தாழ்த்தப்பட்டோர் மலைவாழ் அலுவலர்கள் நலச்சங்கம்,
சென்னை.


நம் இந்தியப் பெருநாட்டில் நாட்டுப்பற்றும், மொழிப் பற்றும், இனப்பற்றும் ஒருங்கே அமையப்பெற்ற தலைவர்களின் வரிசையில் குறிப்பாகவும் சிறப்பாகவும், நமது பிற்படுத்தப்பட்ட வகுப்பில் தோன்றிச் சமுதாய மேம்பாட்டிற்காகவே தங்களை அர்ப்பணித்த தலைவர்கள் பலருண்டு.

அவருள் பெருந்தகை அயோத்திதாஸ் பண்டிதர், மாவீரர் தாதா, இரட்டைமலை சீனிவாசனார். முன்னாள் மேயரும் அமைச்சருமாகிய திருவாளர் பரமேஸ்வரன் பிள்ளை அவர்களின் தாத்தா பிற்படுத்தப்பட்டமக்களின் பிரதிநிதியாகத் தமிழகத்திலிருந்து முதன்முதலாக லண்டன் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு, அடித்தளத்து மக்களின் உரிமைக்கு முழக்கமிட்ட முன்னாள் அமைச்சர், மறைந்த மாமேதை ஆலந்தூர் எம். சி. இராஜா, மராட்டிய மண்ணில் தோன்றிய மாமேதை, அகிலம்போற்றும் பேரறிஞர் அண்ணல் அம்பேத்கார், அவர்கட்கு தோள்கொடுத்துத் துணைநின்ற, சென்னை மாநகரின் முன்னாள் மேயரும் சென்னை சட்டக்கல்லூரியின் முதல் துணை முதல்வருமான மறைந்த பெருந்தகை சிவராஜ்பிள்ளை ஆகியோர் சமுதாய சிந்தனைமிக்க நல்லோரின் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்றவர்கள்.

மகளிர் வரிசையிலும் மாமணிகள் இல்லாமல் இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக, கண்பார்வையற்ற நிலையிலும் கடும்பணியாற்றிவரும், எண்பது வயதினை எட்டிப் பிடிக்கும் எழுச்சிமிகு அன்னை மீனாம்பாள் சிவராஜ்.

அரசியலும் சமுதாயத் தொண்டும் இரண்டறக்கலந்து, ஏழை எளியோருக்காக என்றும் உழைத்துவரும், தமிழகத்தின் முன்னாள் அமைச்சரும், கேரளத்தின் ஆளுநராய்ப் பொறுப்பேற்று அண்மையில் ஓய்வு பெற்றவருமான அன்னை ஜோதி வெங்கடாசலம், இந்திய பிரதமரின் தமிழகத்து வாரிசாக என்றும் விளங்கும் முன்னாள் மத்திய அமைச்சரும், இன்றைய தமிழக இந்திராகாங்கிரஸ் தலைவருமான அன்னை திருவாட்டி மரகதம் சந்திரசேகர் ஆகியோர் வரிசையில் சற்றும் மாற்றுக் குறையாமல் அணிவகுத்து நிற்பவர் தாம் அன்னை சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள். தமிழகத்தின் பட்டி தொட்டி முதல் பட்டணக்கரையராக அம்மையார் அவர்களை அறியாதவர் யாருமிலர்.

1949ல் அண்ணாவின் தலைமையில் கழகம், ஈரிலைகளோடு சிறு கன்றாய் முளைத்தபோதே, உடனிருந்து உரமிட்டு வளர்த்தவர் அன்னை சத்தியவாணி. பகுத்தறிவுப் பாசறையின் அணிவகுப்பில், எழுச்சி முழக்கமிட்டு மகளிர் அணியினை வழி நடத்திய வீராங்கனைதான் "அம்மா" என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற முன்னாள் தமிழக அமைச்சரும் மத்திய அமைச்சருமான, அறுபதைத் தாண்டுகின்ற அன்னை சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள்.

சமுதாய சீர்த்திருத்தம், சாதிக்கொடுமை, பெண்விடுதலை ஆகிய அன்றைய திராவிடப்பேரியக்கத்தின் இலட்சியங்களை, பெண்மைக்கே உரித்தான மென்மைக்குரலில், கன்னல் தமிழ்ச் சொற்களால் தங்குதடையின்றி இலக்கிய நயத்தோடு சுவைபடப் பேசும் பேராற்றல் மிக்கவர் அம்மையார் அவர்கள். அம்மையாரின் கால்கள் படாத இடம்தான் தமிழகத்தில் ஏது? சங்கத்தின் எழுச்சியோடு சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைக் கனல் வீசும் எரிமலையாய்மாறி, சாதிக்கொடுமைகளைச் சாடியவர்; அவர்தம் நாவன்மையால் உணர்வு அற்றவனையும் வீரனாய் மாற்றியவர். சுருங்கக்கூறின் சுயமரியாதை இயக்கம் என்னும் மணிமண்டபத்தில் அவர் ஒரு கல்தூண்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலும் கலைஞர் கருணாநிதி அவர்கள் அமைச்சரவையிலும் ஒரு நிர்

வாகச் திறன்மிக்க அமைச்சராய்த் திகழ்ந்தார் அம்மையார் அவர்கள். அம்மையார் அமைச்சராய் இருந்தபோது பல்லாயிரக் கணக்கான ஒதுக்கப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் குடியிருக்க வீட்டுமனைப்பட்டா, பயிர் வைத்துப்பிழைக்க நிலப் பட்டா, கிராமங்களில் புதிய கல்விக்கூடங்கள், மாணவ மாணவிகளுக்குப்புதியபுதிய உறைவிடங்கள், தொழிலாளிகளுக்கு இலவச தொழிற்கருவிகள், கைவிடப்பட்ட மாதர்களுக்கு தையற் கருவிகள், இப்படிப் பலவகையான உதவிகளைச்செய்து நலிந்த மக்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டார்கள். இவர்களது பெரு முயற்சியால் சென்னை வியாசர்பாடியில் டாக்டர் அம்பேத்கார் பெயரால் கலைக்கல்லூரி நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. 'தொட்டிலை ஆட்டுங்கை தொல்லுலகை ஆளுங்கை' என்ற வரிகளுக்கு எடுத்துக்காட்டாய் இயங்குபவர். இன்றைய தமிழக முதல்வர் அவர்களின் பரிந்துரையால், மத்திய அமைச்சராகவும் பணியாற்றியவர்கள்.

சுயமரியாதை இயக்கத்தில் தொண்டராய் இருந்தபோதும் பின்னர் அமைச்சராய்த் திகழ்ந்தபோதும், நாடாளும் மன்ற உறுப்பினராய் இருக்கும்போதும் அம்மையார் சமுதாயத்தின் பால் கொண்ட பற்றிலும், இயக்கத் தொண்டர்கள் மீது காட்டிய அன்பிலும் தடம் மாறியவரில்லை.

அறிவுச் சுடரொளியே!
ஆற்றல்மிகு பெண்சிங்கமே!
கொண்ட கருத்தினை
விட்டுக் கொடுக்காத
வேங்கைநிகர் வீராங்கனையே
அடுக்கடுக்காய் இடுக்கண்கள் வந்தபோதும்
துன்பத்தைத் துச்சமென மதித்தவரே!
அறுபதைத் தாண்டுகின்ற
அன்னை சத்தியவாணி அம்மையாரே!

இனிவரும் தங்களது இனியகாலங்களை இன்றும்சேற்றிலும் சகதியிலும், குப்பைமேட்டிலும், கூவத்துநதிக் கரையினிலும் வாழும் கூவத்து மக்களுக்காகவும், கிராமப் புறங்களில் இன்னும் கல்வியறிவே பெறாமல், காடும் கழனியும், ஆடும் மாடுமே கதியென்று உழலும் அடித்தளத்து மக்களின் வாழ்வு மலரத் தங்களது தொண்டினை நலிந்த மக்களின் நலத்துக்கே முழுவதுமாய் நல்கி, மேலும் பல்லாண்டு வாழ்ந்து மணிவிழா, வைர விழா காணத் தங்களை என் சார்பிலும் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டோர். மலைவாழ் அரசு அலுவலர்களின் சார்பிலும் வணங்கி வாழ்த்துகிறேன்.

வாழ்க தங்கள் பல்லாண்டு!
வளர்க தங்களின் சமுதாயத் தொண்டு!

# ஒரு சத்தியத்தின் முத்து

டி. எஸ். ரவீந்தரதாஸ்

கம்யூனிஸ்ட்டாக என்னை மாற்றிக்கொண்டிருந்த கல்லூரி வாழ்க்கை, சமத்துவத்தை லட்சியமாகக் கொண்ட சோஷலிஸ்ட் மாணவர் மன்றம். அதன் வடஆற்காடு மாவட்டத்தின் அமைப்பாளர் பொறுப்பில் நான் இருந்தேன். அதன் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவிற்கு டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களை அழைக்கலாம் என்ற எண்ணத்தில் சென்னைக்கு வந்தேன். தலைமைச் செயலகத்தில் தேடினேன். இல்லை. எனவே பெரம்பூருக்குப் போனேன். நான் போன போது வேறொரு நிகழ்ச்சிக்காக அவசர அவசரமாகக் காரில் கிளம்பிக்கொண்டிருந்தார்கள். பிரதான வாசலை விட்டு, கார் வெளியே வருகிறது. என்ன செய்வது? இரவு தங்கமுடியாது. உடனே ஊருக்குப் போயாக வேண்டும். கையைக் காட்டி காரை நிறுத்தலாமா? அமைச்சராயிற்றே! கோபித்துக் கொள்வாரோ?

நினைப்பு நெஞ்சத்தில் மோதிக்கொண்டிருந்தபோது கை தானாகவே காருக்கு முன்னால் நீண்டுவிட்டது. என்ன ஆச்சரியம்! காரும் நின்றுவிட்டது. சுய அறிமுகம் சோஷலிஸ மாணவர் அமைப்பைப்பற்றிய ஒரு மேலோட்ட விளக்கம். விழாவிற்கு வருகை தர முடியுமா என்ற வேண்டுகோள்.

குடியாத்தத்திற்குப் பக்கத்தில் உள்ள ஊருக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் வருவதாகவும், அப்போது எங்களின் நிகழ்ச்சிக்கு வந்து மன்றத்தைத் துவக்குவதாகவும் அவர் தெரிவித்தார். நம்பமுடியாத ஆச்சரியத்தோடு வணக்கம் கூறி விடைபெற்றேன்.

விழாவிற்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. எங்கள் மாணவர் மன்றம் பிறக்கும் போதே ஒரு குசேலர் குழந்தையாகத்தான் பிறந்தது.

ஆனால் நிகழ்ச்சிக்கு முந்திய நாள் நான் எதிர்பாராத ஒரு சோதனை நிகழ்ந்துவிட்டது. உள்ளூர் தி. மு. க. பிரமுகர்களில் சிலர் என் ஓலை வீட்டிற்கு வந்தார்கள். கம்யூனிஸம் பேசி மாணவர்களைக் கெடுத்துக்கொண்டிருக்கிறான் என்ற எரிச்சல் பல காங்கிரஸ் - தி. மு. க. தலைவர்களுக்கு அப்போது இருந்தது.

மறு நாள் என்னை போலிஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள். பக்கத்து ஊருக்கு அமைச்சர் வருகிற போது அவரைக் கேட்பது என்றும், அவர் இந்த நிகழ்ச்சியைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றால் என்னைக் கைது செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒரு கல்லூரி மாணவன் தம்மை வந்து சந்தித்தது உண்மை தானென்றும் மாணவர் சோஷலிஸ்ட் மன்ற நிகழ்ச்சிக்கு வருவதாக ஒப்புதல் அளித்தது நிஜம்தானென்றும் அமைச்சர் சொன்னார் என்பதை அறிந்த போது புல்லரித்துப் போனேன்.

அன்று என் மானத்தைக் காப்பாற்றிய அன்றைய அமைச்சர் அவர்கள் இன்று என் மனதைக் கவர்ந்த அம்மாவாகப் பரிணமித்திருக்கிறார்கள். மாற்றுக் கட்சித் தோழன் என்றாலும் என்னைத் தம் மகன்களில ஒருவன் என்றே பெருமைப்படுகிறார்கள். ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும் அம்மாவும் பிள்ளையும் வெவ்வேறு அரசியல் பாதையில் பயணம் செய்வது இயல்பு தானே? அமைச்சர் பதவியிலிருந்து விலகி, சாதாரண உறுப்பினராக சட்டமன்றத்தில் பணியாற்றியபோது எமது ஜனசக்தி பத்திரிகையின் நிருபராக நான் அங்கு பணி புரிந்தேன். எப்போதோ நடந்த அந்த நிகழ்ச்சியை நினைவூட்டினேன்.

இருவரும் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாய் இருந்த போதும் எங்களின் லட்சியம் ஒன்றே. அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் கொடுமைகள் தீர வேண்டுமென்கிறார். நான் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட அனைத்து மக்களின் துயரும் துடைபட வேண்டுமென்கிறேன். பகுத்தறிவும், நாத்திகமும், பெரியார் - அண்ணா காட்டிய பாதையும் இதற்குத் தீர்வு என்று நம்புகிறார். பகுத்தறிவும் நாத்திகமும் உள்ளடக்கிய மார்க்ஸியமும் லெனினிஸியமும் இதற்குப் பரிகாரம் என்று நான் நம்புகிறேன்.

தக்க வழிகாட்டுதலும், சாதகமான சூழ்நிலையும் வாய்த்திருப்பின் இவரது அரசியல் பிரவேசமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில்தான் இருந்திருக்கும் என்று நிச்சயமாகவே நான் நம்புகிறேன். அமைச்சராக இருந்த போதும் சரி, அதைத் தூக்கியெறிந்துவிட்டு வெளியேறிய போதும் சரி - அவரது இதயம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே ஏங்கியது. பாதிக்கப்பட்டவராக இருந்தாலும் தம்மால் முடிந்த உதவியை இன்று வரை அவர் செய்தே வருகிறார்.

அம்மா அவர்கள் கட்சியின் தொண்டராக இருந்த போதும் சரி; அமைச்சராய் இருந்த போதும்சரி; சாதாரண சட்ட மன்ற உறுப்பினராய் இருந்த போதும் சரி; மத்திய அமைச்சர் பதவியையே அலங்கரித்த போதும் சரி; இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிற போதும் சரி-

ஒதுக்கப் பட்டோருக்காவும் ஏழை எளியோருக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் சிந்திப்பதும், பேசுவதும், பாடு படுவதுமே தமது கடமை எனக் கருதி வருகிறார்கள். இதுவே இவரது பலம். இதுவே இவரது பலவீனமும் கூட. ஏனெனில் இவரால் - இவரது அதிகாரத்தால் - இவரது செல்வாக்கால் - பல்வேறு பலன்களைப் பெற்றவர்களில் பலர் - தமது சொந்த முன்னேற்றத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்ட சுய நல வாதிகளாய் இருந்தார்கள். அரசியல் நீதியான சறுக்கலின் போதோ - சோதனைகளின் போதோ-நண்பனாய், தோழனாய், நல்லாசிரியனாய் இருந்து இறுதிவரை துணைநிற்கவில்லை என்பது என் கருத்து. ஆனால் இவற்றையெல்லாம் அவர் பெரிது படுத்திப் பார்ப்பதில்லை. தமது வழக்கமான நட்பிலும் அன் மாறுதலும் இருப்பதில்லை.

பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டுப் போராடும் அகில இந்தியத் தலைவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களைத் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தால் ஒரு கை விரல்கள் கூட அதிகமாகவே தோன்றுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் அனைத்துத் துயரங்களும் ஒட்டுமொத்தமான சமுதாய மாற்றத்திலே தான் சாத்தியம் என்கிற சத்தியத்தில் நம்பிக்கை கொண்ட முத்து அவர். பிரவேசித்தது திராவிடர் இயக்கத்தில் என்றாலும் விந்தியத்தையும் தாண்டி இமயம் வரையிலும் - இமயத்திறகும் அப்பால இகலோகம் முழுமையிலும் தமது பார்வையை விசால மாக்கிக் கொண்ட விஞ்ஞானபூர்வமான அரசியல் தலைவி அவர். சென்ற ஆண்டு உலகசமாதான இயக்கத்தின் மாநாட்டில் பங்கு கொள்ள கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்று சோவியத் பூமிக்கும் விஜயம் செய்துவிட்டு வெற்றிகரமாய்த் திரும்பியவர். அணு ஆயுத உற்பத்திக்கு எதிராகவும், சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் அவர் வியன்னாவில் நடைபெற்ற மாநாட்டிலும், சோவியத் வானொலி மற்றும் தொலைக்காட்சியிலும் அவர் ஆற்றிய ஆங்கில உரைகள் அற்புதமானவையாகும். ஜனசக்தி யில் இதுபற்றிக் கட்டுரைகள் கூடஎழுதியுள்ளார்.

புராண காலத்து சத்தியவான் சாவித்திரி தனது கணவனுக் காக மட்டுமே போராடினாள். இந்தக் காலத்து சத்தியவாணி முத்துவோ தமது சமுதாயத்திற்காவும், தனது நாட்டிற்காகவும் சர்வதேச சமாதானத்திற்காகவும் போராடி வருகிறார்.

அவரது அறுபதாம் ஆண்டு மணிவிழாவில் - தமது நூறாண்டுவிழாவைக் கொண்டாடி சரித்திரமுத்துவாய் மேலும் பல சாதனை புரிய வேண்டுமென்று நெஞ்சார விழைகிறேன்.



மகளிர் மன்ற ஆண்டு விழாவில் அம்மையார் உரையாற்றுகிறார்

## சட்டமன்ற உரை (29-10-57)

"கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே! முதுகுளத்தூர் கலவரத்தைப் பற்றி, நாம் விவாதிப்பதற்கு முன்னால், சாதிச் சண்டையோ, அல்லது அரசியல் பூசலோ, எதுவாக இருந்தாலும், இந்த நாகரீக காலத்திலே, மனித உயிர்கள் வெறிச் செயல்களால் பாதிக்கப்பட்டது குறித்து, எனது கண்ணீரை, அம் மறைந்தவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும், காணிக்கையாக்குகிறேன். இந்த கலகத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவள் என்பதால் மட்டும் அல்ல, அடிமைப் படுத்தப்பட்ட மக்கள், தங்கள் உரிமைக்காக, என்றாவது வீறிட்டு எழவேண்டும்; அப்படி எழுவதன் மூலமாகத்தான் அவர்கள் உரிமை பெற முடியும் என்ற ஒரே முடிவில் நம்பிக்கையோடு பணி புரிந்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்திற்காகவும் நான் என்னுடைய கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்".

## சட்டமன்ற உரை (21-3-74)

"ஆட்சி செய்கின்றவர்கள் போடுகின்ற திட்டங்களும், எதிர்க் கட்சிக்காரர்கள் கூறுகின்ற குறிப்புகளும். இந்த சட்டமன்றத்திலே, செயலகத்திலே, போடுகின்ற முறைகளிலேயே நின்று விடுகிறது. அதை நிறைவேற்ற வேண்டிய அதிகாரிகள், சிப்பந்திகள், அரசியல்வாதிகள் கொண்டிருக்கிற கொள்கையை, வேதனையை, படுகின்ற துன்பங்களை உணருவார்களேயானால், இத்தனை ஆண்டுக் காலமாக நாம் எடுத்த முயற்சி நிச்சயமாக வெற்றி பெற்றிருக்க முடியும். ஏடு சிறு குறை கூட இல்லாத அளவுக்கு எவ்வளவோ அக்கறை எடுத்தாலும், இந்த மக்களுக்காக ஆண்டுதோறும் நீதியை ஒதுக்கினாலும், நல்ல முறையில் செயல்படவில்லை என்று நினைக்கும்போது, தவறு எங்கே என்று இந்த சட்டமன்றத்தில் பலதடவை சுட்டிக் காட்டினார்கள். அதிகாரிகள் அந்த அளவுக்கு செயலாற்றவில்லை என்று. அதற்குக் காரணம் அரசியல்வாதிகளுக்கு இருக்கிற அவசரம், தேவை, உணர்வு, எப்படியாவது செய்ய வேண்டுமென்ற துடிப்பு,—உளப்பூர்வமான துடிப்போ, மேலெழுந்த வாரியான துடிப்போ, எப்படியிருந்தாலும் சிறிது அளவாவது துடிப்பு அதிகாரிகளுக்கு இருந்தால் இந்தந் திட்டங்களை எவ்வளவோ நல்ல முறையில் செயலாற்றி இருக்க முடியும்".

## சட்டமன்ற உரை (14-8-74)

"தலைவர் அவர்களே! நான் இங்கு அமைச்சர் அவையிலிருந்து நீக்கப்பட்டதற்கு, என்மீது சுமத்திய குற்றச்சாட்டு சரியானது அல்ல, ஜனநாயகத்திற்கு விரோதமானது, பாராளுமன்ற முறைக்கு விரோதமானது, சரியான தீர்ப்பு அல்ல. நான் சட்டப்படி என் கடமையை ஆற்றினேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக எடுக்கிற முயற்சிகளை எல்லாம் தி.மு.க. அரசும், அமைச்சரவையும் சரியாக செய்யவில்லை என்று தட்டிக் கேட்டதன் விளைவு—மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டை சரியாக செலவழிக்கவில்லை என்று தட்டிக் கேட்டதன் விளைவு— அதிகாரிகள் அமைச்சரின் உத்தரவுக்கு மாறாக செயல்படுகிறார்கள் என்பதைத் தட்டிக் கேட்டதன் விளைவு, நான் அமைச்சர் அவையிலிருந்து நீக்கப்பட்டேன். இத்தனையும் இந்த அரசின் ஒழுங்கீனங்கள். இப்படிப்பட்ட அரசு இருக்கக்கூடாது. இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்" என்று கூறி 14-8-74 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் தன் உரையினை முடித்தார் அம்மையார்.

*With the best compliments from:*

# HUNUMAN
## OIL
## TRANSPORT CO.
**GAZIABAD**

---

*With best compliments from:*

## NAGALAKSHMI

---

*With best compliments from:*

## M. BALACHANDRAN & CO.
(ENGINEERS, BUILDERS & CONTRACTORS)

Administrative Office:

462, 1st MAIN ROAD, KAMARAJA NAGAR. MADRAS-600 041

# Eetract from the speech delivered in the Rajya Sabha on the Mandal Commisson Report

Now in Tamil Nadu the Government under leadership of our beloved leader, M.G.R. have increased the quots to 50 for backward classes and 18 for the S.C. & S.T. It is necessary to peradicate caste-system. Our country was many castes, many long urges and many cultures and each caste gets own seperate identity. To create unity among all the castes, Steps had baen taken-by-such eminent leaders, both religious and political, like the Buddha. Periyar EVR, Mahatma Gandhi, Dr. Ambedkar, Peragnyar Anna and Vivekanand. Yet we do not find any noticeable change in the caste structure of and creating a good atmosphere for the development of Scheduled castes and Scheduled Tribes and other backward communities.

Even among Brahmins we find many special castes such as Aiyars Iygengars Trivedies, Chaturvedies, etc. Even among our Tamil Nadu Christians we find, Nadar Christians, Mudaliar Christians, Chettiar Christians, Harijan Christians etc. They do not intermingle and do not inter-marry. Many of them do not even dine at the same dinning table or dinning house. The Tamil Nadu Government was arranged and is encouraging intermarriages and inter-dinning specially in the Hindu temples, specially on days of Independence and Republic and entertain all the communities. All sit and dine together and many of the Ministers also participate on such occasions.

I would like to request the Govt. one thing. If you are so keen on implementing this Mandal Commission's recommendations or if you are very much intei ested to do away with casteism in our country, and if you want to help the Harijans and the downtrodden communitis, I would like to request the Govt. to come forward for making necessary amendments in the Constitution so as to enable our State Govt. to appoint persons from among all Communities as the priests in the temple. To eradicate the casteism on our society it is an adsolute necessity. Unless a person belonging to Harijan on other backward communities feels that he is equal among all others and deserves to get any appointment either in the Government office or in the temples, the recommendation of the Mandal Commission will have no meaning. I request the Govt. on behalf my A I A D M K party to come forward to-bring the necessary Bill for amending the Constitution in the matter.

## JUSTICE R. S. SARKARIA COMMISSIONS REPORT

(PAGE 186)

" That is awarding the aerial spraying contracts of 1970-71 at the rate of Rs. 9/- per acre to the operators who were Members of the Indian Agriculture Aviation Association, Bombay, Shri Karunanidhi, being influenced by extraneous considerations, abusing his official position of Chief Minister and acting in utter disregarded of the norms of propriety, fair practice and good administration, designedly stalled and foiled the rightful move of Shrimathi Sathyavani Muthu, the then Agricultural Minister, to fix the rate at Rs. 8-25 per acre, through negotiations with the operators.

With best compliments from :

SHANTHI BUILDERS

*With best compliments from :*

Rajeswari Jewellers

T. NAGAR, MADRAS

*With best compliments from:*

# T. R. SHANTHI



# A Short Sketch Of Dr Sathiavani Muthu's Life

Birth and death is a very common occurance in all parts of the world. But unfortunately in the South India, Birth and death is related to the previous life, of an individual. It is blindly believed that those who did only good go to heaven after death. Those who have committed sins, are said to be punished by god in the next life. Not only this much non-sense, there are people who still believe that the birth of a male child is more valuable than the female child. There are married women who prefer to go round and round a tree regularly with the hope of getting a male child. The Hindu puranas give an account of peculiar births created by the hindu gods and devas. They are considered as absurd and unbelievable in this scientific age. The reason for such a sorry state of affairs in South India is the incoming of the Aryan nomads, who have trickishly gained sway over the sons of the soil. They concocted peculiar stories to make themselves dominators and exploiters. The migrators had the audacity to call themselves as high and superior. They made the sons of the soil, low degraded untouchables.

It is under these circumstances Dr. Sathiavani Muthu was born on 15th Feb. 1923. Even before her birth, her parents were branded as untouchables. They could not live or move freely with others. They were prohibited from using the public roads and wells. The members of her scheduled caste community were not eligible to get the benefit of education. This community is said to have been created by god only to serve the other high caste people. Yet the Adi-dravidas numbered to nearly one fifth of the total population.

Any orthodox hindu would jump to the conclusion that Dr. Sathiavani was born as a female in this life, because of greater sins in her past life. But the sixty years of life led by the venerable lady has belied the blind beliefs.

The world has produced great leaders, philosophers, statesmen, scientists, educationists in large numbers. They are still remembered by the people for the great contribution they made to the welfare of the human society. But it is not so, when we begin to reckon the births of social reformers. We are ofcourse aware of the lives of the handful of social reformers and revolutionaries in many countries of the world. Most of them have played a great part in awakening the masses with their revolutionary ideas. But no one has thought of the problems of the 'shudras' in South India. Yet it is no fault of theirs, because a similar social draw back as perpetuated in South India, did not at all exist in any other part of the world. It is only here, that a child is condemned as untouchable, low and deserving o bear, only insults, humuliations and disgrace, Dr. Sathiavani's birth was in fact not great or high or superior or worthy. But taking into account the sixty years of life, she has lead any historian would unhesitatingly record, that she is one fot he greatest women of South India. What is it all due to? How was she able to withstand the fanatic high caste hindus? If there is god, if there is anything as fate and karma, she must have been born an untouchable to suffer in this life for the so-called sins in her previous births.

She was able to achieve so much success in life and earn the esteem of all downtrodden people, not with the blessings of any god but with the guidance of the late lamented great genius of the 20th Century ARINGNAR ANNA.

No one ever predicted that Aringnar Anna would create such a silent revolution in the South Indian Society. He fought with giants not with weapons but with his pen and tongue. It is his birth in the remote Conjeevaram town, that proved a boon to the traditionally suppressed, oppressed and exploited people of South India. He awoke the fallen race. He designed cleverly the right means to succeed in the noble mission. In short he did miracles. Our Dr. Sathiavani was born in the Chingleput town, which is located in the same district where Anna was born. Her father was Mr. Nagainathar. Her mother was Mrs. Janaki Ammal.

She was admitted in the Columbus Higher Secondary School at Chingleput. Later, the family had to move to Ernakulam. There she was admitted in the St. Therasa Convent. In a few years the family had to settle at Madras and so, she had to prosecute her studies in the Govt. High School at Egmore. By this time, she has gained a good knowledge of English and Tamil. The fact that illiteracy is the major deadlock for the prevalance of many of the social evils is very much illustrated by the shining example of Dr. Sathiavani. Later on, she devoted her time to study Homeopathy and became a Doctor. She did not deem it her profession. Her knowledge of medicine helped her to serve the poor people with cheap medicines.

Her father Mr. Nagainathar was progressive minded. He had love for Dr Ambedkar, Buddha, Periyar and Anna. He tutored his daughter to his bent of thoughts Moreover, he used to take his daughter, whenever he attended meetings and conferences of the Justice party and Self-Respect League.

Even now, there are many high caste families wherein the ladies are not allowed to go out freely to attend meetings and conferences. Because of her father's progressive outlok, she was brought up as an equal to males. Being a matured rationalist, he did not worry much of his daughters future. One day or other a girl has to be handed over to the care and responsibility of a male, who comes in the form of husband. It cannot be said that all husbands have the same outlook in life as the wife. So he carefully selected the right person who would accommodate and adjust to the temperament, ambitions, ways and ideals of his daughter At last his choice fell on Mr. Muthu who was originally a staunch Congressman. Though politically he was groomed by veteran freedom fighters as Mr. S. Sathiamurthi, Mr. T. Chengalvarayan, Mr M. P. Sivagnanam, Mr. N. V. Natarajan and many others. Later he found Self-respect movement led by Thanthai Periyar as suited to him also. The marriage was celebrated in the year 1943, under the presidentship of Tamil Thendral T. V. Kalyanasundara Mudaliar. The great Tamil scholar Mr. R. P. Sethu Pillai and others blessed the couples. The next year was the birth of Dravidar Kaghagam at Salem. It is here that Aringnar Anna changed the name of the Justice Party. By a resolution he forbid the use of caste names and the honorary titles conferred by the British. He demanded Dravidanad, a separate sovereign socialist independent state for Dravidians,

Sathiavani Muthu naturally took an active part in the D. K. while Anna was the first General Secretary. She took an active part to propagate the ideals of the D. K. She became a member of of the Executive Committeee of the D. K. She courted imprisonment in all the agitations, conducted by D. K. In those days it was very difficult even for males to follow Thanthai Periyar, on account of the goondaism let loose by the rowdy elements in Congress. On one occasion, when she was scheduled to unveil the portrait of Dr. Ambedkar in the D. K. Conference held at Pondicherry she had to face the hooliganism and organised violance by the congressites. The Police failed to give her protection. She had to elope stealthlly from Pondicherry in a taxi and return to Madras safely by a train from Valavanur, a Railway Station eight miles away from Pondicherry. Otherwise her life would have ended then and there. This incident serves as an eyeopener to assess

the great service she was rendering in the D. K. When the D. M. K. was formed in 1949, she took a major role to organise the women's wing of the D. M. K. She was naturally elected to the Executive Council and General Council of the D. M. K She was an active propagandist. She toured almost all places in Tamil Nadu addressing a number of meetings. She had participated in all the agitations conducted by D. M. K. While she was pregnant many advised her not to court imprisonment by taking part in the agitation against the imposition of Hindi. But she lent a deaf ear to them all and went to jail.

Later. she started a Tamil Monthly named "ANNAI" and edited the same, progagating progressive ideas for the emancipation of women.

In the year 1957, she contested to the Madras Legislative Assembly as a D M K. Candidate facing the keen opposition from the congress, she won the contest and became a member of the legislature in the opposition As a legislator she played her part well and acquitted herself as the only women member in the opposition, who was a night mare to the ruling party. She was noted for her regular presence when the Assembly was in session. She never failed to champion the cause of the Scheduled Castes and Backward Sections. She actually shed tears while she spoke on the no confidence motion against the Congress ministry condemning the attitude of the high caste Hindus. At that time the huts of scheduled castes were set on fire at Mudukalathur. Their properties were destroyed In the melee many scheduled castes were injured. Many were burnt to death. She strongly expressed her views stating that the unfortunate incidents could have been averted if the Government had taken prompt action the moment the matter was known. Delay had cost the precious lives of the poor scheduled castes.

Her role in DMK was so very exemplary that Leader Anna made her the Secretary-in-charge of Propaganda. In the Mummunai Porattam, he nominated her to lead the agitation.

Her book in Tamil 'Erikkappattal' (she was burnt) life of John of Arc were sold like hot cakes.

In 1967 she contested from the Perambur Constituency as a DMK candidate and won the elections. The people of Tamil Nadu strongly favoured DMK and the end of Congress tyrranical rule from 1947 materialised. Aringnar Anna became the Chief Minister. Being aware of Mrs. Sathiavani's devotion to uplift the downtrodden, he included her in his cabinet.

She held the post as Harjan Welfare Minister. She increased the scholarship amounts given to the Scheduled castes and Backward classes. Similarly she increased the loans sanctioned to the SCs and BCs.

She created the Thillaiyadi Valliammai model village in memory of the great martyr who daringly saved the life of Gandhiji in South Africa.

She founded the Dr. B. R. Ambedkar College at Vyasarpadi.

By her own efforts she established the Aringnar Anna Orphanage at Oragadam, near Ambattur.

When the Ministry for information and Broadcasting at the Centre imposed Hindi in the A. I. R. she focused the public opfnion and got the name Akashavani changed to Vanoli.

A sum of Rupees 4½ crores was sanctioned by the Govt. at the Centre to be spent exclusively for Harijan Welfare Schemes. Various schemes were carefully formulated by Dr. Sathivanimuthu in her capacity as Minister-in-charge of Harijan Welfare. But the Chief Minister Hon'ble Karunanidhi, knowing pretty well that the amount sanctioned to her department cannot be diverted to any other department boldly acted against the constitutional provisions by transferring the amount to the

information Department. Karunanidhi the then Chief Minister abolished the propaganda wing of the Harijan Welfare Department and brought it under the Dept. of Information and Publicity. This naturally created ill feelings. Almost all the scheduled caste legislators came to realise the real feathers of Karunanidhi. This unhappy event ultimately lead to the parting away from DMK led by Karunanidhi. The true colours of the Chief Minister were exposed nakedly and a number of scheduled caste M.L.A. slent their solid support to Dr. Sathiavani Muthu and a new party was formed with Dr. Sathiavani Muthu as the leader.

Now she is a Member of Parliament and leader of AI ADMK in the Parliament.

She has travelled extensively in many foreign countries. She was the Chairman for the Economic and Social Commission Conference held at Delhi for Asia and Pacific region Preparatory Conference for the World Conference of the U. N. Decade for women. She presented a keynote Address at Colombo at the Asian International family conference at Paris. She has widely travelled abroad in Mautitius, Malaysia, Dar-ad-salam, Nairobi, U. K. Geneva, Paris, Rome, Amsterdam, Frankfurt, Egypt, Beirut, Burma, Bangkok, Malaysia, Singapore, Ceylon, Nepal. Vienna and U,S.S.R.

She is a renowned writer both in English and Tamil. She is a great social and political worker. She always upheld the cause of orphans, destitutes, downtrodden, scheduled castes, backward classes and other weaker sections in the society.

It is very Jifficult now-a-days to come across a leader who is loyal to principles and policies of the Organisation, throughout the life. Many run-away like rats in a burning ship when the parent body Is faced with dangers. In Indian politics, it has become a fashion to change colours often like a chemeleon. For mere crumbs of posts and bones of power, many have crossed floors. It is not possible to assert one would be the same at the next dawn. Amidst such men; Dr. Sathiavani has carved out unique place in the history, for her loyalty and devotion to the great Justice movement from the begining to end.

*Compiled by :*

*A. S. VENU,*

*President*

என் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்:


# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

வளமான வாழ்விற்கு வனப்புமிகு வீடு.
மலிவு விலையில் தரமான வீடு.
அனைவருக்கும் வீடு – அதுவே எங்கள் பணி.

## மனைவளம் ஓங்குக.

DIPR/487/82 / ADWAVE/TNHB/2191

*With best compliments*

*from:*

# BAWA PROOFING COY.,

## DELHI

Grams: "EVERMANS" P. B. No. 414 Phone: 841194 841062

## The Balussery Benefit Chit Fund (P) Ltd.,

Head & Regd. Office:

"BALUSSERY BUILDING"

30, SINGARAR STREET, TRIPLICANE, MADRAS-600 005.

Office Working Hours 9-00 a.m. to 1-00 p.m.
2-00 p.m. to 5-30 p.m.

Weakly Holiday: SUNDAY

Remittance can be made during lunch hours also

*BRANCHES:*

*NEW DELHI*

'Bansi House' 1/24. Asaf Ali Road, New Delhi-110 002

Phone: 273036 & 271224 P. B. No. 472 Grams: 'EVERMENS'

*BOMBAY*

'Veena Vihar' 17-A, Flank Roae, Bombay-400 022

Phone: 471455 P. B. No. 6759 Grams: 'GROWRICH'

*BANGALORE*

'Srinivasa Buildings' No. 17, 1st Floor, 5th Main RoaJ, Gandhinagar, Bangalore-560 003

Phone: 26386 P. B. No. 9904 Grams: 'EVERMANS'

*CALCUTTA*

144-A, (1st Floor) Rash Behari Avenue, Calcutta-700 029

Phone: 411671 P, B. No. 16231 Grams: 'EVERMANS'

*COIMBATORE COLLECTION OFFICE*

271, N. H. Road, Coimbatore-641 001

Grams: 'EVERMANS'

" BUILD BETTER SAVINGS THROUGH BALLUSSERYS "

ESTD: 1947

**வெற்றியோடு பொலிய**
**மணிவிழா காணும் இன்நன்நாளில்**
**எங்களது இதயங் கனிந்த நல் வாழ்த்துக்கள்**

# P. N. S. மணி

குடும்பத்தினர்கள்

63, ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை-600 014.

---

**தாகம் தீர்க்கும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கிராமக் குடிநீர் பற்றிய விஞ்ஞானப் பூர்வமான ஆய்வு 1976-77ல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1980-81லிருந்து ஊரகக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தன்னிறைவுத் திட்டத்தில் 1, 2 மற்றும் 3 ஆம் கட்டங்களாக இதுவரையில் ரூ. 53·41 கோடி செலவில் 6971 கிராமக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது,

நடப்பு நிதியாண்டில் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காக மட்டும் ரூ. 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் நகரத் திட்டங்களுக்காக ரூ. 16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பருவமழை பொய்த்ததின் விளைவாக ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிடும் வகையில் வாரியம் போர்க்காலத் தீவிரத்தோடு பணியாற்றி வருவதன் விளைவாக 15-1-83 வரையில் ரூ. 12 கோடி செலவிடப்பட்டு 7643 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

| | |
|---|---|
| சி. செல்லப்பன், இ. ஆ. ப | ஏ. கே. அரங்கநாதன், |
| *நிர்வாக இயக்குனர்* | *தலைவர்* |

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**31, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை-5**

*தொலைபேசி எண் :* 843063

**Best Compliments from :**

Service at your door

For your requirements of Train / Air / Bus bookings contact

## *Angel Travel Service,*

2, Montieth Road, 'Hotel Atlantic' Buildings,

MADRAS-600 008.

Phone : 810561

---

*Best compliments from :*

Phone : 663511 Grams : 'KRISHTOUR'

## GLOBE TRAVEL SERVICE SYSTEM

15, Vasu Street, Kilpauk, Madras-600 010.

'TRAVELERS' PARADISE

International Air Tickets, Hotel Reservations, Tours,

Assistance For Passports & Visas.

COMPLETE TRAVEL SERVICE

---

*With best compliments from :*

## RAMESH & CO.,

*ENGINEERING CONTRACTORS*

No. 8, Club Road, Shenoy Nagar, Madras-30.

*With the best compliments of:*

**K. P. V. Shaik Mohamed Rowther & Co.**
**Pvt. Ltd.**

**202, Linghi Chetty Street,**

**Madras-600 001.**

FOOD BECOMES MORE APPETISING

WHEN PREPARED WITH

"RISING SUN BRAND"

MAIDA SOOJA AND ATTA



*MANUFACTURERS OF:*

# CENTURY
# FLOUR MILLS LIMITED

**INDIAN CHAMBER BUILDING,**

(First Floor) ESPLANADE,

P. O. Box No. 1674

**MADRAS-600 001**

Grams: "CENTURY"

PHONE: 21043 (2 lines)
Mills: 661701

*With best compliments from :*

**P. D. Ratnavelu**

*ENGINEERING CONTRACTOR*

CORPORATION OF MADRAS

PHONE Nos. : 446375 447395

---

**With best compliments from :**

PHONE : 511272

# J. K. CONSTRUCTION CO.

**BUILDING CONTRACTORS & ENGINEERS**

16/5, Street No. 1, Faiz Road, Karol Bagh,

NEW DELHI

---

With best compliments from :

**CHAKRABORTY CONSTRUCTION COMPANY**

(PHONE : 421071)

**T. M. SUBRAMANIAM & CO.**

(PHONE : 422569)

We undertake Road Constructions and also give our Road-Roller and Asphalt Machineries on hire.

*Best compliments from:*

V. G. PANNEERDAS & CO.

V. G. PANNEERDAS & CO. (P) LTD.

VGP HOUSING PRIVATE LIMITED

VGP GOLDEN BEACH RESORT LTD

VGP INVESTMENTS

VGP FINANCE CORPORATION

VGP PROPERTY INVESTMENTS OF INDIA

VGP BEACH HOUSING

VGP SERVICES

VGP AGENCIES

VGP HOUSING DEVELOPMENT CORPORATION

VGP CULTURAL ACADEMY

VGP TRAVEL CORPORATION OF INDIA

VGP VIDEO VISION OF INDIA

VGP SOLAR ENERGY OF INDIA

**VGP SQUARE,**

**Saidapet, Madras-600 015.**

PHONE : 442333

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றுமோர் சிறப்பான பேருந்து சுற்றுலா



## ஒவ்வொரு சனி, ஞாயிறும்

நேர்த்தியான கைத் திறனால் படைக்கப்பட்ட கலை அழகும், வசீகரமும் கூடிய தமிழர் பண்பாட்டின் கேந்திரங்களாய் விளங்கும் பழம்பெரும் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் முதலியவைகளைக் கண்டு களியுங்கள்.

● சென்னை ● மயிலாடுதுறை (மாயூரம்) ● வேளாங்கண்ணி ● நாகூர் ● திருநள்ளார் ● சிதம்பரம் (இரவு தங்குதல்) ● வைதீசுவரன் கோயில் ● பிச்சாவரம் ● பாண்டிச்சேரி ● சென்னை.

---

புற: சனிக்கிழமை தோறும் காலை 6.30

திரும்புகை: ஞாயிறு இரவு 8.30

---

சனிக்கிழமையன்று திருநள்ளார் சனீஸ்வரர் தரிசனம் சிறப்பானது.

தனி அறை வசதியுடன் ரூ. 175/-

இருவர் அறை ரூ. 150/-

---

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்ற பேருந்து சுற்றுலாக்கள்:

- 7-நாள் தமிழ்நாடு சுற்றுலா
- 7-நாள் தென்னிந்திய சுற்றுலா
  கட்டணம் ரூ. 680/- இருவர் அறை
  ரூ. 750/- தனி அறை
- தினசரி சுற்றுலா திருப்பதி சென்று திரும்ப காலை சிற்றுண்டி மற்றும் திருமலையில் தங்கும் வசதி(தனிக் கட்டணம் இல்லாமல்)
  கட்டணம்: சொகுசு பேருந்து ரூ. 105/-
  குளிர்சாதன பேருந்து ரூ. 130/-
  (சிறப்பு தரிசனத்திற்கான ரூ. 25/- உட்பட)
- தினசரி சுற்றுலா
  காஞ்சிபுரம்–திருக்கழுக்குன்றம்–மாமல்லபுரம்
  கட்டணம்: சொகுசு பேருந்து ரூ. 40/-
  குளிர்சாதன பேருந்து ரூ. 55/-
- சென்லன நகர சுற்றுலா
  கட்டணம்: ரூ. 25/-

குழந்தைகளுக்கும், குழுக்களுக்கும் சிறப்புச் சலுகை

---

டிக்கட்டுகள் கிடைக்கும் இடம்:

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக
   விற்பனை அலுவலகம்
   143, அண்ணா சாலை,
   சென்னை-600 002
   தொலைபேசி: 849803
2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக
   விற்பனைக் கவுண்டர்
   விரைவு பேருந்து நிலையம்
   சென்னை-600 001.
   தொலைபேசி: 25982




**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட்**
ஷிவாலயா பில்டிங்
16, கமாண்டர்-இன்சீப்-சாலை சென்னை 600 105.
தொலைபேசி: 89581/1/3 கேபிள்: தமிழ்டூர் டெலக்ஸ்: MS 7575

ARIES DIPR/4545/82 TML

Co-optex
HANDLOOMS

# Co-optex Silkonza Sarees

Flowers. Stripes. Checks. In pale and dark colours. Arresting. Dominating Genial outlooks.



With best compliments from :

# BALU METAL INDUSTRIES

Manufacturers of:

**Shankar Brand Stainless Steel**
**Hospital Appliances, Utensils, Drums,**
**Barrels Etc.**

**Exporters & Importers**

Sole Proprietor R. LAKSHMANAN
81, Hood Wharf, Waltax Road,
Madras-600 001.

Phone : 31736
34562
Resi : 72841

Cable : BALUMETAL

WITH BEST COMPLIMENTS FROM :

V

# M. A. HAKEEM

Dealers of all kinds of Chemicals & Manufacturers of
Yarn Waste

74, PERAMBUR HIGH ROAD,
MADRAS-600 012.

Phone : Offi : 664364
Resi : 666800

PAARI ACHAKAM, 66, BROADWAY, MADRAS-600 001.